மு.சிவலிங்கம்



# மலைகளின் மக்கள்

# மலைகளின் மக்கள்

[சிறுகதைத் தொகுப்பு]

மு. சிவலிங்கம்

இளவழகன் பதிப்பகம்
4, இரண்டாவது தெரு,
ஆண்டவர் நகர், கோடம்பாக்கம்
சென்னை-600 024.

மலைகளின் மக்கள்
முதற் பதிப்பு : நவம்பர், 1991
(C) மு. சிவலிங்கம்

இலங்கையில் வெளியீடும் விற்பனை உரிமையும்,

குறிஞ்சி வெளியீடு
129/25, ஜெம்பட்டா வீதி,
கொச்சிக்கடை,
கொழும்பு-13.

அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்,
41, சூரப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | MALAIGALIN MAKKAL |
| Language | : | Tamil |
| Written by | : | M. SIVALINGAM |
| Copy right of | : | Author |
| Published by | : | Elavazhagan Pathippagam<br>Madras-600 024. |
| First Edition | : | November 1991 |
| Types used | : | 10 Point |
| Number of pages | : | 140 + VIII = 148 |
| Number of copies | : | 1200 |
| Printed by | : | Sri Gomathi Achagam,<br>Madras-600 005 |
| Wrapper designed by | : | V. KARUNANITHY |
| Subject | : | Short stories collection |
| Price | : | Rs. 20.00 (INDIA) |

# முன்னுரை

எனது சிறுகதைகள் சராசரி கதைப் பிரியர்களின் பொழுதுபோக்கு வாசனைக்காக எழுதப்பட்டவைகளாக இருக்கக் கூடாது—என்று விரும்புகின்றேன்.

அன்று சீர் கெட்ட தென்னிந்திய பொருளாதார அமைப்பில் சிக்குண்டு, ஜெமீன்தார்— மிராசுதார் பண்ணையார்— நிலப்பிரபுக்கள் ஆகிய சக்திகளின் கொடுமைகளில் நசுக்கப்பட்டு, கூலி விவசாயிகளாக— பண்ணை அடிமைகளாகப் பணி புரிந்து வாழவே முடியாமல் வறுமையையும் கண்ணீரையும் மடியில் கட்டிக் கொண்டு வாழ்வைத் தேடி இலங்கை, மலேஷியா, பீஜித்தீவு, தென்னாபிரிக்கா என்று சிதறியோடிய மக்களில் ஒரு பகுதியினரின் 165 ஆண்டு கால வரலாற்றில் நான் கண்ட ஜீவாதாரப் பிரச்சினைகளையும், அம்மக்களின் தேசிய அந்தஸ்து, அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சி இவைகளின் நிலைமைகளைப் பற்றியும் எனது கதைகளில் நான் தொட்டுக் காட்டியிருக்கும் உண்மைகள்... இன்றைய கால கட்டத்தில் மக்கள் வரலாறு படைக்க விரும்பும் சமூக சிந்தனையாளர்களுக்கும், இந்த மக்களை வழி நடத்த முன்னே வரும் உண்மையான இளந்தலைவர்களுக்கும், இந்த மக்களையே பகைப் புலனாக வைத்து கதை எழுதும்-எழுதிப் பயிலும் அகில இலங்கை எழுத்தாளர்களுக்கும் உதவி புரிந்தாலே போதுமானது.

இந்த எனது ஆசைகள் நிறைவேறினால் நான் வழி வந்த என் சமூகத்தின் வளர்ச்சிக்கு நானும் ஒரு துளி பங்கை யளித்தவன் என்று பெருமையடைவேன்.

எனது சிறுகதைத் தொகுப்பு ஒன்றை எப்படியும் உருவாக்கியே தீருவேன் என்று உழைத்த என் அருமை நண்பர், கலைஞர் மாத்தளை— கார்த்திகேசு அவர்களுக்கும், என்னை இலக்கிய உலகில் வளர்த்தெடுத்த அண்ணன் கார்வண்ணன் (திரு. எஸ். எம். கார்மேகம்— வீரகேசரி) அவர்களுக்கும்,எனது சிறுகதை தொகுப்பொன்று வெளி வருவதில் ''தாய்மையின் பெருமை'' கொள்ளும் எனது இலக்கிய வழித்துணை திரு. தெளிவத்தை எஸ். ஜோசப் அவர்களுக்கும், எனது பள்ளிக்கூட பாடப் புத்தகத்தில் என் சமூகத்தின் கண்ணீரையும் கொட்டி நனைத்துக் காட்டிய இரு விழிகளாம் ஆசிரியர்கள் இரா. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் இருவருக்கும், அந்தத் தொகுப்பை உருவாக்கி, இலங்கை மலையகத் தமிழர்களின் நன்றிகளுக்கெல்லாம் பாத்திரமாகும் இலக்கிய நண்பர் வே. கருணாநிதி அவர்களுக்கும் என் நன்றியைக் கூறி, தேயிலையோடு தேயிலையாகத் தேய்ந்து போன என் பெற்றோருக்கு இந்தப் படைப்பைக் காணிக்கையாக்கு கிறேன்.

புதிய போட்மோா தோட்டம்
அக்கரப்பத்தனை
இலங்கை.

இவ்வண்ணம்
ஏ. சிவலிங்கம்

# வெளியீட்டுரை

அறுபது தொடக்கம் எழுபது வரையிலான காலக் கட்டத்தை ஈழத்துச் சிறுகதையின் பொற்காலம் என்று கூடச் சொல்லலாம். இந்தப் பொற்காலத்தில் ஏனைய் பிரதேச இலக்கியத்துக்கு இணையாக மலையகத்திலும் எழுத்தாளர்கள் பல நல்ல கதைகளைப் படைத்திருக்கிறார் கள். இக்காலக் கட்டத்தில் மலையக மண்வாசனை மிக்க காத்திரமான பல சிறுகதைகளைப் படைத்தவர்தான் மூ. சிவலிங்கம் அவர்கள்.

உள்ளத்தைத் தொட்டு உலுக்கும் உயர்ந்த சிறுகதைகள் சிலவும், சமுதாய நோக்கும் யதார்த்தத் தெளிவும் உத்திச் சிறப்பும் அழகும் அழுத்தமும் கொண்ட சிறுகதைகள் சிலவும் இத்தொகுதியிலே இடம் பெற்றிருக்கின்றன. ஆத்ம தரிசனம் காட்டும் அனுபவ வெளியீடுகளே இவரது கதைகள். இவருடைய சிறுகதைகளில் மனித நேயம், சமூக நோக்கு என்ற அம்சங்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

இச்சிறுகதை நூலை வெளியிட உதவிய பதிப்பகத் தாருக்கும், தம்பி வே. கருணாநிதி அவர்களுக்கும் நன்றி வணக்கம்.

129/25, ஜெம்பட்டா வீதி,
கொச்சிக்கடை
கொழும்பு-13.

மாத்தளை கார்த்திகேசு
குறிஞ்சி வெளியீடு

# பதிப்புரை

எங்களது ஐந்தாவது வெளியீடாக எழுத்தாளர் திரு. மு. சிவலிங்கம் அவர்களின் சிறுகதைகள் சில 'மலைகளின் மக்கள்' என்ற பெயரில் தொகுப்பாக வெளி வருகின்றது.

திரு. மு. சிவலிங்கம் அவர்கள் ஈழத்துத் தமிழ் வாசகர்களால் பல்லாண்டுகளாக அறியப்பட்டவர். ஈழத்துத் தமிழ்த் தினசரிகளில் இவருடைய பெரும்பாலான படைப்புக்கள் வெளி வந்திருக்கின்றன. தொடர்ந்தும் எழுதி வரும் இவரது படைப்பாற்றலை தமிழக-ஈழ சிறுகதை வாசகர்கள் இத்தொகுப்பின் மூலம் உணர்ந்து கொள்வதோடு மேலும் பல தொகுப்புக்கள் வெளிவர ஆதரவு தருவார்கள் என நம்புகின்றோம்.

கொழும்பு குறிஞ்சி வெளியீட்டின் உரிமையாளர் திரு. மாத்தளை-கார்த்திகேசு அவர்களது ஆதரவுடன் இளவழகன் பதிப்பகம் இந்நூலை தமிழகத்தில் வெளியிடுகின்றது. இந்நூல் வெளியீட்டில் உதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் மற்றும் ஊழியர்கள், கவிஞர் நெ. அ. பூபதி, டாக்டர் இராம. சுப்பிரமணியன் ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி!

கோடம்பாக்கம்
சென்னை-24

**வே. கருணாநிதி**
இளவழகன் பதிப்பகம்

# உள்ளே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பேப்பர் பிரஜைகள் | 1 |
| 2. | மதுர கீதம் | 14 |
| 3. | நிரந்தரம் | 26 |
| 4. | காகமும் நரியும் | 38 |
| 5. | அலவன்ஸ் லேபரர் | 48 |
| 6. | இருள் | 55 |
| 7. | ஞானபிரவேசம் | 65 |
| 8. | வல்லமை தாராயோ.... | 72 |
| 9. | எனக்கு ஒரு மயக்கம் | 84 |
| 10. | அந்தரங்கம் கேவலமானது | 94 |
| 11. | ஒரு பிடி தேயிலை | 105 |
| 12. | என்னப் பெத்த ஆத்தா... | 117 |
| 13. | மலைகளின் மக்கள் | 136 |

# பேப்பர் பிரஜைகள்

இன்றைய இரவு விடிந்தால்...நாளை சுப்பையா கொழும்புக்குப் பயணம்!...

இரவு முழுக்க பார்வதியம்மாள் தூங்கவேயில்லை. "நான் வளத்த செல்லக்கண்ணுக்கு உத்தியோகம் கெடச்சிருக்கு! கொழும்பு தொறை முகத்துல கிளாக்கர் வேல... இந்தத் தோட்டத்துக் கணக்கப்புள்ள ஐயாவை... நானும் பாத்துக்கிறேன் என் மவன் படிக்கிறதப் பாத்து கேலி பண்ணினாரே...? அவருக்கிட்டேயே போயி எம்மவனை பயணஞ் சொல்ல வைக்கிறேன்...!" இப்படி அந்த தாய் உள்ளம் மகனுக்கு உத்தியோகம் கிடைத்து விட்ட பெருமையில் 'வீம்பு' பேசிக் கொண்டிருந்தது உண்மைதான்.

சாதாரண ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன் படித்து, நன்றாக உடுத்திச் செல்வதைப் பார்ப்பதில் தோட்ட உத்தியோகஸ்தர்கள் ரொம்பவும் சங்கடப் படுவார்கள்.

"லயத்துப் பொடியனை பாரு?" என்று ஏளனமாக கதைப்பார்கள்.

சுப்பையா நகரப் பாடசாலையில் படிக்கும்போது அவனை ஏற இறங்கப் பார்த்துப் பற்களை அரைத்தவர்கள் பல பேர்கள் அந்தத் தோட்டத்தில் இருந்தார்கள்.

"கூலிக்காரன் மகன் படிச்சி தொரையாகப் போறானாம்... பாப்பமே..."

இப்படி இகழ்ச்சிகள் இருந்தும் சிவனாண்டியும் பார்வதியம்மாளும் சளைத்தார்களில்லை. "சுப்பையா...நல்லா படிச்சி... நம்ம தோட்ட தொரை மாதிரி...சப்பாத்துப் போட்டு தொப்பி வைச்சி...நீட்ட கால் சட்டை போடணும் அவனை "சாமி" "தொரை"ன்னு எல்லோரும் சொல்லணும்!" இப்படி உள்ளூர மகிழ்ந்து கொண்டார்கள். அந்த மகிழ்ச்சியில் எத்துணை இலட்சியம்—வஞ்சம்—வைராக்கியம்...! பிறந்தது முதல் சாகும் வரை தொப்பி சப்பாத்துப்போட்டவர்களையெல்லாம் 'தொரை'யென்றும் 'சாமி'யென்றும் கௌரவித்து, கூனி, குறுகி சலாம் போட்டு வந்த பரம்பரையில் உதித்த சிவனாண்டிக்கும் பார்வதியம்மாளுக்கும் "ஏன் தங்களுக்கென ஒரு சொந்தமான ஒரு 'தொரை' இருக்கக் கூடாது? என்று எண்ணி வைராக்கியம் பூண்ட அவர்களது எண்ணம் ஈடேறாமலா போனது? இதோ சுப்பையா! தொப்பி, சப்பாத்து கால்சட்டை அணிந்த தொரை!

தங்களை காலமெல்லாம் அடக்கி ஆண்டு வந்த துரைத்தனத்தார்களுக்கும்—அந்த துரை வர்க்கங்களுக்கும் சவால் கொடுக்கு முகமாகத் தங்களது சுப்பையாவின் உத்தியோகத்தைக் காட்டினார்கள்...அவன் ஒருகுமாஸ்தா! துறைமுக குமாஸ்தா....நாளை கொழும்பு நகரத்தில் சுப்பையாவும் பலருக்கு தொரை! அந்த தொழிலாளத் தம்பதிகள் தங்கள் சாதனைக் குளத்தில் தமுக்காளம் அடித்து மிதந்தார்கள்.

விடிவு காலம்...!

ஆமாம் விடிந்துவிட்டது. இன்று சுப்பையா கொழும்புக்கு பயணமாகவேண்டும். பார்வதியம்மாள் விபூதி தட்டில் சூடம் கொளுத்தி உத்தியோகம் பார்க்கப்போகும் மகனுக்கு ஆரத்தி எடுத்தாள். மூன்றுமுறை வலம் வந்து விபூதி

தட்டை கீழே வைத்தாள். கண்களில் பொலபொலவென கொட்டிய கண்ணீரை சேலை முந்தானையால் துடைத்து மகிழ்கிறாள். மீண்டும் விபூதி தட்டில் சூடத்தைக்கொளுத்தி ஏந்துகிறாள். சிவனாண்டி தலைப்பாகையைக் கழற்றி கக்கத்தில் வைத்துக் கொண்டு வணங்குகிறான். இருவருமாக சுப்பையாவுக்கு மாறி மாறி விபூதி பூசினார்கள். தோட்ட சீவியத்தில் கால முழுவதும் இரத்தக் கண்ணீர் வடித்த அவர்கள் இன்றுதான் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். பார்வதியம்மாள் தன் செல்வமகனை வாரி முத்தமிட்டாள்.

‘‘சுப்பு! கொழும்புக்கு போனதும் போஸ்ட்காடு போடு.. பெத்ததிலிருந்து இன்னக்கித்தான் ஒன்னை பிரியிறேன்...’’ அத்தாயின் குரல் கரகரக்கிறது. ‘‘ஆமா அண்ணா...! கொழும்புக்குப் போனதும் கடுதாசி போட்டப் பிறகுதான் வேறவேல பாக்கணும்’’—இது சுப்பையாவின் அன்புத் தங்கையின் கட்டளை. பருவத்தோடு கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கும் அந்தக் குமரியின் வாழ்வெல்லாம் சுப்பையாவின் உத்தியோகத்தில்தான் தங்கியிருக்கிறது.

சுப்பையாவுக்கு பக்கத்து வீட்டு மங்களம், அடுத்த லயன்களிலிருக்கும் சில வேண்டியவர்களெல்லாம் வந்து விபூதி வைத்து நல்வாக்குகள் கொடுத்தார்கள். சிலர் வெற்றிலையில் இரண்டு, மூன்று ரூபாய் வைத்துக் கொடுத்தனர். அந்த தோட்டத்தில் ஒழுங்காகப் படித்து, ஒரே தடவையில் ‘பத்தாம் வகுப்பு பாஸ்’ பண்ணியவன் சுப்பையா மாத்திரமே யாகும். அவன் தொழிலாளியின் மகன் என்பதால் தோட்டங்களில் உத்தியோகம் வழங்க மறுத்தார்கள்.வெள்ளைக்காரன் காலத்திலிருந்து தோட்டங்களில் ‘குடும்பப் பின்னணி’ பார்க்கும் ஓர் வழமை இருந்தது. இந்த வழமையை உருவாக்கியவர்கள் அன்று தோட்டங்களில் உத்தியோகம் பார்த்த தமிழர்களேயாகும்.

தொழிலாளியின் மகன் தோட்ட நிர்வாகத்தில் வேலைக்கு வந்து விட்டால் அவன் தொழிலாளிக்கு

சப்போர்ட் பண்ணுவான் என்ற உண்மையை அன்றைய வெள்ளைக்கார நிர்வாகிகள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு வருசங்கள் தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்தில் உத்தியோகம் பெற முடியாத சுப்பையாவுக்கு இன்று கொழும்பு தலைநகரத்தில்—அதுவும் துறைமுகத்தில் வேலை கிடைத்திருக்கிறது. தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்கள். ஒரு தொழிலாளியின் மகனுக்கு உத்தியோகம் கிடைத்ததில் மற்ற எல்லாத் தொழிலாளர் களும் பெருமைப்பட்டார்கள். எல்லோருமாக சுப்பையாவை வாழ்த்தியனுப்பினார்கள்.

சுப்பையா பெட்டி, படுக்கையோடு புறப்பட்டான். அவனது அன்புத் தெய்வம் பார்வதியம்மாள் காட்டு ரோட்டு காளி கோயில் வரை வந்து வழியனுப்பி வைத்தாள்

அவளது நெஞ்செல்லாம் அந்த தேயிலைக் கொழுந்து போல் பூத்துத் தளிர்ந்தது! "எம்மவனை கொழும்புக்கு அனுப்பி வச்சுட்டேன்; நான் இப்போ...ஒரு கௌாக்கரின் தாய்!" அவள் பூரித்துப்போனாள். வழியில் கொழுந் தெடுத்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் அவளையும் சுப்பையாவையும் மாறி, மாறி பார்த்த காட்சி!— சிவனாண்டி பெட்டியைத் தூக்கிக் கொண்டு வீறு நடை போட்ட அழகு!

பார்வதியம்மாளை எல்லாரும் வழி மறித்து—வழி மறித்து விசாரித்தார்கள். "ஆமாங்க...தம்பி...கொழும்பில கௌாக்கர் வேலைக்குப் போவுது..." நெஞ்சு நிறைய பதில் சொன்னாள். அதில் கர்வமும் தொனித்திருந்தது.

அவள் முச்சந்தியில் எவருக்கும் தெரியாமல் ஒரு பிடி மண் அள்ளிக் கொண்டு போனாள். பல பேர்களின் காலடி மண்! மகனை நினைத்து 'திட்டி சுத்தி' போடுவதற்கு...!

சிவனாண்டி தோட்டம்பழம் முதல் புளிச்சோறு வரை தோல் பெட்டியில் அடைத்துப் பெருஞ்சுமையாய் சுமந்து கொண்டு, சுப்பையாவுக்கு முன்னால் தொங்கு தொங்கு வென ஓடுகிறான். அவனுக்கு பழைய நினைவும் வருகிறது... இந்த மாதிரி பெட்டி நிறையப்பாரத்தைச் சுமந்து கொண்டு எத்தனை துரைமார்களுக்கு... இப்படி தொங்கு நடை நடந்திருப்பான்...! இன்று தூக்கிச் செல்லும் சுமையில் புது தெம்பு—தெளிவு—பெரு மகிழ்ச்சி எல்லாமே நிறைந் திருக்கிறது!

சுமையோடு ஓடி நடக்கும் சிவனாண்டி இடைக் கிடையில் ''தம்பி கவனம்! சம்பாத்து வழுக்கும்!'' என்று தேவையற்ற நிதானங்களையெல்லாம் பிதற்றிக் கொண்டு போகிறான். வாழ்க்கையில் எதை அடைய நினைத்தானோ அதை அடைந்து விட்ட எக்களிப்பு. ''நான் பெத்த மகன்... தொரை!...அவனுக்கு நான் பெட்டி சுமக்கிறேன்...! மாரி ஆத்தா! ஒனக்கு முன்னூறு தேங்கா ஓடைக்கிறேன்...'' அவனது வாய் பேசாததை நெஞ்சம் பேசி மகிழ்ந்தது.

ஓட்டமும் நடையுமாகிக் கொண்டிருக்கும் சிவனாண்டி யின் மூளையை இன்னொரு விசயம் குடைந்து கொண்டி ருந்தது....

''தம்பி சுப்பு...! வேல கெடைச்சது பெரிய விசயமில்ல... நம்ம பிரஜாவுரிம .. பத்திரத்தப் பாத்து... எவனாவது பெரிய அதிகாரி மேட்டுக்கும்...பள்ளத்துக்கும் இழுத்துப் புட்டான்னா... போச்சு...! நீ தைரியமா பதில் சொல்லணும்...''

''அத பத்தியெல்லாம் மண்டையப் போட்டுக் கொழப் பாதீங்க... நான் சமாளிச்சுக்குவேன்...'' சுப்பையா பதில் சொன்னான்.

இருவரும் அட்டன் புகையிரத நிலையத்தை வந்தடைந் தார்கள். சுப்பையாவை ஏற்றிச் செல்வதற்கு 'உடரட்ட

மெனிக்கே' கோச்சு சிங்கமலை சுரங்கத்திலிருந்து கதறிக் கொண்டு ஓடி வருகிறது. சிவனாண்டி 'சேப்பு' நிறைய விருந்த சில்லறைகளையெல்லாம் கொடுத்து கொழும்பு கோட்டைக்கு ஒரு டிக்கட்டும், தனக்கு ரயிலடிக்குப் போகும் 'பிளட்போம்' டிக்கட்டும் வாங்கிக் கொண்டான்.

—வண்டி வந்து நின்றது.

மகனைப் பிரியப் போகும் நிலையில்... சிவனாண்டி தேம்பினான். பிள்ளையைப் பெற்றதிலிருந்து இன்றுவரை பிரிந்தது இல்லை. இருவரும் கட்டிப்பிடித்துக் கொண்டனர்.

"சாமி! கவனமாப் போயிட்டு வா கண்ணு! காசு பத்தரம்... உடுப்பு பெட்டி கவனம்... கோச்சியில சாப்பாட்டுக்கட இருக்கு... சாப்பிட்டுக்கிட்டே போவணும் ... போயி...ஒடனே தந்தி அடிக்கணும்... இல்லாட்டி ஒங்கம்மா... ஒப்பாரி வச்சிக்கிட்டே இருப்பா..."

இரண்டு கரங்களையுந் தூக்கி மகனை வணங்குகிறான். நெஞ்சை உருக்கும் காட்சியால் வண்டி நகர்கின்றது.

சிவனாண்டி வீட்டை நோக்குகிறான்... பிள்ளையைப் பிரிந்த வேதனையிருந்தாலும் பெருமை குறையாமல் அந்த தந்தையுள்ளம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

சுப்பையாவை சுமந்து கொண்டு அவனுக்கு புதுவாழ்வு அளிக்க அந்த எக்ஸ்பிரஸ் கர்ணகடூரமாகச் சத்தமிட்டுக் கொண்டு பறந்தது.

உருண்டோடும் வண்டிச் சக்கரத்தைப் போல அவனது உள்ளக்கிடங்கில் கொப்புளித்த எண்ணக் குமிழிகள் நதியாகப் பெருக்கெடுத்தன.

நான் பிறந்து வளர்ந்து பெரியவனாகி பள்ளி வாழ்க்கையில் என் பாதி வாழ்க்கையைக் கழிக்கும் வரை, என் கஷ்ட நஷ்டங்களைச் சுமந்த என் பெற்றோர்கள் இன்னுமா எனக்கு சுமைதாங்கிகளாக இருக்க வேண்டும்? வேண்டாம்!

அந்தப் பாவத்துக்குரியவனாக நான் இனிமேலும் இருக்க விரும்பவில்லை. காலமெல்லாம் மழை—புயல் பாராது... கண்டவர்களது வசை மொழிகளுக்கும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் செவிமடுத்து, உழைத்து என்னை 'இந்த நிலைக்கு ஆளாக்கி விட்ட அவர்களுக்கு நான் தொடர்ந்து சுமையாகவிருந்தால் என்னைப் போல ஒரு கேவலமானவன் எங்குமே இருக்க மாட்டான்.

—அந்தக் குறையைத்தான் இன்றோடு தீர்த்து விட்டேனே....

கொட்டும் மழையில்— கொடுமையான குளிரில்— பனியில் என்னைப் பெற்றவள், முதுகு வளைய கூனிக்குறுகி காடு மேடெல்லாம் சுமந்து செல்லும் ஒரு கூடை கொழுந்தைவிட நான் பெரும்பாரமாக இருந்திருக்கிறேன்.

என் வாழ்க்கையை வளப்படுத்த அவள் பட்டபாடு களையும், கங்காணி, கணக்கப்பிள்ளை, துரை ஆகியவர் களிடமிருந்து வாங்கிய வசை மொழிகளையும் சொல்லியழு தாலுமே என் சுமையெல்லாம் குறைந்து விடாதா...?

என் தந்தை என் படிப்பு செலவுக்காக எத்தனை எத்தனை பேர்களிடம் கையை நீட்டியிருப்பார்...? என் தாயின் கழுத்தில் கிடந்த அந்த தாலி மணிகள் இரண்டை யும் எத்தனை முறை கழற்றி அடகு வைத்து எனக்கு ரயில் சீசன் டிக்கட் வாங்கிக் கொடுத்திருக்கிறார்...?

என்னைப் படிக்க வைத்து அழகு பார்க்க அவர் என்னென்ன செயல்களெல்லாம் புரிந்திருக்கிறார்! இவர்கள் வாழ்க்கையில் ஓர் விடிவுகாலத்தை உண்டாக்கத்தானே இன்று வேலைக்குப் போகிறேன். என் குடும்ப சுமையெல் லாம் இந்தக் குமாஸ்தா வேலையில்தான் இறங்கப் போகிறது...! ...என் தொழிலில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டுதான் அவர்கள் இனிமேல் குடும்பம் நடத்த வேண்டும்.

என் அன்புத் தங்கையின் திருமணம் எனது கரங்களில் தான் இருக்கிறது... என்னைப் படிக்க வைக்க வேண்டுமென் பதற்காக அவளும் கூலிக்காக கொழுந்துக் கூடையை மாட்டினாள்... வயது வந்த அவளுக்கு ஒரு வரன் தேடி ஜாம்... ஜாம் என்று கல்யாணத்தை முடித்து வைக்கப் போகும் இந்த அண்ணனைப் போல பாக்கியசாலி யார் இருக்க முடியும்?

என் தம்பிகளும், சின்னத்தங்கைகளும் படித்து வளர்ந்து, ஆசிரியராக... கணக்காளராக... உயர்ந்த பதவி களை வகிக்கும் காலம் வரத்தான் போகிறது... நான் கொழும்பு நகரத்திலே வசதி உள்ளவனாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டு. என் குடும்பத்தை, தோட்டத்தை விட்டே வெளியில் எடுத்து விடவேண்டும்! இந்த தோட்டத்து கூலி வாழ்க்கை முறை இனி வேண்டாம்...!

ஒரு சாதாரண தோட்டக் கூலியின் மகனை இந்த நாட்டில் பரந்து வாழ்வதற்கு வழி வகுத்துக் கொடுத்த என் பெற்றோர்களுக்கு நான் செய்யும் கைம்மாறு இது வாகத்தான் இருக்க முடியும்...

—இப்படி அவனது எண்ணச் சக்கரம் அந்த எக்ஸ்பிரஸ் வண்டியைவிட வேகமாக ஓடியது.

சுப்பையா சோம்பல் முறித்து நீண்ட பெருமூச்சு விட்டான்.

காலை பதினொரு மணிக்கு அவனைச் சுமந்த வண்டி மாலை நான்கு மணியளவில் கொழும்பு கோட்டையில் இறக்கி விட்டது.

சுப்பையா தான் புதிதாக வாழப் போகும் சொர்க்க பூமியில் காலடி வைத்ததும் தன்னை மறந்தான். தன் குடும்பத்தை மறந்தான். அவனது கவலைகளெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன. என்ன... நகர வாழ்க்கை! காலமெல்லாம் பட்டினி கிடந்தே வாழ்க்கையை ஓட்டலாம்

போலிருக்கு...! 'கெட்டும் பட்டணஞ் சேர்' என்று சும்மாவா சொன்னார்கள்... அவன் உள்ளூர மகிழ்ந்து போனான். நானும் இனிமேல் ஒரு பட்டினவாசி...! கொழும்பு துறைமுகத்தில் ஒரு குமாஸ்தா...! ஒரு தொரை...! அவன் ஆண்மை நிமிர்ந்தது...

துறைமுகத்தில் சுப்பையாவைக் கண்ட லாரிகளும் சரக்கு வண்டிகளும் மூலைக்கொரு பக்கமாக ஓடிக் கொண்டிருந்தன. பெரிய பெரிய 'கிரேன்'களெல்லாம் புதிதாகவந்த சுப்பையா தொரைக்கு வணக்கம் தெரிவிப்பது போல் தாழ்ந்து பணிந்தன...! எங்கிருந்தெல்லாமோ வந்த கப்பல்கள் தங்கள் சுமைகளை இறக்கிக் கொண்டிருந்தன. சுமைகள் குறையும் போது அவைகள் கூட அந்த ஆழ்கடலில் எவ்வளவு அழகாக குதியாட்டம் போடுகின்றன...!

ஆமாம்! சுப்பையாவும் சிறு நொடியில் அவ்வாறு துள்ளிக் குதிக்கப் போகிறான்...

சுங்க இலாகா தலைமை காரியாலயம். அதன் நுழைவாயிலிருந்து முப்பது யார்வரை வேலைக்கு தெரிவு செய்யப்பட்ட கூட்டம் 'மார்ச்' பண்ணி நின்று கொண்டிருக்கிறது. முன்னுக்கு நின்றவர்கள் மகிழ்ச்சித் தவழ சுறுசுறுப்புடன் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். புதிய வேலைகளை 'பாரம்' எடுத்தவர்கள் 'பியூன்' பின்னால் தங்கள் காரியாலயங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஐந்து ஆட்களுக்குப் பிறகு சுப்பையா தன் வேலை பொறுப்பை 'பாரம்' ஏற்கும் நேரம் நெருங்கி விட்டது.

அவன் தான் கொண்டு வந்துள்ள பிரஜாவுரிமை பத்திரத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். அந்தப் பத்திரத்தை உள்ளே அமர்ந்திருக்கும் உயர் அதிகாரி ஏற்றுக் கொண்டு விட்டால்... உலகமே அவனது

காலடியில்...! அதை வீட்டிலே தேடிப்பிடித்த சம்பவத்தை மீட்டிப் பார்த்தான்...

அம்மா ஒரு பக்கமும் அப்பா ஒரு பக்கமும் தேடி களைத்து விட்டார்கள். ''எந்தப் பொருளையும் அளவுக்கு அதிகமாகப் பத்திரப்படுத்தவும் கூடாது.. கடைசியில் தேடி மாயாது...'' என்று முனுமுனுத்த சிவனாண்டி கடைசி முயற்சியாக பரணில் வைத்திருந்த தகரப் பெட்டியை எடுத்துத் திறந்து பார்த்தான். உள்ளே பழைய கடதாசி கட்டுகள்... ஒரு மூலையில் கடதாசிகளை எலிகள் கடித்து, குதறி கூடு கட்டியிருந்தன.

தகரப் பெட்டியைக் குப்புற கொட்டினான்சிவனாண்டி. அன்று பிரசவித்த எலிக்குஞ்சுகள் நான்கு அப்படியே கிடந்தன... சிவனாண்டி கூடு கட்டிக்கிடந்த கடதாசி துண்டுகளைச் சேர்த்துப் பார்த்தான். அதுதான் சிட்டிசன் சிப்பு! 'முருகா!'' என்று தலையில் கையை வைத்தான்.

சுப்பையா துண்டுகளைச் சேர்த்துப் பார்த்தான். அந்தப் பத்திரத்தில் பார்வதியம்மாள், சிவனாண்டி, சுப்பையா, ஆகிய மூவருடைய பெயர்கள் இருக்கவேண்டும். மற்ற பிள்ளைகள் இந்தப் பத்திரம் கிடைத்த பிறகு பிறந்தவர் கள்... சுப்பையா பெயர்கள் இருக்கும் கடதாசி துகிலைத் தேடினான். அந்தப் பகுதியைத்தான் எலிகள் சாப்பிட் டிருக்க வேண்டும்... சாட்சி சொல்வதற்காக, அதிர்ஷ்ட வசமாக ஒரு பகுதி மாத்திரம் குற்றுயிராகக் கிடந்தது!

''இன்டியன் பாகிஸ்தானி ரெசிடன்ட் சிட்டிசன் சிப்'' இன்னுமொரு கடதாசி துகிலில் கமிஷனரின் கையொப்பம் இருந்தது. மற்ற கடதாசி துண்டுகளையெல்லாம் சேகரித்துக் கொண்டான். அவன் கண்களுக்கு கடவுள் தெரிந்தது போல் 'சீரங்கன் மகன் சிவனாண்டி' என்ற பெயர் காணப்பட்ட பகுதியும் கிடைத்தது. இந்த கடதாசி துண்டுகளையெல்லாம் ஒரு 'பொலித்தீன்' உறையில் பத்திரமாக வைத்துக்

கொண்டு பெருமூச்சு விட்டான். 'பிரஜாவுரிமை பத்திரம்' தொலைந்து போனால் அல்லது அழிந்து போனால் புதிதாக நகல் எடுக்க முடியாத சட்டத்தையும் அவன் அறிந்திருந்தான்.

அந்த கடதாசி துகில்களோடுதான் இங்கு... இன்று வந்து நிற்கின்றான்.

''மிஸ்டர் சுப்பையா...!'' பியூன் சத்தமிட்டான். சுப்பையா உயர் அதிகாரியின் அறைக்குள் மிகவும் பணிவாக நுழைந்தான்.

''சிட்டவுன் மிஸ்டர் சுப்பையா...''

''தேங் யூ சேர்...''

சுப்பையாவின் கல்வி சான்றிதழ்களையும் விளையாட்டுச் சான்றிதழ்களையும் பார்வையிட்ட அதிகாரி அதிசயப் பட்டார்.

''நீங்கள் எல்லா பாடங்களிலும் விஷேச சித்தி பெற்றிருக்கிறீர்கள்! டைப்பிங் தெரியுமா?''

''தெரியும்.''

''வெரிகுட்! உங்கள் வேலைத் திறமைகள் திருப்தியாகக் காணப்பட்டால் 'செக்ரட்டரி போஸ்ட்' கிடைக்கவும் சந்தர்ப்பம் இருக்கிறது'' என்றார்.

சுப்பையா புஸ்ப விமானத்தில் பறந்தான்...

அதிகாரி தொடர்ந்தார்...

''உங்கள் தேசிய அந்தஸ்து...?''

''இலங்கை பிரஜை... தமிழர்.''

''நீங்கள் மலைநாட்டுத் தமிழராச்சே...! நீங்கள் பதிவு பிரஜை தானே...?''

''ஆமாம் பதிவு பிரஜை...''

''அப்படியென்றால் பத்திரத்தைக் காட்டுங்கள்...''

சுப்பையா தயங்கி... தயங்கி 'பொலித்தீன்' உறையை நீட்டி நடந்த விபரங்கள் யாவற்றையும் கூறினான். அவன் உடல் வியர்வையில் குளித்தது. அதிகாரி மின்விசிறியை மிடுக்கினார். சுப்பையாவின் கையிலிருந்த பேப்பர் துகில்கள் யாவும் காற்றில் பறந்தன.

உயர் அதிகாரி சிலையாக சமைந்திருந்தார்.

ஒரு நாட்டின் குடிமகனின் தேசிய அந்தஸ்தை இப்படி ஒரு விதத்திலும் அடையாளங் காட்ட வேண்டியிருக்கிறது! அவரது மனிதாபிமானம் மனதுக்குள்ளேயே எரிந்து சாம்பராகியது...

''வெரி சொரி... மிஸ்டர்... இது அரசாங்க உத்தியோகம். இந்த நாட்டுப் பிரஜைகளுக்குத்தான் இந்த வேலைகளை வழங்க முடியும். உங்களை இந்த நாட்டுப் பிரஜை என்று நிரூபிக்க தகுந்த சான்றுகள் போதாது... போய் வாருங்கள்...''

பியூன் இன்னொருவரை உள்ளே வரும்படி சத்தமிடுகின்றான்.

...அரைப் பைத்தியமாகி வெளியே வந்து கொண்டிருந்த சுப்பையாவின் உதடுகள் என்னவெல்லாமோ... உளறிக் கொட்டின.

ஏன் நான் மாத்திரம் இந் நாட்டின் ஏனைய பிரஜைகளைப் போல இல்லை...? எனக்கு மாத்திரம் ஏன் பத்திரத்தை வழங்கி பிரஜையாக்கியுள்ளார்கள்? எனக்கு மாத்திரம் ஏன் பேப்பரை கொடுத்துள்ளார்கள்? நான் ஒரு பேப்பர் பிரஜை...! பதிவு பிரஜை...! இந்த பிரபஞ்சத்திலேயே ''கடதாசி பிரஜைகள்'' ''பதிவு பிரஜைகள்'' என்று மகுடம் சூடப்பட்டு அவமானப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்தான் என் பரம்பரை...! என் பத்திரத்தை எலி கடித்துவிட்டது... நான் ஒரு எலி கடித்த

பிரஜை! என் பிரஜாவுரிமை பத்திரம் நனைந்து விட்டால்... நான் இந்த நாட்டின் நனைந்த பிரஜை...என் பத்திரம் கிழிந்து விட்டால்... நான் ஒரு கிழிந்த பிரஜை.... என் பத்திரம் எரிந்து விட்டால்... நான் ஒரு எரிந்த பிரஜை... அவன் பிதற்றல் ஓயவில்லை.

கொழும்பு வெய்யில் அவனை கொடுமையுடன் சுட்டெரித்தது. கப்பல்கள் ஓலமிடுகின்றன, அவைகள் மேல் உயரமான 'கிரேன்'களிலிருந்து சுமைகள் ஏற்றப் படுகின்றன.

□ □ □

(வீரகேசரி 10-02-1963 "சுமை தாங்கி" என்ற பெயரில்)

# மதுர கீதம்

அந்த மலைப்பாறையில் அமர்ந்தபடி ஒரு வெள்ளை மண்ணாங்கட்டியினால் கோடுகள் கீறிக் கொண்டிருந்தான் சீனி. அவனது இதயத்தடாகத்தில் கொந்தளித்த எண்ணக் குமிழிகள் இப்படி பலவாறு அவனது வாழ்வுச் சம்பவங்களை ஒன்றன்பின் ஒன்றாக உருண்டோடும் மலைச்சரளைகளென உதிர்த்துக் கொண்டிருந்தன...

அந்த, பெரிய குப்பைமேடு அந்த லயத்துக்கோடியில் தான் இருக்கிறது. பத்து வீடுகளை வரிசையாக்கிக் கொண்டிருக்கும் லயத்தின் குப்பைக் கூளங்களெல்லாம், அந்தக்கோடிப்புற குழியைநிறைத்துமேடாக்கிவிட்டிருந்தன. அந்தக் குப்பை மேட்டின் ஜீவசத்துக்களையெல்லாம் உண்டு கொழுத்து அதையே ஆக்கிரமித்து ஆதிக்கம் செய்து, பூத்துக்குலுங்கி, காய்த்துக் கனிந்து கொண்டிருக்கிறது ஒரு கொய்யாமரம்.

அந்த கொய்யாமரத்தின் உச்சிக்கிளையில் குரங்கைப் போல உட்கார்ந்து கால்களை ஆட்டி வரட்டுச் சத்தமிட்டுப் பாடிக் கொண்டிருக்கிறான் சீனி.

''ஆத்துக்கு அந்தப்புறம் காக்கா!—நான்
கல்யாணம் கட்டப்போறேன் சோக்கா!'

கொய்யாமரத்தின் எதிர்ப்பள்ளத்தில் ஓர் ஓடை. ஓடையின் மறுகரையில் ஒரு லயம், அது ஆத்து லயம் அங்கிருந்தும் அதே

பாட்டு மோகனராகத்தில் தென்றலோடு மிதந்து வருகிறது. மாரிக்குட்டி, 'கீச்சு'க் குரலில் அழகு காட்டி பாட்டோடு ஆட்டமும் போடுகிறாள்.

சீனி உச்சிக்கிளையில் சைக்கிள் ஓட்டுகிறான் மாரிக்குட்டியின் எதிர்ப்பாட்டு அவனை என்னவோ செய்ய, அவன் மேலும் மேலும் அந்த உச்சி மரக் கொப்பின் மேல் ஏறுகிறான். மாரிக்குட்டி சத்தமிடுகிறாள்.

''ஐய்யோ அதுக்கு மேலே ஏறாதே.''

''ஹூம், இன்னும் பாரு ஒசரப் போறேன்!'' சீனி குரங்காகவே மாறிவிட்டான். மாரிக்குட்டிக்கு கால் கூச்சம் எடுக்கிறது.

''சீனி கொரங்கோ...எறங்குடா கீழே'' சொந்த உணர்வுகள் உந்த சின்ன இதயம் மீறிட்டு அழுகிறது. சீனிப்பயல் கொய்யாப்பழத்தைப் பிடுங்கி வீசுகிறான்; அது கல்லிற்பட்டுச் சிதறுகின்றது. அவள் கைகளுக்கு அகப் படவில்லை.

''சீனி மாமோவ்! வூட்டுக்கு கொண்டு வாயேன்'' சீனிப்பயல் மரத்தை விட்டு இறங்கு முன் பாதி உயரத்தி லிருந்தே குப்பை மேட்டில் குதிக்கிறான். குப்பை மேடு அவனுக்கு பஞ்சு மெத்தை! அந்த சிற்றோடையைக் கடக்கும் மரப் பாலத்திலோடி மாரிக்குட்டிக்கு அழகழகாய் கொய்யாப்பழங்கள் கொடுத்தான்.

கொய்யாப்பழங்களை வாங்கு முன்னே மாரிக்குட்டி 'கோ'வென அலறிவிட்டாள்.குப்பை மேட்டில் தொண்ணூற் றொன்பது வீதம் கிடக்கும் கண்ணாடி ஓடுகளில் ஒன்று அவனது குதிக்காலைப் பதம் பார்த்துவிட்டது. ஆடறுத்த இரத்தமாக அந்த இஸ்தோப்புத்திண்ணையே நனைந்து விட்டது. மாரிக்குட்டி பாவாடைச் சீலையைக் கிழித்துக் கட்டினாள். அவன் 'குப்பை மேட்டுக் காலை' கழுவி அடுப்பு

ஒத்தடம் கொடுத்தாள். இந்த மாதிரி எத்தனையோ நாட்களில் குப்பை மேட்டுக் கண்ணாடி ஓடுகளுக்குத் தன் ரத்தப்பலியைக் கொடுத்த சீனி சிரித்தான். அந்த மாரிக் குட்டியை அணைத்து அவள் உச்சித் தலையில் முத்தம் மோந்தான்.

இருவரும் அடுப்பங்கரையில் அமர்ந்து கொண்டு கொய்யாப்பழம் தின்றனர். காலம் பள்ளத்தில் ஓடும் நதியாகிக் கொண்டிருக்கிறது. மாரியும் சீனியும் லயத்தைச் சுற்றி புளியங்கொட்டைபொறுக்குவதிலும், மாங்கொட்டை எத்துவதிலும் மாரியம்மா கோவிலில் போய் நொண்டி விளையாடுவதிலும் தோட்டத்து கொழுந்து லொறியை விரட்டுவதிலும் முன்னணியில் நின்றனர்.

சீனிப்பயலுக்கு அந்த நான்கு லயத்துப் பையன் களெல்லாம் ஒரே பயம். சீனியின் உத்தரவின்றி அந்த குப்பை மேட்டில் விழுந்து கிடக்கும் கொய்யாக்கனிகளை யாரும் பொறுக்கிவிட முடியாது. மாரிக்குட்டி கண்டு விட்டாலும் போதும் சீனிப்பயலிடம் போய் கயிறு திரித்து முடிச்சுப் போட்டு, அவிழ்க்க முடியாதுபோனால் வெட்டவும் சொல்லி விடுவாள். அதன் பிறகு சீனி குற்றவாளிகளின் மண்டைகளை உடைக்க, மண்டை உடைபட்டவர்களின் பிராது கிளம்பி பெரியவர்களின் வாய் வம்புகளை வளர்த்து, அவர்களில் யாருக்காவது மண்டை உடைக்கப்பட்டு பொலிஸ், கோர்ட்டு, நாடு என்றெல்லாம் ஏறி இறங்கிய காவியங்களும் பல உண்டு.

சீனிப்பயலால்தான் மாரிக்குட்டி கெடுறாள். இல்லை மாரிக்குட்டியால்தான் சீனிப்பயல் கெடுறான். இப்படி வாதி பிரதிவாதிகளின் தெருக் கூச்சல் அந்த லயத்துக் கும்பல் களிலிருந்து கிளம்பாத நாட்களே இல்லை. ஒன்றுபட்ட அவ்விரண்டு சிட்டு உள்ளங்களைப் பிரிவு படுத்தி தனித்து விட எத்தனையோ பெரிய சீவன்களெல்லாம் தலை எடுத்துப் பார்த்தன. எதுவும் சரிப்படவில்லை.

மாரியும் சீனியும் இப்படி நெருங்கிப் பழகுவதில் இரு வீட்டாருக்கும் புதினம் எதுவும் தென்படவில்லை. பதிலாக வாஞ்சைகள் வளர்ந்து கொண்டிருந்தன. அச்சின்னஞ் சிறுசுகளின் விளையாட்டு நேசத்தோடு சொந்த உறவும் சம்பந்தி வழியும் கூடவே இருந்தன. மாரிக்குட்டியின் அப்பா கூட "செல்லக் கலியாணம் செஞ்சுப்புட்டா என்னா? இல்லாட்டி நிச்சயத்தாம்பூலம் மாத்திக்கிட்டா என்னா?" என்று "என்னா" போடுவதில் அதிக அக்கறை எடுத்து வந்தார்.

குப்பை மேட்டை கோழிகள் கிளறின. பூச்சியும் புழுக்களும் அவைகளின் தேவலோகத்துத் தீனியாகிக் கொண்டிருந்தன.

மாரிக்குட்டி அப்பாவுக்கு சுட்டரொட்டியோடு தேயிலைச்சாயம் கொண்டு போகிறாள். அவளோடு சீனிப் பயலும் ஓடுகிறான்.

"சீனி மாமோவ்...!" மாரிக்குட்டி பாடத் தொடங் கினாள்.

"ஆத்துக்கு அந்தப்புறம் காக்கா!—நான்
கல்யாணம் கட்டப்போறேன் சோக்கா!"

சீனிப்பயலும் மூக்கை உறிஞ்சிக் கொண்டு நாய் சத்தம் போடுகிறான்.

"அப்படி ஆத்துக்கு அந்தப் புறம்...!
அப்படி ஆத்துக்கு அந்தப் புறம்...!"

அதல பாதாள ஒரு பள்ளத்தாக்கில்— காட்டருவியின் பயங்கர ஓலத்தில் அவர்களின் இன்பக் கூச்சல் மட்டும் எதிரொலியாய் எழும்பி மேட்டுத் தேரியில் காற்றோடு கலக்கின்றன. தேயிலைச் செடிகளில் பளிச்சிட்ட பனிநீரை இறைத்த வண்ணம் அந்த மலைப்பாதையில் ஓடுகின்றன அச்சிறுசுகள்...

நாட்களை வாரம் விழுங்கிய குற்றத்தால் மாதம் தண்டிக்க அந்த இரண்டையுமே உண்டு பெருத்தது வருசம்..

மாரிக்குட்டியை முன்னைப்போல சீனிப்பயலோடு சேர்ந்து விளையாட விடுவதில்லை. சீனிப்பயலுக்கும் ஒருநாள் உதை விழுந்தது. "நீ இனிமே மாரியோடு எங்கேயும் சேர்ந்து போகக் கூடாது." சீனியும் ஆரம்பத்தில் அழுதவன், இப்போதெல்லாம் குப்பை மேட்டிலிருந்து கொண்டு கொய்யாப் பழம் வீசுவதில் தவறுவதில்லை.

"அழகான கொய்யாப்பழம் தின்னேன் தின்னேன்" என்று அவள் தோப்புக்குள்ளிருந்து ஆடிக்காட்டும் அழகை எத்தனை முறை அவன் பார்த்து மகிழ்ந்திருக் கிறான்...!

—ஓர் இன்பக் கிளுகிளுப்பு...

கட்டுண்ட வெள்ளம் கரை உடைத்துப் பாய்ந்தது போல் ஒருநாள் சீனி மாரி வீட்டுக்குள் புகுந்தான். கை நிறையக் கனிந்தப் பழங்கள்... இருவரும் எச்சில் படுத்தி உண்டு களிக்கின்றனர்.

'மாரி..."

'ஹூம்..."

அவள் தேம்பினாள்... விளங்காத பருவத்தில் புரியாத கதையைத் தெரியாத அறிவில் பேசுகின்றனர்...

குப்பை மேட்டில் கோழிகள் கொக்கரிக்கின்றன. கீரி விரட்டுகின்றது. சீனி சிற்றோடையில் இறங்கி ஓடுகிறான்.

—இந்த வாழ்க்கையில்...

காலம் என்ற மலர் பூத்து மணக்கிறது. அந்தச் சுகந்த வாடையில் மாரியும் மலர்ந்து விட்டாள்.

புடைத்து வரும் அரும்போடு பூத்துச் சிரிக்கும் கொழுந் தென அவளது வாலிப சௌந்தர்யம் இனிப்பை ஏந்தி

நின்றது. தாவணி பாவாடையோடு விளங்கும் அவள் இப்பொழுதெல்லாம் லயத்தைச் சுற்றுவதில்லை: பக்கத்து வீட்டு கோமளம் பிள்ளையோடு 'பாண்டி' உருட்டுவதோடு பொழுது கழிந்தது. சீனிப்பயலை மனத்துக்குள் நினைக்கக் கூட அவளுக்கு ஒரு 'பயம்'— 'இதயச்சூடு' உருவாகியது!

—சீனி...

கொய்யா மரத்தில் ஏறி குரங்காட்டம் போடுவதிலெல்லாம் அவனுக்கு இப்பொழுது விருப்பம் கிடையாது. மாரிக்குட்டியை மனத்துக்குள் நினைத்து—நினைத்து அவன் மௌனியாகிக் கொண்டிருக்கும் வேளையில்...

அந்த குப்பை மேட்டுக் கொய்யாமரம் மீண்டும் பூத்துக் குலுங்கியது. அது காய்த்துக் கனிந்து கொண்டிருக்கும் பொழுதே வௌவால்களும் குருவிகளும் முற்றுகையிடுகின்றன. அந்தச் சிட்டு அமர்ந்திருக்கும் சின்னக் கிளையில் சீனியும் ஒருநாள் உட்கார்ந்திருந்தான். அவனது அரும்பிய முகத்தில் சிந்தனை வடுக்கள் படர்ந்து சிவந்தன.

பறவைகள்தான் கனிந்த மரங்களைத் தேடியோடுகின்றன...சீனியின் இதயம் சூடேறியது.

''ஆத்துக்கு அந்தப்புறம்...''

இப்பொழுதெல்லாம் அந்தப் பாட்டை அவன் வாய்க்குள்ளேதான் முணகிக் கொள்கிறான்.

ஒரு நாள்.

முழுமதியின் பூரணவிளைச்சல், அந்தப் பொலிவின் உத்வேகத்தில் இரவுஉள்ளடங்குகிறது.அந்த மரப்பாலத்தின் அருகிலிருக்கும் வாழைக் கூட்டத்தின் நிழலில் மாரியும் சீனியும் கொய்யாப்பழம் தின்னுகின்றனர்...

''ஆத்துக்கு அந்தப்புறம் காக்கா!—நான்
கல்யாணம் கட்டப்போறேன் சோக்கா!''

அந்த மதுர கீதத்தில் இருவரும் திளைத்து ''கெக்களி'' கொட்டுகின்றார்கள். காலம் இவர்களின் களவுக்கு ஆசி கூறியது. கொழுந்து மலை—முகிற்குன்று—மலைச்சாரல்—புல்வெளி—காட்டருவி இங்கெல்லாம் மாரியும் சீனியும் கந்தர்வ நடனம் புரிந்ததை ஊரின் வாய் அசுத்தப் படுத்தியது சீவியம் முழுவதுமே அடுத்தவர்களை இழிவு படுத்தி பொல்லாங்கு உரைக்கும் அவர்களுக்கு இப்படி ஒரு ஆணும் பெண்ணும் வயசு வந்த காலத்தில் சந்து பொந்து களில் சிரித்துப் பேசுவதைக் கண்டால் அவர்களது அசுத்த வாய்களுக்கு ஒரு நாற்றமெடுத்த தீனி கிடைத்தது போல் ஆகாதா...''

''என்னா இருந்தாலும் இப்படியா சிரிக்கப் போயி கெடக்கணும்...?''—தோட்டமே தம்பட்டம் அடித்தன. இருந்தும்... இம்மலையகத்துப் பசுமைகள் செழித்தோங்கி பொலிவு பெற சம்பந்தி உறவுகள் பசளையிட்டு நீர் வார்த்தன.

சீனி தோட்டத்தில் 'பேர் பதிந்து' வேலை செய்யத் தொடங்கி விட்டான்.

பங்குனியும் பிறந்து விட்டது மாரியின் வீடும், சீனியின் வீடும் மங்களப் பேச்சுக்கள் பேசினர். சீனி உழைத்த கூலியில் சீட்டுப் பணமும் கிடைத்துவிடும். ''என் கண் வெளிச்சத்திலேயே இந்தப் பயலுக்கு ஒரு மாலை எடுத்துப் போட்டுட்டா போதும்,'' என்று சீனியின் 'அப்பாயி கிழவி' யும் அவசரப்பட்டாள்.

மாரி, சீனியின் காலவோட்டம் ஒரு நல்ல சிறுகதையை தெளிந்த ஞானமுள்ள ஓர் வாசகன் லயித்துச் சுவைப்பது போலத் தொடர்ந்தது.

காலமென்னும் பூந்தோட்டத்தில் எப்பொழுதும் தென்றல் வீசுவதில்லை; திடீரெனப் புயலும் வீசி அந்த இனிய மலர்ச் செடிகளைப் பூவோடும் மொட்டோடும்

பூண்டோடும் ஒடித்துச் சேற்றில் புதைத்து விடவும் செய்து விடுகிறது.

அந்த அழகிய சிறுகதை ஒரு குறுகிய விமர்சனத்தால் பழுதடைவதுபோல நீல வானத்தில் கார்மேகம் படர்ந்தது.

—இடியின் குமுறல்.

—மின்னல் ஒளி.

வானம் 'கோ' வெனக் கதறுகிறது. விடாத மழை, பிரளயம் தன் கோர உருவத்தைக் காட்டுகிறது. மகாவலி மங்கை (மகாவலி மலை நாட்டில் உற்பத்தியாகி ஓடும் ஒரு நதியின் பெயர்.) தலைவிரித்தாடி பேய்க்கோலமாய் வெறி கொண்டு ஓடுகிறாள். அவளது கற்புத் தன்மை களங்கப் பட்டு கறை படர்ந்த உடலால்...மேனிக் கூச்சத்தால்...பலி கொண்ட வேகத்தில் புரளுகின்றாள்

''...ஆத்துக்கு அந்தப்புறம்...''

அந்த மதுர கீதம் மாரிக்கும் சீனிக்கும் இதய கீதமாகிக் கொண்டிருக்கும் போதுதான்...அந்தச் செய்தி கல்யாண வீட்டில் இழவு விழுந்த கதையாகி விட்டது. இராஜ தர்மம் நெறி பிசகித் தன் கற்பை இழந்து விட்ட நேரம்...'நாட்டின் குடிமக்கள்' என்ற ஒரு உடலை இனத்தாலும் மொழி யாலும் பிளவு படுத்திக் கூறு போட்டுப் பங்கு பிரித்து விட்டது 'அரசு' என்ற ஒரு சக்தி. அந்த சக்தி மாரி சீனி வாழ்க்கையில் விதியாக நுழைந்தது. வெண்ணெய் திரண்டு வர தாழி உடைந்த கதையாய் அந்த இருவர் வாழ்க்கை யிலும் இடி விழுந்தது...

''இந்த வருசத்தில் மாரிக் குடும்பம் இந்தியா போக வேண்டும்.'' இது 'சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்' கட்டளையாகும் ஐந்து லட்சத்து இருபத்தைந்தாயிரம் மக்களை இந்தியா பதினைந்து வருசங்களுக்குள் திருப்பி அழைத்துக் கொள்வதும்...மூன்றுலட்சம் மக்களை இலங்கை

குடிகளாக்குவதும்... மீதமுள்ள ஒரு லட்சத்து எழுபத்தை யாயிரம் மக்கள் நிலையற்ற ''பிறகு பேசுவோம்'' என்ற ஒரு கொடுமையான காவியம் ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டு படைக்கப்பட்டது.

ஒரு நாட்டிலே வரலாறு படைத்த மக்களை—மனித உரிமைச் சட்டத்தின்படி ஐந்து வருடங்கள் ஒரு நாட்டில் வாழ்ந்து விட்டால் அவர்கள் அந்த நாட்டு குடிகளாக வேண்டிய மக்களை அரசியல் வாதிகள் விலை பேசினார்கள்.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த மக்களை—அவர்களை வழி நடத்தி வந்த தொழிற்சங்கத் தலைவர்களை—அந்த சமூகத்தில் உருவாகிய சிந்தனைவாதி களை—புத்தி ஜீவிகளை அணுகி கலந்தாலோசிக்காமல் அரசியல் வாதிகள் மாத்திரமே அம்மக்களின் தலைவிதியை மாற்றியமைத்தார்கள்...

இந்தச் சட்டத்தின் மடியில் இலங்கையைச் சுரண்டி கொண்டிருக்கும் இந்திய பெரும் வர்த்தகர்களும் குட்டி வியாபாரிகளும் கௌரவ பிரஜைகளாகவும் 'டி.ஆர் பி,' (Temporary Resigent Passport) காரர்களாகவும் வளர்க்கப் பட்டார்கள். ஆனால் இந்த நாட்டை உருவாக்கிய தொழிலாளர் இனத்தை அந்தச் [சட்டத்தின் கோரப்பற்கள் கடித்துக் குதறின...

சட்டத்தின் விசாரணையில் இலங்கைப் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டவர்கள் நாடற்றவர்களாகினர்.. இந்திய பாஸ்போர்ட் எடுத்தவர்களுக்கு இந்த நாட்டிலே வாழ்வ தற்கு காலக்கெடு கொடுக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள் பலவந்தமாக பாஸ்போர்ட் எடுக்கப்பட்டு, விசா 'குத்தி', குடும்ப கார்ட் நிறப்பி, சேமலாபநிதியை எடுத்து பயணத்தை ஏற்பாடு செய்வதற்கு தோட்ட நிர்வாகம் துணை நின்றது. பாஸ்போர்ட் காலாவதியான மக்கள் போலீஸ்வண்டியில் ஏற்றப்பட்டு, நகரசபை வண்டி யில் நாய்களைப் பிடித்துப் போவது போல... கொழும்பு குப்பனித்தெரு சிறைச்சாலையில் தள்ளப்பட்டார்கள்,

காலைப்பனியோடு மலையேறி தேயிலைச் செடிகளுக்கு உரம் போட்டவன், தன் கால் கைகளைக் கழுவாமலேயே பொலீஸ்வண்டியில் ஏற்றப்படுவான்... அவனது மனைவி, பிள்ளைகள் பழைய துணிகளை அள்ளிக்கொண்டு... நிர்வாகம் நீட்டிய சில்லறைகளோடு தலைமன்னார் இறங்குதுறை சென்றடையவேண்டும்.

இப்படி கண்ணீரில் கரைக்கப்பட்ட மனிதத்தவிப்புகள் எத்தனை லட்சங்கள்...?

...இந்திய சமூக அமைப்பின் பேய்ச்சக்திகளான ஜமீன்தார்களுக்கும் - மிராசுதார்களுக்கும், பண்ணையார்களுக்கும் பயந்து, அடிமைகளாக-கூலி விவசாயிகளாக வாழ முடியாமல் தென்னாப்பிரிக்கா, மலேசியா, பிஜித்தீவு, இலங்கை தீவு என்று வாழ்வைத் தேடி சிதறியோடிய மக்கள் இன்றுவரை வாழ்வைத் தேடிக் கொண்டேயிருக்கிறார்கள்...

ஆட்சி மண்டபத்தின் கட்டளைப்படி பெரும்பங்கு நாடு கடந்து கொண்டிருக்கிறது. அந்த நாடோடும் முறை இந்த மாதம் மார்கழி முடியுமுன்பு மாரிக் குடும்பத்தையும் அணைத்துக் கொள்ளும்.

அந்த ஏழைக்குடும்பம் குமுறியது... குன்னிகுறுகிக் கண்ணீர் வடித்தது ஆட்சி மண்டபத்தின் கால்களைக் கட்டிப் பிடித்து கதறியது. தங்களது காலச்சரித்திரத்தின் கதைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதது.

—எதுவும் நடைபெறவில்லை.

சட்டத்தின் கண்களுக்கு தர்ம அதர்மதத்துவங்கள் புலப்படுவதில்லை. மாரிக்குடும்பம் இந்தியா செல்லவேண்டும்; சீனிக் குடும்பம் இலங்கை பிரஜையாக்கப்பட்டுவிட்டார்கள். சீனி எவ்வளவோ மன்றாடினான். மாரிக்குடும்பத்தோடு தனது குடும்பத்தையும் அந்தக் அக்கரை மண்ணுக்கு

அனுப்பும்படி வேண்டினான். தங்களது தெய்வீகக் காதலைக் காட்டினான். அந்தக் காதலின் புனித கோயிலுக்குப் பூஜை யாகக் கிடைக்கப் போகும் அந்தக் களவு மலரையும் கூறினான்.

சட்டத்தின் சிக்கல் இரண்டு முனையிலும் அகப்பட்டு தடுமாறின.

அந்த ஏழைகள் அழுதக் கண்ணீர் ஆட்சிப் பாறையின் மேல் விழுந்து வடிந்தது.

உலகத்தைப் புரிந்துகொண்ட சீனியை அன்றுதான் தத்துவங்கள் மெய்ப்பித்துக் கொண்டிருந்தன... சட்டம் என்பது ஒரு சிலந்திக் கூடு... அங்கு எளிய பூச்சிகள் தான் சிக்கி மடிகின்றன... வலிமைபெற்ற வண்டுகள் துளைத்து துவாரமிட்டு பறந்தோடி விடுகின்றன.''

'அல்லல்பட்டு ஆற்றாது அழுத' அந்த ஏழைக்குடும்பம், ஈரல் பிடுங்கப்பட்ட மனிதப் பிண்டமாய் மாரிக்குட்டியோடு பெரும் பயணம் செய்யப் புறப்பட்டன.

—சீனி அழுதான்.

''மாரி...! அதை அழிச்சுப்புடு!''

''இஹும்.... மாட்டேன்! அது எங்க சீனி மாமா குடுத்த அழகான கொய்யாப்பழம்...'' மாரி அரை பைத்திய மானாள்.

''மாரி பொண்ணு! நீ வாழப்போறவ... நீ வாழ வேணும்! அத... நம்ம காதல் சத்தியமா அழிச்சுப்புடடி...''

''மாட்டவே மாட்டேன்...!''

இந்த ரகசியப் பேச்சுக்களை கப்பலடியில் மாரியும் சீனியும் கதைக்கும் பொழுது காது கொடுத்த இந்து மகா

சமுத்திரம் குமுறி, கொந்தளித்து கொடுமை செய்துவிட்ட சிங்களத்தீவின் மேல் சாடிச்சாடி விழுந்தது.

—கப்பல் ஊளையிடுகிறது...

''சீனி மாமா...! சீனி மாமோவ்...!''

''மாரி பெண்ணு...! என் உயிரே...!''

கொந்தளிக்கும் கடலில் குதியாட்டமிட்டு கப்பலும் நகருகிறது.

''ஆத்துக்கு அந்தப்புறம் காக்கா...'' மாரி பாடிய அந்த கீதம் சீனிக்கு இழவுக் குரலைக் காட்டியது... ஆனால் இந்த நாட்டின் கண்களையே கட்டிவிட்டு, எத்தனையோ காவல் அதிகாரிகளின் கண்களிலேயும் மண்ணைத் தூவிவிட்டு சீனி மாமாவின் களவு மலரோடு அக்கரை போகும் அவளுக்கு அந்தப் பாடல் மதுர கீதமாக இனித்தது.

□ □ □

[இக்கதையை அட்டன் இலக்கியவட்டம் திரு. ந. அ. தியாகராசன் மூலமாக 20-05-1968ம் ஆண்டில் தனிப் புத்தகமாக வெளியிட்டது.]

# நிரந்தரம்

அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். அவளது அணைப்பின் கதகதப்பில் அவன் சுகம் பெற்றுத் தூங்கினான்! அவளது முதுகுப்புறத்தில் முழங்கால்களை முட்டுக் கொடுத்து ஒன்று இடித்தது. அவள் மீண்டும் மறுபக்கம் திரும்பிப் படுத்தாள். அவளது மார்போடு முகம் புதைத்துத் தூங்கிய அவன் மீண்டும் முனகினான். அவள் இரண்டு பக்கமும் இழுபறிப்பட்டாள்.

குளிர்... கடும்பனி!

இவ்வுபத்திரவத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத அவ்விரண்டு இளஞ் சிறுசுகளையும் அவள் தன் நெஞ்சோடு நெஞ்சாக அணைத்து உருண்டு புரண்டாள்.

கடுங்குளிர், நடுச்சாமத்திற்குப் பிறகுதான் பொறுக்க முடியவில்லை. சனியன்... பகல் முழுக்க ஒரே நெருப்பு வெய்யில்...இரவு பட்டால் தான் இந்தக் கடுங்குளிர்.. அவள் கம்பளியில் உதறும் அந்த இரண்டு சிறுசுகளைத் தன் உடல் சூட்டினால் மட்டும் தவிர்த்து விடமுடியாது, தவிதாயப் பட்டாள்.

இது மழையில்லாத காலம்—

நிலம் வரண்டு புழுதிப்படர்ந்து தெருவில் கூட நடக்க முடியவில்லை பச்சைப் பசேலெனப் பசுமை யெளவனம் கொடுத்துக் கொண்டிருந்த தேயிலைச்செடிகளைப் பார்க்கும்

போது பெரிய பாவமாக இருக்கிறது. ''தண்ணீரில்லாத நிலம் பாழ்... தாகம் தீர்க்காத விளைச்சல் பாழ்'' என்று புதுமொழி புகுத்தி விடுவதிலும் உண்மையில்லாமலில்லை. தேயிலைச் செடிகள் வெந்து கருகி நெருப்பில் பட்டாற் போல் ஆகிவிட்டன, மண்டை வெய்யில்... வெடிக்கும் சூரியனுக்கு என்ன... கொள்ளை வந்து விட்டதோ!

இரவு வந்ததும் நடுங்கும் பனி...

அந்தப் பத்தடி வீட்டுக்குள் முனகிக் கொண்டிருக்கும் அவ்விரண்டு சின்னக் குழந்தைகளை வாட்டுகின்ற பனி, மேலும் கிளறிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அவள் எரிச்சலில் எதையோ நச்சரிக்கிறாள்... ''ச்சீசீ... பொழைச்சுக் கிடந்தா விடிஞ்சும் விடியாமலேயே ஒரு கம்பளி எடுக்க வழி பண்ண வேணும்...''

பிய்ந்து போன சாக்குத் துண்டுகளைப் போர்த்தி முண்டி முனகி கால் நீட்டி மடக்கினால் சாக்குத் துண்டுகள் மூலைக்கு ஒன்றாய் டர்புர் எனக் கிழிந்து விடுகின்றன. அவள் தன் சங்கற்பத்தில் தலையமுத்தி குழந்தைகளை அணைத்துக் கொள்கிறாள்.

'சூ' வென முகட்டுத் துவாரத்திலிருந்து பனிக்காற்று உள்ளே வீசுகிறது. மலை மேட்டில் வீடு வானத்தை முட்டும் கூரை. பனி மேகங்கள் வெண் புகையெனப் படர்ந்து வீட்டுச் சூழலைப் பற்றிப் படர்கின்றன.

'அப்பப்பா... சாமி... சாமி...' அவளின் ஓலம் நின்றபாடில்லை.

—அவனுந்தான்!...அவளுடைய கணவன்...

அந்த நடுச்சாமத்தில் அடுப்புக்குள் கிடந்த நெருப்பையெல்லாம் வெளியில் கிளறி இழுத்து, கணகணவென ரத்தினக் கற்களைப் போல் தகதகக்கும் அவைகளின் அருகில் இரண்டு கால்களையும் கிழக்கு மேற்காக அகட்டி வைத்து

அக்கினி ஸ்நானம் செய்து கொண்டிருக்கிறான். தொடையிலிருந்து முழங்கால் எலும்புவரை தன் ரத்தத்தைக்கொதிய வைத்தும் அக்குளிரைப் போக்கிக் கொள்ள முடியவில்லை.

அவன் சொல்லிக் கொள்கிறான். "இந்த நேரத்திலே ஒரு 'அரைக் கிளாஸ் போட்டா அப்பப்பா.... அப்பப்பா...! ஆஹாஹா...!!!'' அவன் அந்த நினைவில் சுவர்க்கத்தின் நுழைவாயிலுக்கே சென்று திரும்பிக் கொண்டிருந்தான்.

''சாமி...சாமி... அ... அ ... இந்தத் தடவை எப்படியும் ஒரு கம்பளி...'' அவளின் அந்த அவல ஓலம் குளிரோடு கலந்து பனியோடு சேர்ந்து குரலோடு நெளிந்து வளைந்து சுருண்டு ஓடியது.

அவன் சிரிக்கிறான்.

குளிரில் துடித்த நாய் துப்பட்டி வாங்க முயற்சித்த கதை நினைவுக்கு வருகிறது. துண்டு சுருட்டைக் கரும்பாக கடித்துச் சுவைத்து இழுக்கிறான். விறகுப் பரணியை மேல் நோக்கியவன் வட்டம் வட்டமாக வளையங்கள் விட்டு மீண்டும் அடுப்பைக் கிளறுகிறான். நெருப்பும் செத்து விட்டது.

அவன் படுத்துக் கொள்ள சிரமப்படுகிறான். எவ்வளவு நேரம் தான் முழங்கால் முட்டிகளை முகத்தோடு வைத்துக் கொண்டு தூங்குவது? கால் கைகளும் நரம்பை இழுத்துப் பிடித்துக் கொள்கின்றன. அவன் தூங்காமலே அடுப்பங்கரை திண்ணையில் 'அம்சமாக' அமர்ந்து கொள்கிறான்.

அவளது முனகல் மட்டும் நின்றபாடில்லை. 'கொழந்தைகள் ரொம்பக் கஷ்டப்படுதுங்க...விடியட்டும் ஒரு நல்ல கம்பளி வாங்கி அடுத்த வீட்டுப் பையனிடம் கொடுத்து மணிக்கோர்வை பின்னி 'சிங்கிடி' தொங்க வைச்சிக்குவோம்.'

— அவள்

கல்யாணமாகி புருஷன் வீடு வந்த முதல், இன்னும் தான் ஒரு கம்பளி எடுக்க பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறாள். எத்தனையோ முறை தன் புருஷனுக்குத் தெரியாமல் சில்லறைகளைச் சேர்த்து சேலை முந்தானைக்குள்ளே முடிச்சுக் கட்டிச் சேர்த்த பணத்தை 'கம்பளி வாங்கிட்டு வாறேன்' என்று அவனே அவளிடம் வாங்கிக் கொண்டு கடைக்குப்போய் திரும்பி வருகிறவன் 'கம்பளி எட்டு ரூவா...கருத்தக் கம்பளி பத்து ரூவா' என்று தெம்மாங்கு ராகம் பாடி அரை நிர்வாணத்தோடு ஆடி ஆடி வந்த கொடுமைகளையெல்லாம் அவள் இன்னும் மறந்து விடவில்லை.

அவனைக் கைப்பிடித்த நாள் முதலாய் இன்று வரை உப்புச் சப்பு இல்லாத இல்லறம் நடத்திவரும் அவளுக்கு அவன் குட்டிச்சுவராய் போனாலும் கவலையில்லை. தான் பெற்றுவிட்ட கொடுமைக்காக பிள்ளைகளை கட்டிக்காத்து வளர்த்துவிட வேண்டும் அதற்காக அவள் இடி, மின்னல், புயல், மழை, பனி, குளிர் இவைகளையெல்லாம் எதிர்த்துப் போராடி அன்றாட கூலிக்காக காடு மேடெல்லாம் ஏறி இறங்கிக் கஷ்டப்பட்டாள். அவளின் வழித்துணையாக இப்படி நாளொருபொழுதாய் வேதனைப் படுத்துவதற்கு ஒரு கம்பளி மட்டும் இருந்து விட்டால் இந்தக் காலத்தையே அவள் வெட்டிப் புதைத்து மேடாக்கி வீடு கட்டி விட மாட்டாளா?

அந்த ஏழைப் பெண்ணின் இதயத்தில் நிரந்தரமாகக் குடி கொண்டு கிடக்கும் இலட்சியக் கனவு—அந்த அடி மனத்தின் முழுவேட்கை எல்லாமே அந்த ஒரு கம்பளியில் தான் ஐக்கியப்பட்டுப் போய்விட்டன. அவள் எதையோ நினைத்துப் பயப்படுகிறாள்.

''கம்பளி எட்டு ரூவா...கருத்தக் கம்பளி பத்து ரூவா'' வழிமுறை வழிமுறையாக ஜென்மக்கோர்வையாக ஏழை

களை இன்று வரை ஏமாற்றித் தின்னும் சுரண்டல் கங்காணிகள் பாடி வந்த ராகத்தை தன் தாலிகட்டிய கணவனே பாடிக் கொண்டிருக்கிறான்? இந்த ஏமாற்று வித்தை அவளை நிரந்தரமாக பீடித்திருக்கும் பொழுது அவளுக்கு மீட்சி கிடைக்குமாவென நினைத்துப் பயப் படுகிறாள்.

வரண்ட நாட்களில் வேலையும் குறைவு. மாதத்தில் கிடைக்கின்ற பத்து பன்னிரண்டு நாட்களின் ஊதியத்தை கை நீட்டி வாங்கி குடும்பச் செலவுகளையும் பாராது சம்பளம் போட்ட அன்றைக்கே கடைப்பக்கம் ஓடி குடித்து அழித்து விட்டு நடுச்சாமத்தில் கதவைத் தட்டும் வாழ்க்கை தன் கணவனிடம் நிரந்தரமாக இழையோடிய பின் அவள் என்ன செய்வாள்? குழந்தை குட்டிகளுக்கு—அவைகளின் நோய் நொடி வயிற்றுப்பாடு யாவற்றிற்கும் அந்த ஒருத்தியின் முப்பது ரூபாய் சம்பளம் எந்த மூலைக்கு?

கல்யாணஞ்செய்து மனைவி மக்களைப் பெற்று குடும்பம் நடத்த யோக்கியதாம்சம் இல்லாதவனை யெல்லாம் வாழ்க்கையில் பிடித்துத் தள்ளிவிட்டால் இந்த மாதிரியேதான் அவனோடு பேதைப் பெண்கள் சுசந்த சுவையோடு காலத்தைக் 'கழிக்க' வேண்டியிருக்கிறது...

'குடிகார மொட்டை நீ நாசமாகப் போறன்னைக்குத் தான் நான் கொழந்தை குட்டிகளோடு பசியாற சாப்பிடுவேன்' என்று எத்தனை முறை அவள் பாடினாலும் அவளுக்கு இப்பொழுது கம்பளிதான் வேண்டும்.

—கம்பளி.

அவளுக்கு சிரிப்பும் வருகிறது.

இது கம்பளி போடாத காலம்!

கண்ணாடி ரெட்டுகளை 'கொங்காணி' மடித்துப் போட்டு கண்களை நானாபக்கமும் உருட்டி நடக்க யாவருக்கும் சர்வ வசதியாக விற்கப்படும் நவீன

கம்பளியாம் 'பொலித்தீன்' றப்பருக்கும் கம்பளி என்று தான் பெயர்! வெள்ளை ரெட்டுகளை மாட்டிக் கொண்டு தூரத்தே கொழுந்தெடுக்கும் பெண்களைப் பார்க்கும் பொழுது பட்டாம் பூச்சிகள் பூவிதழ் தேனை உறிஞ்சிக் கொண்டிருப்பது போல் காட்சி தரும் அழகு...! அதோ பூபோட்ட ரெட்டு போட்டு பூப்போல முகஞ்சிரித்து— பூப்போன்ற கொழுந்து கொய்யும்பூவையர்களைப்பார்க்கும் பொழுது அவளுக்கு அந்த கருத்த—தடித்த—கனத்த கம்பளி பூதம் போல பயமுறுத்தினாலும் அதனுடைய சுகமும் உபயோகமும் நிரந்தர உழைப்பும் அவளை அதே கம்பளி யைத் தான் வாங்கும்படி செய்கின்றன.

குளிர் அடிக்கிறது.

பனி பெய்கிறது.

இரவும் முடிகிறது.

வைகறை விடிய காலைப் பொழுதாகிறது. அவன் பனியால் வெடித்த உதடுகளை முழங்கால் முட்டிகளில் வைத்து உரசுகிறான். மரவண்டு போல் அடுப்புச் சாம்பலில் சுருண்டு கிடந்த அவனது முகம் கோரமாகக் காட்சி தருகின்றது. வெடித்த உதட்டுக்கீறல்களில் இரத்தம் கசிய தேங்காய் எண்ணெய் பூசிக்கொண்டு வெளியில் வருகிறான். பாதங்களும் பனியால் வெடித்திருக்கின்றன.

நடக்க முடியாத நிலையில் அவன் நடனமாடுவதுபோல பிரட்டுக்களம் நோக்கினான். அவளைப் போல அவனுக்கு கம்பளி ஒரு பெரிதல்ல; சுருட்டுத்துண்டு ஒன்றிருந்தாலே போதும். வாயில் ஊதிக் கொண்டு புளிச் புளிச்சென எச்சிலை குமைந்து துப்பி அகூசையாக இருமி ''அப்பாச்சி' என்று தும்மலைக் கிளப்பும் போது 'பேய்' என்ற ஒன்று இப்படித் தான் இருக்குமோ என்று அவளே ஐயப்படுமளவுக்கு அவன் தன்னை ஆக்கிக் கொள்வான்.

''கெட்டுப்போன மனுசன்!.... நீ என்னைக்கு தொலையுறியோ அன்னைக்குத்தான் எனக்கு கம்பளி...!'' விடிந்தும் விடியாத காலைப் பொழுதிலேயே அவள் தன் ஆரோகணத்தை துவங்கி விடுவாள். பிறகு என்ன; ஐம்பது சதத்தைக் கண்டதுமே நூறுமைல் வேகத்தில் சாராயக் கடைக்கு ஓடும் அவன் நிச்சயம் தொலைந்த பிறகுதான் அவளுக்கு கம்பளி கிடைக்கும்! அவள் இன்றைக்கு வெகு சந்தோஷமாகக் காணப்பட்டாள் மஞ்சள் நிறத்தால் கொஞ்சி விளையாடும் கொழுந்துகளைப் போல் அவள் முகம் மலர்ந்திருக்கிறது.

அவள் கம்பளி வாங்கப் போகிறாள். கத்தரித் தோட்டத்தில் ஒரு மண்முட்டிக்குள் அடைத்து வைத்திருந்த நான்கு ஐந்து றாத்தல் சில்லறைக் காசுகளைச் சுமந்து வந்தாள். அவைகளைக் கொட்டிக் கணக்கெடுக்க அவள் இன்றைக்கு வேலைக்கும் போகவில்லை. புதையல் பணத்தைப் போல காணப்பட்ட அக்காசு முப்பது ரூபாவாக முழுமை பெற்றிருந்தது. அவள் மூன்று வருஷங்களாகச் சேமித்து வைத்த 'சேமலாப நிதி!'

அவளது இதயமும் எண்ணமும் ஈடேறப் போகும் லட்சிய வேட்கையும் மகாவலி கங்கையெனப் பெருக்கெடுத்தோடின.

''இந்த முறை மாமாவிடம் தான் குடுத்தனுப்ப வேண்டும்...அந்த மனுஷன் கண்டுக்கிட்டா பிடுங்கிக் கொள்ளும்!'' புருஷனிடம் காலமெல்லாம் ஏமாற்றமடைந்த அவள் இந்த முறை தன் மாமனாரிடம் காசைக் கொடுத்து அனுப்புகிறாள்...கம்பளி வாங்க! அருமையான யோசனை.

அட்டனுக்குப் போய் கம்பளி எடுத்து வரும்படி தன் மாமனாரை அனுப்பியவள் வழிமேல் விழி வைத்து ஆயிரந் தடவை அந்த முற்றத்து முன் கதவை திறந்து மூடிக் கொண்டிருக்கிறாள்.

பென்சன் எடுத்துக் கொண்டு சதா லயத்தைச் சுற்றி வாழ்கிற வீட்டையும் தாழ்கிற வீட்டையும் வசைப்பாடிக் கொண்டு திரியும் கிழவாடிக்கு மருமகள் தன்னை அட்டனுக்கு அனுப்பி வைத்த ஏற்பாடு உயிரோடு, தான் சொர்க்கத்திற்குச் சென்று கொண்டிருப்பது போல் பட்டது. மருமகளுக்கு கம்பளி எடுக்கப் பயணம் போகும் அந்த மாமனார் 'அட்டனுக்கு முப்பது சதமா' என்று ஆச்சிரியப் பட்டார்.

பாவம் கிழவாடி; தான் சிலோனுக்கு வந்த பிறகு அன்றைக்குத் தான் பஸ் பயணம் செய்கிறார் என்பதை அப்பட்டமாக அவிழ்த்து விட்டார்.

பஸ் வண்டி பத்தனை—சந்தியைக் கடந்து கொட்டக் கலையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது.

''தலவாக்கொல்லை தறுதலைப் பசங்க ஊரு; அங்க... செப்புச் சல்லிக்கு ஒரு பாக்குத் துண்டு வாங்கப்படாது!... அட்டன்...! ஆஹா! அந்த காலத்துல தொப்பித் தோட்ட முன்னா தான் வெளங்கும். சாராயத் தவறணை றயில் கம்பி போட்ட புதுசுலேயே தொறந்துட்டானுகளாம்...'' கிழவாடி தன் கொண்டையை அவிழ்த்து கை விரல் செருகி சிக்கு களைத்து முடிச்சு போட்டுக் கொண்டார்.

'மருமவ கழுதை! இந்த நெருப்பு வெய்யில் காலத்துல கம்பளி எடுக்க சொல்லுது. வெலையும் நெருப்பாத்தான் இருக்கும்! பரவாயில்லே... மழைக் காலத்துல கம்பளி கேட்டா...அதை விட நெருப்பு புடிச்சி நாடு நகரத்தையும் அழிச்சுடுற மாதிரி வெலை போடுவானுங்க ..!'

கிழவாடி அட்டனில் இறங்கினார். கடைக்குக்கடை சுற்றினார் அந்த கறுப்புக்கோட்டுகாரப் பெரிய மனுசனை 'கங்காணி கங்காணி!' என்று கூவி இருபது ரூபாய் கம்பளியை நாற்பது ரூபாய் சொன்னார்கள்! அப்பொழுது தான் குறித்த இருபது ரூபாய்க்கே இந்தமாதிரி 'கோட்டுக்

காரப் பெரிய மனுசன்கள்' எடுத்துக் கொண்டு போவார்களாம்! கிழவாடியிடம் அந்த வியாபாரப்புலி களின் பாய்ச்சல் பலிக்கவில்லை. பதிலாக அவர் தான் சண்டைப் பிடிக்கத் தொடங்கி விட்டார். 'என்னாய்யா!... அந்த காலத்தில பெரிய கங்காணிமாருக கூலிக்காரனிடம் 'கருப்புக் கம்பளி' வித்த மாதிரியல்லோ கதைக்க வாறீங்க... கருத்ததெல்லாம் கம்பளியாகிடுமா? நான் கோப்பி காலத்து மனுஷன்... கொட்டைப் பாக்கை இன்னைக்கும் கடிப்பேன்! ஆ...மா!' பிசுபிசுத்த கிழவாடி அட்டன் நகரத்தை இன்னொரு முறை சுற்றினார்.

வெய்யில் வியர்வையாக வடிந்தது. கிழவாடி குடுமியை அவிழ்த்து குளிர் தட்டினார். அவருக்கு இப்படியும் ஒரு யோசனை பட்டது. 'கம்பளி எடுப்போமா—வேணாமா? அடச்சீ! இந்த வெய்யிலுக்கு என்னாத்துக்கு கம்பளி...? ச்சே...ச்சே—வந்த விஷயமே கம்பளி எடுக்கத்தானே—மருமவக்காரி பொல்லாதவ...ரொம்ப கண்டிப்பு—கம்பளி எடுக்காட்டி அவ படிவாசல் மிதிக்க முடியாது—!' கிழவனார் மனச்சாட்சியோடு பத்து நிமிடம் போராடிக் கொண்டிருந்தார். அவரை அணுகிய ஒரு சின்னப் பையன், 'கங்காணி! கொங்காணி வேணுங்களா...?' என்றான். ஆமாம்; 'பொலித்தீன்' ரெட்டு அறுபது சதம்—!! கம்பளி யும் ரெட்டும் மழையைத் தடுக்கத்தானே உதவுகிறது... 'அப்ப ஒரு ரெட்டு வாங்கிக்கிட்டுப் போனா என்னா....?' கிழவனாரின் கிழட்டு மூளை பலவாறு குழம்பியது. அந்தப் பையனும் அவரை விட்டப்பாடில்லை...! 'அடச்சீ போப்பா, சும்மா...' என்றவுடனே தான் அவனும் நகன்றான்... கிழவாடியின் இந்த திடீர் மாற்றம் உண்டானதற்கே முழுக் காரணம் இருக்கிறது.

அவருக்கு எதிர்த்திசையில் சாராயத் தவறணை சிவப்பு நிறத்தில் ஜெகஜோதியாக காட்சிக் கொடுத்தது—கொடியோடு கண்ட கனியைப் போல—கொம்போடு வடிந்த

தேனைப் போல அவருக்கு தவறணையோடு சாராயத்தைக் கண்ட காட்சி என்னவோ செய்தது. பாவம்; நாறமீனைப் பூனை பார்ப்பது போல அவர் லயித்திருந்தார். கம்பளி வாங்க வந்த கிழவர் இப்படி மனச்சலனம் பட்டு கார் வண்டியில் அடிபட்டுச் சாகப்போவதை விரும்பாத மனச் சாட்சி அவரின் முதுகில் ஓங்கி குத்தியது.

'ஒன் மருமவ கண்டிப்புக் காரி! நீ தடுமாறிவிட்டால்... இப்ப கெடைக்கிற கஞ்சிக் கூட அப்புறம் கெடைக்காது!' கிழவனார் திரும்பி ஓடினார். கம்பளி வாங்கியாகி விட்டது. கையில் கிடந்த மீதிக் காசு அவரை தைரியப்படுத்தியது. சிவப்பு கடை வாசலிலிருந்து பஸ் நிலையம் வரை அவர் 'கண்டியன் நடனமாடிக்' கொண்டு சென்றார்.

கிழவனாரையும் அந்த கச்சிதமான கம்பளியையும் ஏற்றிக்கொண்டு பஸ் புறப்பட்டது. ஒன்பது கிரகங்களும் ஒன்றாகச் சேர்ந்து சுத்துவதுபோல இருந்தாலும் கிழவனார், கம்பளி எடுத்த பெருமையில், அந்த கடைக் காரனை அவர் போட்டபோடு... அந்தப் 'போட்டு'க்கு அவன் மசிந்து கம்பளியை குறைத்து விற்ற வெற்றி! எல்லாவற்றையும் நினைத்து இறுமாப்படைந்து இறும்பூ தெய்தினார். அருகில் அமர்ந்திருப்பவரிடம் கதைக்க ஆரம்பித்தார்.

மீசையை ஆயிரந்தடவை தடவிக் கொண்டு, அவர் அந்தக் காலத்திலே அவிசாவளையிலிருந்து கொழும்புக்கு நடந்து போய் தோட்டத்துரையின் குதிரைக்கு 'சீமைக்குடி' வாங்கிவந்த கதையிலிருந்து எட்டு ரூபாய்க்கு ஒரு றாத்தல் கொச்சிக்காய் விற்கும் 'கெட்ட' காலம் வரை விலாசி தள்ளிக்கொண்டு போனார்.

எக்கச்சக்கமான நெரிசலை ஏற்றிக்கொண்டு ஓடிய பஸ் பத்தனை சந்தியில் கிழவாடியை இறக்கிவிட்டு தலவாக் கொல்லையை நோக்கியது.

வைத்த கண் வாங்காது வாசற்படியிலேயே காத்து நின்ற அவள் தன் மாமனார் தலையை குறுக்குப் பாதையில் கண்டதும் துள்ளிக் குதித்தாள். அகம்மலர முகம்மலர தன் ஆயிரங்காலத்து லட்சியம் ஈடேறிவிட்ட சாதனையில் அவள் மெய்மறந்தாள். ஆனந்தக்கண்ணீர் பீறிட்டு ஓட 'மாமா வந்திருச்சி!' என்று குதியாட்டம் போட்டு கம்பளியை வாங்க கை நீட்டினாள்.

''எங்க மாமா கம்பளி!''

''ஹும்... கம்...பளியா...?''

''ஆமா... கம்பளி எங்க மாமா...?''

''!...... கம்பளி...... கம்...பளி?''

''.......?! ...?! ......?!'

''மாமா! ஐயோ கம்பளி எங்க?''

''கம்பளி— கம்பளி—''

''...........''

முக்கி முனகி முகம் சுளித்து தள்ளாடும் கிழவனாரின் அருகில் வீச்சம் குமட்டியது. சாராய வீச்சம்!

அவள் துள்ளித் துடித்து குமுறி கொந்தளித்தாள்.

'கம்பளியா—?' கிழவாடி மேல்மூச்சு எடுத்தார். குடிபோதை மண்டைக்குள் புகுந்து மயிர்க்கண் வழியாகச் சென்று கொண்டிருக்கிறது. காலமெல்லாம் இப்படி தகப்பனும் மகனும் குடித்து அழித்து கட்டுத்திட்டமில்லாமல் சீரழிந்து வாழ்க்கையை வறுமையின் நிரந்தர உறைவிடமாக ஆக்கிவிட்டதை நினைத்து அவள் வெதும்பினாள்.

ஏழை; அவள் வாழ்க்கையின் துன்பம் ஒரு தொடர்கதையாகவே வந்து கொண்டிருக்கிறது. தீராத சோதனைகளும்

கொடுமைகளும் போட்டி போட்டுக்கொண்டு அந்த ஒன்றுமில்லாத ஒருத்தியின் வாழ்க்கையிலும் நிரந்தரமாகக் குடிகொண்ட பிறகு யாரை-எவரை அவள் நொந்துகொள்ள முடியும்?

அவள் ஐயோ 'கடவுளே!' என்று வயிற்றில் அடித்துக் கொண்டு மரம்போல நின்றாள். அவள் கண்கள் மலையகத்து மேகமெனப் பொழிந்தன.

கிழவாடி கம்பளியை ஓடும் பஸ்ஸுக்குள்ளே போட்டு விட்டு வந்த உண்மை இன்னும் சொல்லவில்லை.

□ □ □

(வீரகேசரி 24-06-1968)

# காகமும் நரியும்

''டேய் பொடியா...!''

''என்னாங்க...?''

''பெருமாள் கவுண்டர் இந்தப் பக்கம் வந்தாராடா...?''

''இல்லீங்க...''

''அப்போ வேலையப் பாரு!''

பொடியன் போகிறான்.

''டேய் பொடியா...''

''என்னாங்க...?''

''சாமி படத்துக்கு பூமால போட்டியாடா?''

''போட்டேனுங்க...''

''அப்போ குளிச்சிட்டு கிளிச்சிட்டு கோயிலுக்குப் போயி அர்ச்சன செஞ்சிட்டு வா...! மறந்தே போச்சு... டேய் பொடியா...!''

''என்னாங்க?''

''நம்ம புள்ளையார் கோயில் பூசாரிய ஆறுமணிக்கு மேலே நம்ம கடைப்பக்கம் வரச்சொல்லு... நான் தோட்டத்துக்குப் போயிபெருமாள் கவுண்டரைப் பாத்திட்டு வர்றேன்'' லிங்க சிவம் அண்ணாச்சி துண்டை உதறி

தோளில் போட்டுக்கொண்டு ''வேகுவேகு'' என்று ஓடினார். அவர் கால்களில் மாட்டிக்கிடக்கும் கிழட்டுச்செருப்பு ''தடக்கு முடக்கு'' என்று ஆட அவர் மார்போடு மார்பாய் அணைத்துக் கொண்டு போகும் அந்த 'பார்சல்' கடைவீதி சந்தியைக் கடக்கும் போதுதான் தெரிந்தது,

—அந்தப் பார்சல்.

பெருமாள் கவுண்டருக்கு லிங்கசிவம் அண்ணாச்சி வீடு தேடிப் போய் கொடுக்கும் புதுவருசக் கலண்டர் அது! முருகனும் கணேசனும் ஒன்னாய் இருக்கும் கலண்டர்!

''பெருமாள் கவுண்டருக்கும் லிங்க சிவம் அண்ணாச்சிக்கும் அப்படி என்னத்தான் சங்கதி இருக்கும்...?எந்த நேரமும் பெருமாள் கவுண்டரும் அவருமா 'குசு குசு'ன்னு கூடி கூடிப் பேசிக்கிட்டு ...சே!... நமக்கு என்னாத்துக்கு பெரிய சங்கதி எல்லாம்...'' கடைச் சிப்பந்தி பொடியன் தன் முதலாளியை மனசுக்குள்ளே நினைக்கக் கூட பயந்து பிள்ளையார் கோவில் பக்கம் ஓடுகிறான்.

—கடை பூட்டியிருக்கிறது.

லிங்கசிவம் அண்ணாச்சி சர்வ சரளமாக பூட்டுக்கு ஏற்ற சாவிகளை மாட்டித் திறக்கிறார். கோவிலுக்குப் போன பையனும் வந்து விட்டான். மஞ்சள் தண்ணீர் வாசலில் தெளித்து கடையைக் கூட்டிப் பெருக்கி சாம்பிராணி போடுகிறான், முதலாளியின் எழுத்து மேசைக்கு நேராக மேலே தொங்கும் சாமி படங்களுக்கு சாம்பிராணி புகை நன்றாகப் பிடித்து எண்ணெய் விளக்கையும் தூண்டி, விழுந்து கும்பிடுகிறான்.

''டேய் பொடியா..!'

''என்னாங்க...?''

''ஒம்பது மணிக்கு முன்னே கடையைத் தொறக்கார்தே' ஒம்பது மணிக்கு முன்னே கடைக்குள்ளே யாரையும்

விடாதே! ஒம்பது மணிக்கு முன்னே ஒரு செப்புக் காசுக்கு சாமான் குடுக்காதே?.... ரொம்பக் கவனம் நான் குளிச்சிட்டு வர்றேன்...'' லிங்கசிவம் அண்ணாச்சி விடிந்ததும் விடியா ததுமாக பெருமாள் கவுண்டருக்கு கலண்டர் கொடுத்து விட்டு வந்த பிறகுதான் குளிக்கப் போகிறார்.

—லிங்க சிவம்—

அண்ணாச்சி ஓர் இந்தோ—சிலோன் பிரஜை. அவர் இலங்கையில் ஆறுமாதமும் இந்தியாவில் ஆறுமாதமும் ஆக வசிப்பார். நாங்கள் அடுத்த தோட்டத்துக்குப் போய் வருவது போல அவர் இந்த நாட்டுக்கும் அந்த நாட்டுக்கும் போய் வருவார். அவரிடம் பத்து நிமிசம் கதைத்துக் கொண்டிருந்தால் இந்தியாவில் இருப்பது போலவே இருக்கும். அவர் கடையில் இந்தியத் தலைவர்களின் படங்கள் மாத்திரமே மாட்டப்பட்டிருக்கும். இலங்கைத் தலைவர்களின் படங்கள், கலண்டரிலே இருந்தாலும் கூட 'தீண்ட' மாட்டார்! இவர் கடைக்கு வரும் சிங்களவர்கள் 'பாரு! நம்ம நாட்டுல சம்பாரிச்சுக் கிட்டு இந்தியாக்காரன் களுடைய படங்களை மட்டும் மாட்டி வச்சிருக்கான். துவேஷி. அடுத்த 'கச்சால்' வரட்டும் பாத்துக்குவோம்'' என்று முணுமுணுப்பார்கள்.

அண்ணாச்சி ஆரம்ப காலத்தில், தேர்தல் காலங்களில் 'கப்சிப்'பென்று இந்தியாவில் 'வோட்டு' போட்டு விட்டு வந்து இலங்கையிலும் போடுவார்! காலப்போக்கில் அரசியல் கெடுபிடியால் இப்போதெல்லாம் அவருக்கு ''இரண்டு நாட்டு வாக்காளராக'' இருக்க முடியாமல் போய் விட்டது. பொதுத் தேர்தல் காலங்களில் கடைக் குள்ளே 'ரெடி'யாக இரண்டு பெரிய அரசியல் கட்சிகளின் கொடிகளை வைத்திருப்பார். எந்தக் கட்சி ஆட்சியைப் பிடிக்கிறதோ அந்தக் கட்சியின் கொடியை ஆளுக்கு முதலா வதாக தன் கடைக்கு மேலே கட்டி விடுவார்!

அந்த ஊருக்கு முதன் முதலாக நகை ஈடு பிடிக்கும் பழக்கத்தை லிங்க சிவம் அண்ணாச்சிதான் கொண்டு வந்தார். இவரிடம் ஈடு வைக்க ஆள் கட்டிக் கொண்டு வரும் ஏஜண்டாக பெருமாள் கவுண்டர் ஒத்தாசை புரிந்து வந்தார் தோட்டப்புறத் தொழிலாளர்களிடமிருந்து நகை நட்டு, வட்டி செம்பு, குண்டான் சட்டி, குடம் குவளை யாவும் ஈட்டுக் கடைக்கு வந்தன. அவர்களின் முக்கியமான தஸ்தாவேஜுக்களான, இலங்கை பிரஜாவுரிமை பத்திரம், தேசிய அடையாள அட்டை, இந்திய பாஸ்போர்ட் போன்ற பொருட்களையெல்லாம் 'நவீன முறை'யில் அடைவு வாங்கு வார்.

அண்ணாச்சி அக்கரபத்தனை தோட்டத்தில்கல்யாணம் முடித்திருந்தாலும்,பெண்டாட்டி பிள்ளைகளை கூட்டோடு இந்தியாவில் கொண்டு போய் விட்டு வந்தார். இங்கு அவர் தனிக்காட்டு ராஜா! கட்டை பிரமச்சாரி! குடியும் கூத்தியா விளையாட்டும் அவரிடம் மிதமிஞ்சியிருந்தாலும் ஒரு ஈ, கொசுவுக்குத் தெரியாமல் இந்தப் பழக்கங்களைக் கையாளுவதில் அவர் சமர்த்தர்.

அண்ணாச்சி இதுவரையிலும் கவுண்டரிடம் இறுபதினா யிரம் ரூபாய் வாங்கி வைத்திருக்கிறார். ''காசை வங்கி யிலே போடாதேங்கோ... கொறைஞ்ச வட்டி! நான் வச்சிருந்தா யாவாரத்திலே போடுவேன். அது லாபத்திலே குட்டி போடும்! நீங்க இந்தியாவுக்குப் போற காலத்துல ஒரு பெரிய கணக்கே சேந்திடும். நீங்க ஒன்னுக்கும் பயப் படத் தேவையில்லே. நப்பிக்கை தான் பெரிசு. நம்பிக்கை இருந்தா அதுவே போதும்'' என்பார்.

கவுண்டரும் மரக்கறித் தோட்டக் காசு, பால் காசு சீட்டுக்காசு என்று எல்லா காசையும் லிங்கசிவம் அண்ணாச்சி வங்கியிலேதான் 'வைப்புக் கணக்கு' செய்வார்.

''டேய் பொடியா...!'' அண்ணாச்சி வெற்றிலையை மென்றவாறே சத்தம் போடுகிறார். இங்கிதம் தெரிந்த சிப்பந்திப் பொடியனும் எச்சில் பணிக்கத்தைச் சுத்தஞ் செய்து அவர் முன் கொண்டு வந்து வைக்கிறான்.

''டேய் பொடியா...!''

''என்னாங்க...?''

''பெருமாள் கவுண்டர் வந்தா...நான் அடுத்த கடை மொதலாளியோடு கதைக்கப் போயிருக்கேன்னு சொல்லு.''

லிங்கசிவம் அண்ணாச்சி கொழும்பில் புயல் வீசி கூரை—குடிசைகளைப் பிய்த்துக் கொண்டு போனது பற்றி கதைக்காமல், ''துறையூர் தாலுக்காவில் மழை பெஞ்சு நஞ்சை புஞ்சையெல்லாம் நாசமாய் போச்சு'' என்று அடுத்தகடை முதலாளியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதார்.

—இதயம் ஓர் இடம்...

—நினைப்பு ஓர் இடம்...

பெருமாள் கவுண்டர் எட்டாம் நம்பர் மலையில் ''சீக்குத் தேயிலை'' பிடுங்கப் போனவர் ஏகாந்தமாக ஒரு மலை உச்சியில் உட்கார்ந்து கொண்டு இந்தியாவைப் பற்றி நினைத்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்.

பெருமாள் கவுண்டரும் இந்தியாவுக்குப் பயணமாக ஒற்றைக் காலிலேதான் நிற்கிறார். ''வேலையாவது... மண்ணாங்கட்டியாவது...! ஈந்தியா...ஈந்தியாவேதான்...''

கவுண்டர் தோட்டத்துக் கிளாக்கரிடம் பாஸ்போர்ட் விண்ணப்பம் நிரப்புவதற்கு தலைக்கு ஐம்பது ரூபாய் வீதம் எட்டுப் பேருக்கும் நானூறு ரூபாய் கட்டினார். இருந்தும் பெரிய கிளாக்கர் சாராயப் போத்தல் ஒன்றும் ''சந்தோஷ

மாக'' கவுண்டரிடம் கேட்டார். கொடுக்காவிட்டால் பயணம் கெட்டுப் போயிடும் என்ற பயத்தில் அதையும் வாங்கிக் கொடுத்தார்.

''தோட்டத்துக் கிளாக்கர்மாருக நல்லா சம்பா திக்கிறானுக...ஈந்தியா கூப்பன் எழுத அம்பது ரூவாவும் சிலோன் கூப்பன் எழுத இருவத்தஞ்சி ரூவாவும் வாங்குறானுக...நாலு நிமிசங் கூட ஒரு கூப்பனுக்கு போகாது...அம்பது ரூவா புடுங்குறானுக...நல்லா இருக்க மாட்டானுக...'' கவுண்டர் ஆத்திரம் தாங்காது மண்வெட்டியை ஓங்கி தூக்கிப் போட்டார் சீக்குத் தேயிலைக்கு!

அவருந்தான் இந்தியா போவதற்கு எத்தனை வருச மாகப் பயணப்படுகிறார்...? ''இந்த சர்க்கார் விசயமும் ரொம்ப மோசம்...ஒரு கடுதாசி எழுதிப் போட்டு பதில் வாங்குவதற்கு ஒன்றரை வருசமாகிறது...'' மண்வெட்டியில் ஒட்டியிருக்கும் மண்ணை சுரண்டுகிறார். ''வீட்டுக்காரவங்க எல்லாருக்கும் படமும் புடிச்சாச்சு...போட்டோ புடிக் கிறவங்களும் தோட்டம் தோட்டமா கெமராவைத் தூக்கிக்கிட்டு செக்றோலிலே பணம் கழிக்க பார்க்கிறாங்க... ஆண்டவரே! சங்கத்துக்கு சந்தாப் பணம் கழிக்கிறதும் செக்றோலிலே...கூப்பன் காசு கழிக்கிறதும் செக்றோலிலே. அரிசி பணம்—அட்வான்ஸ் பணங் ஐடின்டி கார்ட் பணம்... கடைசியில் படம் புடிக்கிறவன்களுக்கும் பணம் கழிக்கிறதும் இந்த செக்றோலிலே தான்!'' கவுண்டர் இந்த செக்றோல் அநியாயங்களை நினைக்க மனமில்லாதவராய் இன்னுமொரு மண்வெட்டியைத் தூக்கிப் போட்டார்.

கவுண்டர் கவலைப்பட்டதிலும் காரணங்கள் ஆயிரமாயிரம் இருக்கின்றன. தொழிலாளி என்றைக்கும் அழுதுக் கொண்டே சிரிக்கிறவன். அவன் செத்தாலும் ஆயிரம் பொன்...வாழ்ந்தாலும் ஆயிரம் பொன்...அவனைச்

சுற்றி வளைத்து சுரண்டிச் சாப்பிடுகின்ற கூட்டங்களைப் பற்றி விமரிசிக்க காலம் போதாது.

பெருமாள் கவுண்டர் ஐந்து லட்சத்து இருபத்தையாயிரம் மனிதக் கும்பல்கள் இலங்கையைவிட்டு கடந்து கொண்டிருக்கிற ''யாத்திரை''யில் தானும் ஒரு அங்கத்தவராவார். மனைவி மக்களோடு—ஏழு ஜீவன்களுக்கு தன்னை தலைவனாக்கிக் கொண்டு இந்த நாட்டைவிட்டே அடியோடு அடிபெயர்ந்து போவதற்கு அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த நாட்டில் என்றைக்கு அடியெடுத்து வைத்து ஒரு மண்வெட்டியைத் தூக்கிப் போட்டாரோ...அன்றையிலிருந்து இன்றுவரை அதே மண்வெட்டி—அன்று சிந்திய வியர்வை—அதே குனிந்து வளைந்து கொண்டிருக்கும் உழைப்பு.

பெருமாள் கவுண்டர் அந்த மலை உச்சியில் சீக்குத் தேயிலை பொட்டலில் அமர்ந்து கொண்டு சுற்றி வளைத்து நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்... எங்கு நோக்கினும் நீலவானம்...வெண்முகிற் கூட்டங்களோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறது.

—காலை ஒன்பது மணி.

உதய சூரியன் இளஞ்சூட்டை தென்றலில் குழைத்து உழைப்பாளிகளின் விளைச்சல் நிலத்தை வசந்தப் படுத்திக் கொண்டிருக்கிறான். அந்த இளம் வெய்யில்—இளந்தென்றல் காட்டு மரங்களின் குளிர்ந்த வாடை கவுண்டரை ஒரு கற்பனை உலகத்துக்கே அழைத்துச் சென்று விட்டன.

'இந்த மலை உச்சியின் மேலே இன்னும் கொஞ்சம்... ஏறி பார்த்தா...ஈந்தியா...தெரியுமா?'' கவுண்டர் எழும்பி ஒரு கல்லின் மேல் ஏறிப் பார்க்கிறார். ''ஆஹா...! எங்க பார்த்தாலும் ஒரே கடல் மாதிரி தெரியுதே... என்னாயிருந்

தாலும் ஈந்தியா மண்ணு ஈந்தியா மண்ணுதான்...!'' அவர் வாய் முணுமுணுத்தது.

''கப்பல்! ஒரேயொரு முறை சிலோனுக்கு வர்றப்போ பயணஞ் செஞ்ச ஞாபகம்! அடேயப்பா! கடலிலே போறப்போ...அந்தக் கப்பல் என்னா நளினம் ஆடுது! அசல் ஈந்தியா பொம்பளைங்க பரத நாட்டியம் ஆடுற மாதிரியே தான்! மதுர மீனாட்சியம்மனே! சீக்கிரம் என் குடும்பத்த ஈந்தியாவிலே கொண்டு போயிவுடு! எங்கப்பன் சம்பாரிச்சு கட்டின தோட்டந் தொரவு—வீடு வாசல் எல்லாத்தையும் என் பேருலேதான் எழுதி வச்சிட்டு செத்துட்டாராம். இப்போ எங்க பெரியப்பன் பசங்கதான் அந்தக் காணி பூமிகள கவனிச்சுக்கிட்டு இருக்கிறானுக...நான் போயிதான் அந்த சொத்து தகராறைத் தீர்த்துக் கட்டவேணும்.''

கவுண்டர் கர்ணகடூரமாகத் தூக்கிப் போட்ட மண்வெட்டி அந்த சீக்குத் தேயிலையை இரண்டாகப் பிளந்தது.

கவுண்டரின் பேச்சிலும் மூச்சிலும் இந்தியா பயணமே தான் நர்த்தனமாடின. வாழ்ந்து முடிந்த நாப்பது ஆண்டு களிலும் அவர் நெற்றி நீர் இறைத்து—நிலம் நனைத்து இந்த மண்ணை சுவர்க்கத்தின் விளைச்சல்வாசலாக மாற்றி யமைத்திருந்தாலும் அவரது விசுவாசம்—வெறி—வேட்கை இலட்சியம்—எண்ணம்—பரிபூரணமாக ஐக்கியப்பட்டுவிட்ட மனச்சங்கற்பம் எல்லாமே இந்தியாவுக்குப் பயணமாகின்ற தீர்மானத்திலேதான் சங்கமமாகின்றன...

பெருமாள் கவுண்டர் இந்தியாவுக்குப் போக வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டார். அவர் வாய்விட்டுக் கூறி வருத்தப்பட்டதுபோல் தோட்டத்து கிளாக்கர் ஐயாவுக்கு இந்தியா விண்ணப்பம் எழுதுவதற்கு நானூறு ரூபாய் எண்ணாமல் கொடுத்தார். சமாதான நீதவான் கையெழுத்துப்போடுவதற்கும் காசு கொடுத்தார். கண்டி ஹை கமிஷன் ஆப்பீஸுக்கு 'ஆயிரத்து நூற்றி

இருபத்தெட்டு முறை' சென்று வந்தார்! அவர் சேமித்துக் காப்பாற்றிய பணத்தில் காற்பங்கு பணம் அழிந்து போனது, இந்த ஹை கமிஷன் காரியாலய பயணத்தினாலேதான் என்று பலமுறை துக்க அனுட்டானம் செய்து கொண்டார். ''ஒலகத்திலேயே ஒரு நாறிப்போன டிப்பார்ட்மெண்டு இந்த ஹைகமிஷ்ன் டிப்பார்ட்மெண்டு தான்!'' என்று வாயில் வந்தபடியெல்லாம் வசைமாரி பொழிந்தார்.

—மனிதன் நினைப்பதுபோல் எதுவும் நடப்பதில்லை.

பெருமாள் கவுண்டரை கண்டிக்குக்கூட்டிக் கொண்டு போக ஏற்பாடாயிருந்த லிங்க சிவம் அண்ணாச்சிக்கு திடீரென மாரடைப்பு வந்துவிட்டதாம்...! நேற்று இரவோடு இரவாய் வந்த இரண்டு கொழும்பு வியாபாரிகள் தங்களுடைய காரிலேயே அண்ணாச்சியை ஏற்றிக் கொண்டு கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கே போய் விட்டார்களாம்...

கடைச் சிப்பந்தி பொடியன் அழுகையும் கண்ணீருமாகச் சொன்னான்.

பெருமாள் கவுண்டர் மறுநாள் காலையிலும் லிங்கசிவம் அண்ணாச்சியின் கடையைப் பார்க்க வந்தார்.

என்னே கண்கட்டு வித்தை! எதிர்பாராத மாற்றம்! லிங்கசிவம் அண்ணாச்சி கடையில் ''மோகன விலாஸ்' போர்டு தொங்குகிறது! அது... அது... ஓட்டலாக மாறியிருக்கிறது... தேநீர்க்கடை!... கவுண்டர் கடைக்குள்ளே நுழைகிறார். பழைய சிப்பந்தி பொடியன் ''என்னா சாப்பிடுறீங்க...?'' என்று அவர் அருகே வருகிறான் புதுக்கடை முதலாளி கவுண்டரை உட்காரும்படி உபசரிக்கிறார்.

ரேடியோவில் தெய்வ நற்சிந்தனை பாடல்கள் ஒலிக்கின்றன.

—கவுண்டர் நிலை கலங்கி நிற்கிறார்.

"எங்க...லிங்க சிவம் அண்ணாச்சி...அவர்...கொழும்பு ஆஸ்பத்திரி...மாரடைப்பு..சிலோன் பேங்கு...நான்...கண்டி. பாஸ்...போர்ட்... என்னவெல்லாமோ உளறுகிறார். நாக்கு எழவில்லை, வார்த்தைகள் பின்னுகின்றன. அவர் பிதற்று கிறார். புதுக்கடை முதலாளிதான் கவுண்டருக்கு முழு விபரத்தையும் சொன்னார்.

"லிங்கசிவம் அண்ணாச்சி இந்தியாவுக்குப் போய் ஆறு நாளாச்சு...! ஏறப்பிலேனிலேதான் போனார். அவர் கொடுக்க வேண்டிய கடனுக்கு இந்தக் கடையை என் பேருல எழுதி வச்சிட்டாரு...ஓங்களுக்கு ஏதும் 'கொடுக்கல் வாங்கல் கிடுக்கல் வாங்கல்!' இருக்குதோ?" ரேடியோ சத்தத்தைக் குறைத்துக் கொண்டே மோகன விலாஸ் முதலாளி கவுண்டரைக் கேட்டார்.

மயங்கி விழுந்த கவுண்டரைத் தூக்கி அணைத்து தண்ணீர் தெளித்தான் லிங்கசிவம் அண்ணாச்சியின் பழையக் கடைப் பொடியன்!

கவுண்டரின் குடும்பத்து பாஸ்போர்ட், குடும்ப கார்டு கள் எல்லாம் மோகனவிலாஸ் ஓட்டல் வாசலில் சிதறிக் கிடக்கின்றன. அவர்..இனி... எங்கே இந்தியா போவது..?

❑ ❑ ❑

(சிந்தாமணி—16-05-1969)

# அலவன்ஸ் லேபரர்

''கருப்பட்டியிலும்கல்லு இருக்கத்தாண்டி செய்யும்!''

'அதுக்காக கல்லையும் கடிக்கணுமா...'''

''இப்போ என்னா செஞ்சு தொலைக்கணும்?''

''பெரிய கிளாக்கர் வீட்டுல போய் இந்த மாதிரி அசிங்கத்தனமான வேலைகள் செய்யக் கூடாதுன்னுதான் சொல்றேன்.''

''பழைய பழக்கத்தை திடுதிப்பின்னு பாதியிலே முறிக்க முடியுமா?''

அவனுக்கும் அவளுக்கும் இந்தக் காரச்சாரமான தர்க்கம் நடந்து கொண்டிருக்கும் போது பெரிய கிளாக் கரய்யா வீட்டிலிருந்து ஓலை வந்தது.

''ஏய் சீரங்கா...! ஏய் சீரங்கா...!'' பங்களா படிக்கட்டி லிருந்து ஒரு சின்ன வாண்டு— 'பெரியய்யாவின்' கடைசிப் புத்திரன் சத்தமிட்டுக் கொண்டிருந்தான் சீரங்கன் குடித்துக் கொண்டிருந்த தேநீரைக் கோப்பையிலேயே துப்பி விட்டு ''சின்னையா கூப்பிடுறாரு!'' என்று ஓடினான்.

அவன் சம்சாரத்துக்கு அழுகையும் ஆத்திரமும் வந்தது.

வராமல் என்ன செய்யும்? ஐயா வீட்டுப் புள்ளை களெல்லாம் ''அடே புடே''...'' ''வா...போ...'' என்று தான் கூப்பிடும். தன் புருஷன் சீரங்கன் எத்தனை வயசு மனுசன்...? அவரை பேர் சொல்லிதான் கூப்பிடுவாங்க... அப்பன் உத்தியோகம் பார்க்கிறான் என்ற திமிர் அதுகளுக்கு அஞ்சி வயசிலேயே பாலோடு கலந்து வரும். அதைப் பற்றி யெல்லாம் நினைத்துக் கவலைப்படக் கூடாது.

— இன்னும் சில தினங்களில் பொங்கல்...

நாளையோடு லயத்து வாசல்களெல்லாம் பழையபடி நாற்றம் எடுக்கும். சீரங்கன் சம்சாரம் முன்வாசலைக் கூட்டி சாணி தெளித்துக் கோலம் போடப் போனாள்.

ஓட்டமும் நடையுமாக சீரங்கன் ''சின்னையா'' வோடு பங்களாவை நோக்கிப் போனான்.

பெரியப்பா குடும்பம்... இன்னக்கி படம் பார்க்கப் போறாங்க.. இவனும் பிள்ளைக்குட்டிகளை தூக்கப் பிடிக்க ஓடியாடணும். பெரிய கிளாக்கரய்யா வீட்டில் சீரங்கன் தான் எடுபிடி வேலைக்காரன்-தோட்ட நிர்வாகம் பெரிய கிளாக்கருக்கு வழங்கியிருக்கும் அலவன்ஸ் லேபரர்!' இவனே தான்.

பெரியப்பா எமலோகம் போனாலும் அங்கேயும் எடுபிடி வேலைக்கு சீரங்கனைத்தான் கூட்டிக் கொண்டு போவார். ஆனால் அங்கே தோட்டக் கணக்கில் 'பேர்'' போடமுடியாது.

சீரங்கன் பங்களாவை நெருங்கினான். ஐயாவீட்டு அல்சேசன் நாய் அவனைக் கண்டதும் கொஞ்சிக் கூத் தாடியது. அந்த நாயை லயத்து நாய்களோடு சேரவிடாமல் கழுவி குளிப்பாட்டி பவுடர் பூசி உலாத்தக் கூட்டிக்கொண்டு போவது முதல் இறைச்சி அவித்துப் போடும்வரை சீரங்கன் தான் பொறுப்பு! அய்யா வீட்டு அல்சேசன் சீரங்கனையும் அந்த வீட்டு எஜமானனாக எண்ணி அன்பு காட்டுகிறது.

—ஐயா வீட்டு டிரஸ்ஸிங் ரூம்.

சீரங்கன் பெரியய்யா வீட்டில் கால் போனபடி யெல்லாம் நடமாடுவான். அம்மா எதுவுமே சொல்ல மாட்டாங்க...! அவர்கள் கண்ணாடி முன்னால் உட்கார்ந்த படி கொண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அம்மாவுக்கு இன்று ஒரே குஷி. வாயிலே பாட்டும் கையிலே சீப்பும்!

அம்மா இன்றைக்குப் படம் பார்க்கப் போகிறார்கள். அதற்காக காலையிலிருந்து விதத்தாலே ஒரு கொண்டை போட்டு அழகு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கொண்டை முடிமேலே கோபம் வந்து விட்டது. ''இந்த முடியை கொண்டு போய் மாத்திக்கிட்டு வாடா சீரங்கா!'' என்றார்கள்.

''அம்மாவின் 'நரைச்ச' தலைக்கு கறுப்பு முடி கொஞ்சங்கூட பொருத்தமில்லே... நரைச்ச முடி கலந்த கொண்ட முடி வாங்கிட்டு வரட்டுங்களா?'' என்றான் சீரங்கன். அம்மாவும், ''கொஞ்சம் செம்பட்டை மயிராய் வாங்கிட்டு வாடா'' என்றார்கள்.

கொண்டைமுடி விவகாரங்களெல்லாம் புருசன் பெண்டாட்டி விவகாரங்கள்... இதென்ன பெரிய விசயம்...? வேலைக்காரனிடம் போய் கொண்டைமுடி வாங்கி வரச் சொல்வது கூடத் தப்பா...? அப்படி சொல்வதுதானே இன்றைய நாகரிகம்!

சீரங்கன் கொண்டைமுடி வாங்குவதற்கு சிட்டாய் பறந்து குதிரையாய்த் திரும்பி ஓடி வந்தான்.

பொங்கல் விழா என்றாலும் ஐயாவுக்கு ஆப்பீஸ் வேலை! லீவு நாட்கள், பெருநாள், திருநாட்கள், சாவு, சடங்கு என்றெல்லாம் அவருக்கு வித்தியாசம் கிடையாது. இருபத்தி நான்கு மணித்தியாலமும் தோட்டத்து ஆப்பீசில்

''கெடடா!'' என்றாலும் கிடப்பார். இந்தப் பழக்கம் தமிழ் உத்தியோகஸ்தர்களை மட்டும் பீடித்திருக்கும் ஒரு மனோ வியாதியாகும்! தோட்டத் துரைமார்களோ வாழ்க்கையை நன்றாக மகிழ்ச்சி படுத்திக் கொண்டிருப்பார்கள். கலண்டரில் எப்படா லீவ் நாட்கள் வருகிறதென்று பார்த்துக் கொண்டேயிருப்பார்கள்.

அய்யா பகல் சாப்பாட்டுக்குக்கூட இன்னும் வீட்டுக்கு வரவில்லை. சீரங்கன்தான் சுடு தண்ணீர் போத்தலில் 'டீ' கொண்டு போய் கொடுத்தான்.

''டேய் சீரங்கா! எல்லாரும் ரெடியா இருக்காங்களா?'' பெரியய்யா 'டீ'யை ஸ்டைலாகக் குடித்துக் கொண்டே கேட்டார்.

''புள்ளைக எல்லாரும் உடுத்திட்டாங்க... அம்மா மட்டும் ஓங்களைப் பார்த்துக்கிட்டு இருக்காங்க,'' சீரங்கன் பதில் சொன்னான்.

''ஆறு மணிக்கு முன்னமே தியேட்டரில்ல இருக்க வேணும். இப்போ மணி ஒன்னு... அம்மாவை சேலை கட்டச் சொல்லு நேரம் சரியா வரும்'' என்றார் ஐயா.

அம்மா தனது கல்யாண காலத்து சேலைமுதல் நேற்று வந்த 'நைலக்ஸ்' வரை அள்ளிக்குவித்துக் கொண்டு 'செலக்ஷன்' பண்ணமுடியாமல் சீரங்கனைக் கேட்டார்கள். ''ஓங்க நெறத்துக்குத் தகுந்த நீலக்கலர் ரவுக்கைக்கு சிவப்புக் கலர் சேலைதான் எடுப்பா இருக்கும்...! அதுவும் அரசாங்கத்துக்கு தகுந்த கலரில் சேலை கட்டினால்தான் மவுஸ்'' என்றான் சீரங்கன்.

பெரியய்யா சம்சாரம் அடிக்கடி சீரங்கனைப் பார்த்து, ''நான் அழகா இருக்கேனா...? எனக்கு எத்தனை வயசு மதிக்கலாம்...?'' கேட்டுக் கொண்டே இருப்பார்கள். சீரங்கனும் அம்மாவின் வயசை படுபாதியாகக் குறைத்து

யாராவது ஒரு சினிமாக்காரியின் பெயரைச் சொல்லி, ''நீங்க அந்த 'ஸ்ரீ'மாதிரி இந்த 'ஸ்ரீ'மாதிரி இருக்கீங் கம்மா!'' என்று சொல்லிவிட்டால் போதும். அம்மா ஓடோடிப் போய் அசலான தேநீர் தயாரித்து கட்டித்தயிர் போல பசும்பாலை ஊற்றி சீரங்கனிடம் கொண்டு வந்து கொடுப்பார்கள்.

பாவம்; இந்த மாதிரி அம்மாமார்கள்... வீட்டு வேலைக் காரனையும், வாசல் கூட்டியையும், பிரட்டுத்துண்டுக் காரனையும், தபால் காரனையும் தவிர வேறு எந்த புது மனிதர்களைச் சந்திப்பார்கள்? ஆடியிலே கோடியிலே ஆஸ்பத்திரிக்கும் கோவிலுக்கும் போவதைத் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் கூட்டு மைனாவைப் போலவே குடியிருக்க வேண்டும்.

இந்த அம்மா எல்லாவற்றிலும் ஒருபடி முன்னேற்றம்... பல்பொடி போட்டியிலிருந்து பார்சோப்பு போட்டிவரை கலந்து கொண்டு ஏகப்பட்ட ரேடியோ பரிசுகளை எத்தனை முறை வாங்கியிருக்கிறார்கள்! இன்னும் சாம்பார் செய்வ தெப்படி? சட்னி செய்வதெப்படி? என்ற ஆராய்ச்சிகளை யெல்லாம் எழுதி ''சமைக்க வாரீர்'' பத்திரிகைளில் பேரும் புகழும் வாங்கியிருக்கிறார்கள்.

பட்டினத்தில் வாழும் பெண்கள் தன் புருஷன்மார்கள் வேலைக்குப் போனபிறகு மெட்னி ஷோவுக்காக தியேட்டர், தியேட்டர்களாய் அலைவார்கள். தோட்டத்துப் பெண்கள் என்ன செய்வார்கள்? இந்த மாதிரி ரேடியோ பெட்டியும், 'சமைக்க வாரீர்' பத்திரிகைளும்தான் இவர்களுக்குத் துணை.

சீரங்கனுக்கு திடீரென வீட்டு ஞாபகம் வந்துவிட்டது.

—இன்று பொங்கல்....

சம்சாரம் பிள்ளைகளை வைத்துக் கொண்டு தனியாகக் கஷ்டப்படுவாள்... மாட்டுப் பட்டியைக் கழுவ வேணும்... மாடுகளைக் குளிப்பாட்ட வேணும்... பொங்கல் வைக்க

வேணும். எவ்வளவோ சொந்த வேலைகள் வீட்டிலே கிடக்கின்றன. டவுனுக்குப்போய் வீட்டுக்கு வேண்டிய சாமான்களெல்லாம் வாங்க வேண்டும். அவளுக்கு டவுன் பழக்கம் கெடையாது... என்னா செய்யப் போறாளோ... நானோ ஐயா வீட்டிலே வந்து கிடக்கிறேன்... இதற்காகத் தான் என் மனைவி என்னைத் திட்டுகிறாள்.

அம்மா சேலை கட்டி முடிவதற்குள் வீட்டு நிலைமையைக் கொஞ்சம் பார்த்துவிட்டு வரலாம் என்று படி இறங்கியவனை, ஜன்னலுக்குள்ளேயிருந்து அந்த அம்மாவும் சத்தம் போடத் தொடங்கினார். "டேய் சீரங்கா...! இப்பவே போக வேணாம்! ஐயா வந்ததும் போ..." என்று தடுத்து விட்டார்கள். இந்த தடையை மீறினால் நாளைக்கு ஐயா வீட்டிலே 'அலவன்ஸ்' வேலைக்கு ஆப்பு! தேயிலைக் காட்டிலே போய் மழையில் நனைந்து வேலை செய்வதை விட ஐயா வீட்டை "சுத்திக்கிட்டு" திரிவதில் எவ்வளவு சுகம்!

இதோ ஐயாவும் வந்துவிட்டார். சாப்பாட்டை மேடையில் கொண்டுவந்து வைத்தான் சீரங்கன். ஐயா கல்யாணம் கட்டிய பிறகும் சீரங்கன் கையாலேதான் சாப்பிடுகிறார்.

—மணி ஐந்து.

சினிமா தியேட்டர்வரை பெரியய்யா குடும்பத்தைக் கொண்டு போய் விடவேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளானான்சீரங்கன்.

பெரியய்யா குடும்பத்தினர் தியேட்டருக்கு வந்து விட்டார்கள். சீரங்கனைத் தியேட்டருக்கு வெளியே நிற்கும்படி ஐயா கட்டளையிட்டார். பிள்ளைகள் தியேட்டருக்குள்ளே அழத்தொடங்கிவிட்டால் வெளியில் கொண்டு வந்து சீரங்கனிடம் ஒப்படைத்துவிட்டு அவர்கள் படம் பார்ப்பார்கள்.

—அன்றைய படத்தில்...கதாநாயகன் கதாநாயகியை எவ்வளவு அன்பாக அணைத்துக் கொண்டிருக்கிறான்...? ஐயாவும் அம்மாவும் என்றோ ஒருநாள்...அப்படி...தங்கள் கடந்த கால நினைவை மீட்டிப் பார்த்தார்கள். ஐயா சிகரட் வாயோடு சிரித்துக்கொண்டார்; அம்மாவும் வெட்கப்பட்டுக் கொண்டார்கள்.

தியேட்டர்வரை தோட்டத்திலிருந்து இரண்டு குழந்தைகளையும் ஒன்றாய் சுமந்துவந்த சீரங்கனை படம் முடியும் வரை வெளியில் நிற்கும்படி ஐயா சொன்னது வேதனையாகவும் ஒரு புறத்தில் வெட்கமாகவும் அவனுக்குப் பட்டது. தைப்பொங்கல்—மாட்டுப் பொங்கல். வீட்டு விசயங்கள் பற்றி ஐயாவிடம் தயங்கித் தயங்கி, பயந்து பயந்து சொல்லவும் ஐயா கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லையே...? ஐயாவுக்கு முன்னே அம்மாவுக்குக் கோபம் "பொத்து"க் கொண்டு வந்தது. "மாட்டுப்பட்டி வேலையை ஒன் சம்சாரம் செஞ்சுக்குவா...நீ இங்க நின்னுதான் ஆகணும்!" என்றார்கள்.

சீரங்கன் தியேட்டர் கோடியில் உட்கார்ந்து தூங்கினான்.

அவனுக்கு ஆத்திரம் பொங்கியது, ஐயா குடும்பத்தினருக்கு மகிழ்ச்சி பெங்கியது; நல்ல நாளும் பெருநாளும் விட்டுக்கு தன் புருஷன் வராதிருப்பதை நினைத்து அவன் மனைவிக்கு அங்கமெல்லாம் பொங்கியது.

—இன்று பொங்கல்; தமிழர் இல்லங்களில் எல்லாம் பாலும் பச்சரிசியும் சர்க்கரையும் பழங்களும் சேர்ந்து பொங்கல் பொங்கி வழியத்தான் போகின்றது.

அந்த 'அலவன்ஸ் லேபரர், வீட்டிலும் ஒரு வகை பொங்கல்தான் பொங்கிக் கொண்டிருக்கிறது. பொங்கலில் தான் எத்தனை மகத்துவங்கள்! எத்தனை தத்துவங்கள்!!

(சிந்தாமணி—11-1-1971)

# இருள்

**க**வ்வாத்து மலை....

ஏழு வருஷத்துத் தேயிலையை இப்பொழுதுதான் வெட்டத்தொடங்கியுள்ளார்கள்... சைனாத் தேயிலை... உருக்குக் கம்பிகளைப் போன்று பின்னிக்கிடக்கும் வாதுகளை வெட்டி வீழ்த்துவது பெருங் கஷ்டம். தீட்டிய கத்தியும் மழுங்கிப் போகிறது. கரங்கள் ஓயாது வெட்டிக் கொண்டு போகும் தொழிலாளர்களின் தோள்பட்டைகள் மாய்ச்சலடைந்து களைக்கின்றன.

வெய்யில் காலத்தில்...அதுவும் ஏழு வருஷத்துச் சைனாத் தேயிலையைக் கவ்வாத்துச் செய்வதென்றால் அது பெரிய கைங்கரியம்...அவர்களுக்கு ஒருநாள் கூலிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கணக்கோ, இருநூற்றைம்பது மரங்கள்!

பழனிக்குத் தோள்பட்டையைத் தூக்க முடியவில்லை. இடுப்பும் வலி எடுத்துவிட்டது. கரங்களும் அசைய மறுக்கின்றன.

ஒரு தேயிலைக் கிளையை வளைக்கவும் அதை வெட்டியும் வெட்டாமலும் ரோட்டை எட்டி எட்டிப் பார்ப்பதுமாக இருந்தான்.

மணி பத்தரை. வெய்யில் ஏறிவிட்டது. ''தேத்தண்ணி'' கொண்டு வரும் மகளை இன்னும் காணோம்...தோட்டக்

கணக்கில் கவ்வாத்துக்காரர்களுக்குக் கொடுக்கும் ''தேத்தண்ணி''யும் ஒரு தேத்தண்ணியா? தேநீர் தயாரிப்பவனும் மலைக்காட்டில் கிடக்கும் குப்பை கூளங்களைப் பொருக்கி தனல் மூட்டித் தயாரிக்கும் சாயத்தில் புகை நாற்றம் அடிக்கும்.

அந்தப் புகை கவ்விய கசப்புச்சாயத்தைக் குடிக்கக்கூட ஒரு கரண்டி சீனி ஒழுங்காகக் கிடைக்காது! தேயிலை இலையிற் குவளை மடித்து சீனி அளந்து கொடுப்பான்! ''தேத்தண்ணிக்காரன்'' பெரிய கணக்குப்பிள்ளையின் சீடப்பிள்ளை. அவன் ஐயா அளந்து கொடுத்த சிக்கனத்தை மீறிவிட்டால் அடுத்தநாள் கவ்வாத்துக்கத்தியை எடுத்துக் கொண்டு அவனும் இடுப்பு ஒடிய சைனாத் தேயிலையை வெட்ட வேண்டிய நிலை வந்துவிடும்!

பழனி காலையில் உப்புமா சாப்பிட்டு வந்தான். வெய்யில் ஏற ஏற அவன் உடல் வெடவெடத்து ஆடியது. ''கத்தி மழுங்கிப் போச்சி கங்காணியாரே...'' என்று பொய்யடித்தவன் தீட்டுக்கட்டையும் தீட்டுக் கல்லையும் தூக்கிக்கொண்டு நிழற்படர்ந்த ஒரு கானுக்குள்ளே போய் உட்கார்ந்து கொண்டான்.

நிழலுக்குள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கும் பழனிக்கு வீட்டு நிலைமை நினைவுக்கு வந்தது. அவனது மகள் பாக்கியத்தின் சுகவீனத்தை எண்ணி எண்ணி வருந்தினான். தங்க விக்கிரகமாய் வடித்தெடுத்த இருபது வயதுக்குமரி, பத்து நாட்களாக காய்ச்சலில் தலை சாய்ந்து கிடக்கிறாள்..

அவனுக்கு அவள் பெண்ணாய்ப் பிறந்தாலும் குடும்ப நிர்வாகத்தை எடுத்துச் செய்வதிலும் ஆண்பிள்ளையைப் போல உழைத்துச் சம்பாதித்துக் கைக்கு உதவியாய் இருப்பதிலும் பாக்கியம் பழனிக்குக் கிடைத்த ஒரு பெரும்பாக்கியம். அவள் இன்று பத்து நாட்களாய் படுக்கையில் கிடப்பதில் அவனது குடும்பமே ஆட்டம் கண்டுவிட்டது.

வெட்டிப் போட்ட தேயிலை வாதுகள் வெய்யிலில் வதங்கி ஒரு மயக்க வாடையை வீசியது.

ரோட்டை எட்டிப் பார்த்தான். அதோ! சின்னக்குட்டி கயிறு சாக்கை எடுத்துக்கொண்டு தேத்தண்ணி போத்தலோடு ஓடி வருகிறாள்...''போத்தலை வச்சிக்கிட்டு ஓடிவர வேணாமுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்...கேக்குதா!''

வெட்டிப் போட்ட கவ்வாத்து சருகுகளுக்கிடையிற் பெரிய பாவாடையைக் கட்டிக்கொண்டு சிக்கித் தடுமாறும் சின்னக்குட்டி கையிலிருந்த தேநீர்ப் போத்தலை வாங்கிக் கொண்ட பழனி அந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டான்.

சுட்ட ரொட்டியும் மாசிச்சம்பலும் வைத்து வேலைக் காட்டுக்கு அனுப்பியிருந்தாள் பாப்பாத்தி. ரொட்டிக்குள்ளே சம்பலை வைத்து மடித்துக் கடித்து வாய்க்குள்ளே போட்டு அதக்கி விழுங்கியபடி ''சாயத்தண்ணி''யை போத்தலோடு சாய்த்து மொடக் மொடக்கென்று குடித்து ஆயாசம் தீரும்போது...ஓர் உழைத்துக் களைத்த தொழிலாளியின் உள்ளம் எப்படி இறுமாப்பு அடைகிறது...!

சாப்பிட்டு முடித்த தெம்பில் ஒரு ஏப்பத்தை விட்டவன், மிஞ்சிய தேத்தண்ணியை வைத்துக்கொண்டு, அடுத்த நிரை சிவனாண்டியின் மேல் ஒரு தேயிலை வாதை தூக்கிப்போட்டு ஜாடை காட்டினான். இல்லாவிட்டால் ஒரு போத்தல் தேநீருக்கு இருபது பேர் ஓடி வந்து விடுவார்கள்!

''...அக்காளுக்கு இப்ப காய்ச்சல் எப்பிடி...? என்னமும் சாப்பிட்டுச்சா? ஒங்காயி என்னா பண்ணுறா...?'' பழனி சின்னக்குட்டியைக் கேட்டான்.

...''அக்காளுக்குச் சாப்பாடு வேணாமாம்... படுத்தே கெடக்குது...காச்ச அப்பிடியேத்தான் அடிக்குது.. ஆயி

அடுப்பு போட்டுக்கிட்டு இருக்குது...'' சின்னக்குட்டி சொன்னாள்.''அந்த மனுசி வேலைக்குப் போகாமே வீட்டுல இருக்கிற நேரமெல்லாம் அடுப்பை ஒடச்சி ''ரிப்பேர்'' பாக்குறதுதான் வேலை!

காச்சல் கார புள்ளை வீட்டுல படுத்துக் கெடக்குது... அவளை வீட்டை மொளுகி, ஈரமாக்க வேணாமுன்னு சொல்லு...'' சின்னக்குட்டி விறகுக் கட்டுடனும் தேத் தண்ணி போத்தலுடனும் வீட்டை நோக்கிச் சென்றாள்.

பசியாறிய பழனி, மீண்டும் சைனாத் தேயிலையிற் கத்தியை வைத்தான். அவனுக்கு மீண்டும் மகள் நினைவு வந்து மனத்தைக் குடைந்தது. அவனும் பாக்கியத்துக்குச் செய்யாத வைத்தியம் இல்லை என்று சொல்லிவிடக் கூடாது! நெருப்புக் சாய்ச்சலில் உளறிக் கொண்டு கிடக்கும் அவளுக்கு ஏதோ கோளாறு என்று கட்டாரிகளையும் நூல் கட்டுகிறவனையும் தேடியோடிக் கொண்டிருக்கிறான்.

தோட்டம் தோட்டமாக சோதிடக்காரர்களைத் தேடிக் கொண்டு மகளது ஜாதகத்தை நோட்டமிட்டுக் கொண்டிருப்பதிலேயேதான் அவனது முழு நேரமும் செலவாகிக் கொண்டிருக்கிறது.

''பாக்கியம் புஷ்பவதியாகிய நேரம் பொல்லாதது! அவளுக்குச் செவ்வாய்த் தோஷம்!! இந்த வருஷம் முடியும் வரை அவளுக்கு இப்படிப் பல கண்டங்கள் இருக்கும். அதைப்பற்றிக் கவலை வேண்டாம்'' என்று சோதிடர் சொல்லியிருக்கிறார்...

கவ்வாத்துக் கணக்கை இன்றைக்கு வெள்ளனவே முடிக்கா விட்டாலும், கங்காணியாரிடம் லீவு கேட்டுக் கொண்டு கருப்பனைக் கூட்டி வருவதற்கு பழனி காலையிலேயே பாப்பாத்தியிடம் சொல்லி விட்டு வந்தான். கருப்பன் முத்துக்கல்லுப் போட்டுப்பார்ப்பதில் கெட்டிக் காரனாம்... கருப்பன் வாக்கு...தேவ வாக்கு. அவன்

வாயிலிருந்து வருகிற வார்த்தையெல்லாம் அப்படியே பிசகாமல் நடக்குது என்று தோட்டமே பேசிக் கொள்ளும் போது பழனி அவனையும் விட்டு வைக்கவில்லை.

கருப்பனுக்கும் ஒரு ஐந்து ரூபாய் போய்த் தொலையட்டும்...மகள் பிழைத்தாற் போதும்.

காட்டுத் தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்டு, இரண்டு வாய் அள்ளிப் பருகிவிட்டு ஓட்டமும் நடையுமு மாகப் போய், ஆத்து லயத்து நாய்க்குப் பயந்தவனாய் ''மாமு...மாமு'' என்று சிவனாண்டியைக் கூப்பிட்டான் பழனி.

''கருப்பன் வூட்டு கடிநாயை கொழுந்து லொறி நசுக்கிப் போட்டிருச்சு...நீங்க பயமில்லாம வாங்க மாமு'' என்றான்- சிவனாண்டியும்.

எல்லாம் நல்லதுக்கே என்று கருப்பன் வீட்டுக்குள்ளே நுழைந்தான் பழனி. அடுத்த தோட்டத்தில் ஒருவன் மாட்டுக்குச் சுகமில்லை யென்று, கருப்பனைக் கையோடு அழைத்துப்போக வந்திருக்கிறான். பழனி காய்ச்சலில் உளறிக் கொண்டிருக்கும் மகளின் நிலையக் கூறி அழுதான்.

கருப்பனும் தற்காலிக முதலுதவியாய்க் கொஞ்சம் விபூதி மந்திரித்து,எண்ணெய்யும் கொடுத்து அனுப்பினான்.

கருப்பன் கொடுத்த விபூதியை பயபக்தியோடு தலைப் பாகை துணியில் முடிந்து கொண்டு எண்ணெய் குப்பியோடு குறுக்குப் பாதை ஏற்றத்தில் ஏறினான் பழனி.

''மகளுக்குக் காச்சல் வர வர கூடுது.. பத்து நாளைக் குள்ளே நாரும் தோலுமா போய்ட்டாள். நான் பெத்தப் புள்ளைக்கு எதுவும் நடந்து போச்சின்னா எங்குடும்பமே மண்ணா போயிரும்...தாயே மாரி! ஒனக்கு எந்த கொறையுமே வைக்கல்ல...எம்புள்ளைய காப்பாத்து...''

மாரியம்மன் கோவிலைக் கடந்து வந்துவிட்ட பழனி கலங்கிய கண்களோடு காட்டு முனியாண்டி கோவிலிலும் விழுந்து கும்பிட்டான்.

வீடு நெருங்குகிறது...அவன் இருக்கும் அந்த லயம் இருபது காம்பிராக்கள் அடங்கிய "இரட்டை சைட்" லயம். பழனி அந்த தொங்க வீட்டில்தான் இருக்கிறான். மேட்டிலே கட்டிக் கிடக்கும் அந்த நான்கு லயங்களின் சாக்கடை கான்களும் அவனது லயத்து சாக்கடையும் அவனது வீட்டு வாசல் முன்றலில்தான் சங்சமமாகின்றன... துர்நாற்றமும் சேறும் நாசியைத் துளைக்கும் அதேஇடத்தில் தான் மூன்று லயத்துக்குப்பையும் குவிக்கப்பட்டிருக்கின்றது. வாசல் கூட்டியும் ஆடிக்கொரு முறை, அமாவாசைக் கொருமுறைதான் வந்து போவான்.

குப்பை மேட்டு கொசுக் கடிக்கும் சாக்கடை நாற்றத் துக்கும் பழகிப்போன பழனி கன வேகமாக வந்து இஸ்தோப்புக் கதவைத் திறந்தான்.

மகளுக்கு காய்ச்சல் எத்தனையோ டிகிரியில் கொதிக் கிறது. "குளிர் குளிர்" என்று நடுங்குகிறாள்..என்ன வெல்லாமோ உளறுகிறாள். சுருட்டி மடக்கிக் கொண்டு கந்தற் கம்பளியில் துவண்டு கிடக்கும் அவளைத் தூக்கி அணைத்து கருப்பன் கொடுத்த விபூதியை பூசிவாய்க்குள்ளே யும் கொஞ்சம் போட்டு எண்ணெய்யை நெற்றியில் மூன்று முறை தேய்த்தான்.

"ராத்திரிக்குள்ளே புள்ளைக்கு காய்ச்சல் பறந்து போவும்" என்றவன், "மருந்துக்காரன் லயத்துப் பக்கம் வந்தானா?" என்று கேட்டான். "இல்லை" என்று மூலை யில் குந்தியிருக்கும் பாப்பாத்தி தலையாட்டினாள்.

"தோட்டத்து மருந்துக்காரன்கிட்டே புள்ளைக்கு காய்ச்சல் கீச்சல்னு காட்டிப்புடாதே அவன் போயி டக்டருக்கிட்ட சொல்லிப்புடுவான். பொறகு டக்டர்

பெரியாஸ்பத்திரிக்கு துண்டு குடுத்திட்டானா போச்சு! மகளைக் கொண்டு கவுருமண்டு வாட்டுல அனாதையா போட்டுபுடுவானுங்க. . ரொம்ப கவனம்..!'' என்று பாப்பாத்திக்கு எச்சரிக்கை கொடுத்தான் பழனி.

நாளைக்கு கருப்பன் வருவாரு...கொஞ்சம் சாமி சாமான் வாங்கி வைக்கணும். என்று முனகியபடி அடுத்த வீட்டு ராமையா தலைவரைச் சந்திக்கப் போய் விட்டான்.

''இந்தக் காம்பராவுக்கு வந்த நாளா எங்குடும்பம் நனியும் பிணியுமாத்தான் கெடக்குது..ஆள் மாத்தி ஆள் நோய் நொடியிலே கெடக்கிறோம். கொஞ்சமும் இந்த வீடு விடிய மாட்டேங்குது . இந்த காம்பிராவை மாத்திக் குடுக்க வேணும்.. இதுக்கு என்னா தலைவரேசொல்றீங்க..?'' என்று கேட்டான்.

ராமையா தலைவரும் பதில் கொடுத்தார். ''அந்த வீடு ஒரு பிசாசு பிடிச்ச வீடு...! நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருப்பேன்...ஒன் மனசு ஒருமா திரியாபோயிடுமுன்னு தான் நான் சொல்லல்லை..''

''நான் இனிமேலும் என் மகளை இந்த நெலமையில் வச்சிருக்க முடியாது..ஓங்க பாதி காம்புரா சும்மாதானே கெடக்கிது .. அதை ஒரு பத்து நாளைக்கு குடுங்க... புள்ளை கொணமானதும் வேற காம்புரா பாத்துக்கலாம்.''

பழனி கும்பிடாத குறையாய் தலைவரை கெஞ்சினான். தலைவரும் அவனுக்கு உதவி செய்தார்.இரவோடு இரவாய் காய்ச்சலில் கிடக்கும் அந்த குமரிப் பிள்ளையை தலைவர் வீட்டு காம்பிராவுக்கு மாற்றம் செய்தார்கள்,

விடிந்துவிட்டது! இன்னும் காய்ச்சல் அவளை கசங்கிய மல்லிகையாக்கிக் கொண்டிருக்கிறது. பழனியும் கருப்பன் கொடுத்த விபூதியையும் எண்ணெய்யையும் வேளா வேளைக்கு மூன்று முறையாகக் கொடுத்துக் கொண்டிருக்

கிறான். டாக்டர் கொடுத்த மருந்தை முறை பிசகாது கொடுக்கும் நர்ஸைபோல.

பாக்கியத்தின் நிலைமையில்எந்தவித மாற்றமுமில்லை. அவள் வாடிய கொழுந்தாய் வதங்கிக் கொண்டேயிருக்கிறாள்.

பழனி, கருப்பனுக்கு ஆள் அனுப்பினான்.

‘‘டவுனிலிருக்கும் டக்டரை கூட்டி வந்து ஊசி போட்டு மருந்து குடுத்தா... சரியாகி விடும்’’ என்று பக்கத்து வீட்டு ஒரு பையன் சொன்னதற்கு பாப்பாத்தி அவன் மேலே பாய்ந்து விழுந்தாள்.

‘‘பத்து நாளா தண்ணிவெண்ணி இல்லாமே எலும்புந் தோலுமா கெடக்கும் என் புள்ள மேலே ஊசியை குத்தச் சொல்லி கொல்ல பாக்குறியா தம்பி?’’ என்று சத்தம் போட்டாள். ‘‘சாமி மந்திருச்சி குடுத்த எண்ணெய்க்கு இங்கிலீஷ் மருந்து பகையை உண்டாக்கும்’’ என்று பழனியும் சொல்லி விட்டான்.

பாப்பாத்தி வீட்டுக்குள்ளே மாட்டியிருக்கும் ராமர் சீதை படத்திலிருந்து எல்லாச் சாமி படங்களுக்கும் பூச்சரம் கட்டி விளக்கு ஏற்றினாள்.

கணேசர் கோவில் ஐயரிடம் நாப்பெத்தெட்டு நாள் போடவேண்டிய விளக்குக்கு எண்ணெய் கூலியும் ஐயர் கூலியும் கொடுத்து விட்டு வந்தான் பழனி.

‘‘காய்ச்சல் கொணமானதும் பாக்கியத்துக்கு பங்குனியிலேயே தேதியை வச்சிப்புடணும்’’ என்றாள் பாப்பாத்தி.

‘‘அந்த ஆசை நெடுநாளாய் எனக்கும் இருக்குது...’’ என்றான் பழனியும்.

படுக்கையிற் கிடக்கும் மகள் "பசி...பசி" என முனகினாள். பழனி தன் இஷ்ட தேவதையை வணங்கினான். "அடி பாப்பாத்தி புள்ளைக்கு பசிக்குதாம்" என்று சொன்னவன், அவள் காதுக்குள்ளே குசுகுசுத்தான்.

கொடாப்பிலே அடைகிடக்கும் கோழியைப் பிடித்து அறுத்து காரசாரமாகக் கறி சமைத்துப் பாக்கியத்துக்கு வயிறு நிறைய சோறு கொடுத்தார்கள்.

—மறு நாள் விடிந்தது.

காய்ச்சலில் உழன்ற பாக்கியத்தின் உடல் ஊதி, உப்பி வீங்கி கிடந்தது உடல் முழுக்க கொப்புளமும் போட்டிருந்தன.

அவளுக்கு அம்மை நோயும் கண்டுள்ளது.

"சொகமில்லாத ஆள்...? சொகமில்லாத ஆள்...?" என்று ராகமிட்டபடி தோட்டத்து மருந்துக்காரன் மருந்து குட்டிச்சாக்கை தோளில் மாட்டிக் கொண்டு லயத்தைச் சுற்றி வந்தான். தோட்டத்து டக்டரும் மருந்துக்காரனுக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தார்.

"மருந்துக்காரனும் டக்டரும் வர்றாங்க" என்று சின்னக்குட்டி சொன்னவுடனேயே கதவுக்குத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள் பாப்பாத்தி.

மாலை மயங்கி, அந்தியும் சாய்ந்தது.

காட்டு பீலியில் ஸ்நானஞ் செய்து ஈரச்சேலையோடு மாரியம்மன் கோவிலைச் சுற்றி குடம் குடமாய் நீர் வார்த்து சூடம் கொளுத்திக் கோவில் வாசல் மண்ணை அள்ளிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினாள், பாப்பாத்தி.

—விளக்கு வைக்கும் நேரம்.

"பீலிக்கரை லயத்துப் பார்வதிகிட்டே மாரியம்மன் தாலாட்டு பொஸ்தகம் வாங்கிட்டு போயி விடிய விடிய மகமாயி மேலே பாடணும்" என்று குறுக்குப் படிக்கட்டில்

இறங்கினாள். பார்வதியிடம் ஒப்பாரி புத்தகமும் ஏராளம் இருக்கின்றன.

யாரும் சாவதற்கு முன்பே ஒப்பாரி மனனம் செய்து வைத்துக் கொள்வதில் தோட்டத்துப் பெண்கள் கெட்டிக் காரிகள்.

மாரியம்மன் தாலாட்டுப் புத்தகத்தை பெற்றுக் கொண்டவள், பீலிக் கரையில் ஒரு குடம் தண்ணீரையும் நிறைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினாள்.

பழனியும் சின்னக் சுட்டியும் தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு அலறினார்கள். ''பாக்கியம் நம்மலை ஏமாத்திட்டுப் போய்ட்டாளே!'' என்று குமுறிக் கதறினான் பழனி. அவளும் குடத்தைத் தெருவிலேயே போட்டுவிட்டு உருண்டு புரண்டாள்.

''அடி மாரி! ஒனக்குகண்ணு கெட்டுபோச்சா?'' என்று திட்டினாள். நான்கு லயத்துச் சனங்களும் பழனி வீட்டிலே கூடினார்கள்- அவர்களுக்கு அப்பொழுதுதான் தெரியும் பாப்பாத்தி மகள் பாக்கியத்துக்குச் சுகமில்லாமல் இருந்த செய்தி.

''ஆண்டவனுக்கே பாரத்தைக் குடுத்தோம், அவனே கையை விரிச்சிட்ட பொறகு யாரை நொந்துக்கிறது...'' வியாதியிற் கிடந்த நோயாளிக்கு வைத்தியம் செய்யாமற் பள்ளிவாசல் பாவா பூஜித்துக் கொடுத்த தண்ணீரையும், கருப்பன் மந்திரித்த விபூதியையும் நம்பி மோசம் போன பழனியும் பாப்பாத்தியும் கடவுள் மீது குற்றத்தைச் சுமத்தினார்கள்.

அவர்கள் இருளில் வாழ்கின்றார்கள்...

இன்னும் அவர்களுக்கு வழி தெரியவில்லை!

(சிந்தாமணி - 9-2-1971)

# ஞான பிரவேசம்

அவள் கதையைக் கேட்டதும் கரு நாகம் தீண்டியது போல் அவன் உடலெல்லாம் விஷம் ஏறியது.

அந்த அப்பாவித் தந்தை துடித்தான். குமுறினான். சித்தம் கலங்கினான். அவனுள் கொந்தளித்த உணர்வுகள் குமுழியிட்டுச் சிதறின.

—அந்தச் சூழ் நிலையில்,

வெறும் தேயிலைச் செடியைத் தவிர வேறு உலகமே தெரியாத ஒரு தோட்டத்தொழிலாளி நூறு மைல்களுக்கப் பால் வெளியே வந்து பாஷை புரியாத ஒரு சிங்கள நாட்டுக் குள் அகப்பட்டுக் கொண்டால் என்ன பண்ணுவான்? அவனுக்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. வெறும் ஜடமாக நின்றுகொண்டிருந்த அவன் ஆத்திரம் ஆற இப்படி ஒரு வார்த்தையை மட்டும் கேட்டுத் தீர்த்தான்.

''ஏண்டா வேச மகனே...! இதுக்காடா என் புள்ளைய அனுப்பி வைச்சேன்...?''

இந்த ஆவேசமான வார்த்தையைப் புரிந்து கொள்ளாத அந்த மனிதனும் மூன்று பத்து ரூபாய் நோட்டுக்களை முனியாண்டியிடம் நீட்டினான். அதை 'சடக்' கெனப் பிடுங்கி சுக்கு நூறாய்க் கிழித்து அவன் முகத்திலே திருப்பி

அடித்தான் முனியாண்டி. ஆத்திரமடைந்த அந்த ஆள் வேகமாகத் திரும்பித் தன் காரை நோக்கிச் சென்றான்.

"இன்னைக்கு என்னா நடந்தாலும் பரவாயில்லே... அவனுக்கு ஒரு அறையாவதுஎன் கையாலே குடுக்கணும்..." என்ற வெறியில் அந்த ஆசாமியின் பின்னால் ஓடினான் முனியாண்டி.

வண்டி பசக்கென இழுத்துப் பறந்தோடியது. முனியாண்டி வண்டி சென்று மறையும் வரை வைத்த விழி வாங்காது பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அறியாத ஊரில்... புரியாத பாஷையில் தெரியாத மனிதரோடு சகவாசம்...

தென்னையும் பலாவும் அடர்ந்து படர்ந்து இருள் கவ்விக் கிடக்கும் அந்த நாட்டுச் சூழலிலிருந்து, மகளைக் கூட்டிக் கொண்டு, பஸ் பிடிக்க நெடுஞ்சாலைக்கு வந்தான் முனியாண்டி. கந்தானைவரை நடந்து வந்து விட்ட அவர்களை நீர்கொழும்பிலிருந்துஓடிவரும் 'கோட்டை பஸ்' ஏற்றிக் கொண்டு கொழும்பை நோக்கி வந்தது.

கோட்டை புகையிரத நிலையம் தன் நெற்றியில் பதித்திருக்கும் கடிகாரமுள்ளை ஐந்துக்கு நேரே காட்டியது.

அட்டனை கடந்து புறப்படும் பதுளை வண்டியும் நான்காம் மேடையில் காத்திருந்தது. வண்டிக்குள் ஏறிய முனியாண்டி தன் மகளின் முகத்தைப் பார்க்க விரும்பாது ஜன்னலுக்கு வெளியே தலையைப் போட்டுக் கொணடான்.

—வண்டியும் ஓடியது.

அவமானத்தை— இழிவை— மனித சேட்டையின் ஈனச்செயலை—அசுத்தத்தைக் கண்ணார, மனமார விலை கொடுத்து வாங்கிச் செல்லும் தனது சுயபுத்திக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்ற ஏக்க நினைப்புக்கு விடை

காண முடியாதவனாய் சமைந்திருக்கும் அவனை வெகு வேகமாக 'உடரட்டமெனிக்கே' இழுத்துச் சென்றாள்.

''இந்த வண்டி இங்கேயே தடம் புரண்டு விடக் கூடாதா...? நானும் இவளும் இப்படியே அழிந்து போனாலும் ஊர் உலகத்துக்கும் ஒன்றுமே தெரியாமல் போகும்! நடந்துவிட்ட பழியை விபத்தின்மேலே போட்டு மறைத்துக் கொள்ளலாம்...''

முனியாண்டியின் மூளை கொதிக்கக் கொதிக்கச் செயல் பட்டுக் கொண்டிருந்தது.

அவன் வாடிக்கை வைத்திருக்கும் செலவு கடை முதலாளி செய்த சிபார்சில், வீட்டு வேலைக்காரியாகத் தனது பதின்மூன்று வயது மகளை, மாதச் சம்பளம் பத்து ரூபாய் 'ரேட்'டோடு 'ஜாஎலை'யிலிருக்கும் ஒருபணக்காரத் துரையின் பங்களாவுக்கு அனுப்பி வைத்திருந்தான்.

''வயசுக்கு வருவதற்கு 'இந்தா...இந்தா'ன்னு இருக்கும் பொட்டைப்புள்ளைகளை இப்பிடி...அந்நிய வூடுகளுக்கு அனுப்பலாமா?'' என்று அடுத்த வீட்டு பெரிய கிழவி கேட்டது கூட அவனுக்கு நெருஞ்சி முள் நெருடுவது போல வலிக்கவும் செய்தது.

பெற்ற தாய்க்கு அணைந்த அடுப்பை ஊதிவிடக் குழல் எடுத்துக் கொடுக்கக்கூட உதவ முடியாத குழந்தைகள் அந்நிய வீடுகளுக்கு அடிமைகளாக விற்கப்படுவதைப் போல 'வலும்பல் வேலை' செய்ய நிர்ப்பந்திக்கப்படு கின்றனர். சீமாட்டிகளின் தீட்டுச்சேலை கழுவவும் அவர்கள் கொஞ்சிக் குலாவிய படுக்கைகளைத் துப்புரவு செய்யவும் எச்சில் கோப்பைகளைச் சுத்தஞ் செய்யவும், விடிய விடியக் கிணற்று நீர் இழுக்கவும், மாடு மேய்க்கவும் அந்தச் சிறுசுகள் உபயோகப்படுத்தப் படுகின்றனர்.

—காரணம்.

'அவைகள்' அடிமைகளாய் அங்கு அனுப்பப்பட்டு சுதந்திரமாக அவர்களால் நடத்தப்படுகின்றார்கள்.

ஏழ்மை நிலையில் வாழ்பவர்கள் கூட தங்கள் வீடுகளுக்கு "கை உதவிக்கு" என்று வேலைக்காரர்கள்தேடுவது வழக்கமாகி விட்டது. இவர்களெல்லாம் மலை நாட்டுத் தொழிலாளர் குடும்பங்களைத் தேடி வருவார்கள். வேலைக்காரர்கள் என்றால் அது மலைநாட்டுத் தொழிலாளர் குடும்பங்கள் தான் என்ற மனநிலை எல்லோரிடமும் ஊறி இருந்தது. இலக்கியம், நாடகம், சினிமாவில் கூட வேலைக்காரப் பாத்திரம் இந்தியத் தோட்டத் தமிழராகத் தான் சித்தரிக்கப்படுகின்றன. இந்த நிலைமை உருவாகியதற்குக் காரணம் தோட்டத் தமிழர்கள் பொருளாதார. சமூக வாழ்வில் இதர மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கு உயர முடியாமல் இருப்பதேயாகும்.

"புள்ளை வேற வூட்டுக்குப் போனா நேரத்துக்கு நேரம் பசியாற சோறு கெடைக்கும்...தோட்டத்த வுட்டு வெளியே போனா...யாரும் நல்லா இருப்பாங்க" என்ற நம்பிக்கையால்—நப்பாசையால்தான் முனியாண்டி தன் மகளை அப்படி...வீட்டு வேலைக்காக அனுப்பி வைத்தான்.

இந்தக் குறுகிய இடைவெளி நினைப்பில் முனியாண்டி திளைத்துக் களைத்தான். இப்படி ஒரு நிலையில் 'ஊழியம்' செய்யும் தன் மகளை மூன்று வருசத்திற்கு இது மூன்றாவது தடவையாக அவன் பார்க்கப்போய்...நடந்துவிட்ட நாடகம் தான் இது...

**தோ**ட்டத்து மக்கள் மாரியம்மன் விழா நடத்தப் போகிறார்கள்.

"நம்ம தோட்டத்துல திருவிழா போடப் போறாங்க... போயி மகளைக் கூட்டிக்கிட்டு வாங்க...புள்ள கண்ணுக்குள்ளே கெடக்குது" என்று 'கரைச்சல்' பண்ணிய மனைவி

யின் வாஞ்சையை மடியில் கட்டிக்கொண்டு கொழும்புக்குப் பயணம் செய்த முனியாண்டிக்குத்தான் இந்தக் 'கொடுவினை' காத்திருந்தது.

அவனது அனுபவ ரீதியில் பத்திரிகைகளின் செய்திகள் எப்படி யெப்படியெல்லாமோ பயமுறுத்தின. ''வேலைக்காரிக்கும் வீட்டுக்காரிக்கும் மோதல்...'' ''வேலைக்காரப் பெண் கொலை செய்யப்பட்டாள்'' ''வேலைக்காரச் சிறுமி நெருப்புக் காயங்களுடன் கிணற்றுக்குள் இறந்து கிடந்தாள்'' இப்படியான எத்தனையோ மர்மச் சம்பவங்கள் 'பங்களா வாசிகளின் விளையாட்டுக்களில்' நடக்கின்றன? எல்லாவற்றையும் ஓடும் ரயிலுக்குள்ளேயே அசைபோட்டுக் கொண்டு செல்லும் முனியாண்டி நீண்டவொரு பெருமூச்சு விட்டான்.

''ஏழையாய்ப் பொறந்திட்டா என்னென்ன அநியாயமெல்லாம் காத்துக் கெடக்குது...பட்டினியாய்ப் போராடி நலிஞ்சாலும் மானத்தோடு வாழக்கூட எவ்வளவு எடைஞ்சலா இருக்கு...'' அவன் மனம் வேதனையால் வெதும்பியது. ''ச்சை! இனி ஒரு ஜென்மத்துக்கு இந்த மாதிரி நடந்துக்கக் கூடாது.'' முனியாண்டியின் ரத்த நரம்புகள் விண் விண்ணென்று தெறித்தன.

வீட்டையும் தோட்டத்தையும் அவனுக்கு வேண்டிய நாலு நல்ல மனுசர்களையும் நினைக்கும் போதெல்லாம் அவன் நெஞ்சில் நெருப்பெரிந்தது.

எந்த முகத்தோடு இன்றைக்கு இந்த நிலையில்மகளைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போவது என்று சஞ்சலப்பட்டு முடிவு காணத் துடிக்கும் முனியாண்டியை அதற்கு மேலும் சுமக்க மறுத்தது, அட்டனுக்கு வந்து விட்ட வண்டி.

**பி**ள்ளையைக் கூட்டிக் கொண்டு இறங்கியவன், கர்ணகடூர இருளையும் பொருட்படுத்தாமல், தனக்கு

நன்கு பழகிப் போன அந்தக் குறுக்குப்பாதையில் இறங்கி நடந்தான்,

—பக்கத்துத் தோட்டத்து 'பவுண்டரி'யைப் பிரித்துக் காட்டும் சடை சவுக்கு மரங்கள் காற்றில் அசைந்து பேயாட்டம் ஆடின.

—தோட்டம் நெருங்கிவிட்டது. மாரியம்மன் கோவிலில் வெளிச்சம் தெரிந்தது.ஒலி பெருக்கி சத்தம் வானைப்பிளந்து கொண்டிருந்தது...இன்றைக்கு நாடகம் போடுகிறார்கள்... முனியாண்டிக்கு நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. எல்லா லயத்துச் சனங்களும் இப்போது கோவிலில்தான் இருப்பார்கள். அந்தளவுக்கு அவன் தப்பித்துக்கொண்டான். பிள்ளையை யாருக்கும் தெரியாம லேயே வீட்டுக்குக் கொண்டு போய் ஆக வேண்டியதை 'கப்சிப்'பென்று முடித்துக்கொள்ள வேண்டும்...

போக வேண்டிய பாதையை விட்டு விட்டு, கோவிலுக்கு மேலே போகும் சின்ன ரோட்டைக் கடந்து மருந்துக்காரன் லயத்து நாய்களுக்கு அகப்படாமல் பிரட்டுக் களத்துக் குறுக்குப்படியில் இறங்கும்படியாகப் போய் கொல்லைப் புறத்துக் கதவைத் தட்டினான்.

—கதவு திறந்தது.

வீட்டுக்குள் நுழைந்தும் நுழையாமலும் முத்தம்மா முழுகாம இருக்கிற விசயத்தை 'ஒன்னு ரெண்டாக' மனைவி யிடம் சொன்னான். பாம்பை மிதித்தவளாய் விளக்கு மாற்றைத் தூக்கிக் கொண்டு "நஞ்சைத் தின்னவளே! அவளே! இவளே என்று" அவள் குய்யோ முறையோ வென்று கத்தி முடிவதற்குள் அவளைச் சமாதானப்படுத்தி நடந்த உண்மைகளை விளக்கமாகச் சொன்னான் முனியாண்டி.

"செலவுக்கடை மொதலாளி சொன்ன மாதிரியே அவன் ஒரு கோட்டும் சூட்டும் போட்ட தொரைதான்...கட்டிய

பொம்பளையே 'சீ'ன்னு தொரத்துர அளவுக்கு அவ காலைச் சுத்திக்கிட்டு கெடக்குற ஒரு எச்சிப் பயலாம். குடிச்சுப் போட்டு ரவு ஒரு மணிக்கும் ரெண்டு மணிக்கும் வந்து கதவைத் தட்டுவானாம்...அவன் வரும் வரையும் தூங்காம காத்திருந்து கதவைத் தொறப்பதுதான் நம்ம புள்ளைக்கு வேலை...அந்தப் பாம்பு நம்ம புள்ளையையும் ஒரு ராத்திரி கொத்தியிருக்கிறது...கத்தியக் காட்டி... துவக்கைக் காட்டி அந்த எளிய ராஸ்கல் இப்படி நடந்து கொள்ள...புள்ளையும் உயிருக்குப் பயந்து...நெறி கெட்டுப் போச்சி...நல்ல நேரம் பார்த்து நான் போயும் வெஷத்தோட தான் திரும்பி வந்திருக்கேன்...''

''செலவுக் கடை மொதலாளி நாசமா போக...என் புள்ளைய கெடுத்தவன் வூட்டுல இடி வுழுக!'' என்று அவன் மனைவி கதறிப் புலம்பினாள்.

''...மத்தவங்கள ஏசிப் பேசி என்னா பிரயோசனம்...? நம்ம மத்தியில அடிமைப் புத்தியும் அடிமை மனப்பான்மை யும் இருக்கிறப்போ ... மத்தவங்க ஆதிக்கத்தையும் அக்கிரமத்தையும் ஒழிச்சுக்கட்ட முடியுமா...? வயித்துச் சோத்துக்காக இந்த மாதிரி ஈனத்தொழிலுக்கு புள்ளைய அனுப்பி வைச்ச என் தலையில ஒங்கையிலிருக்கிற வெளக்கு மாத்தால ரெண்டு சாத்து...''

சுயமரியாதையால் சுட்டெரிக்கப்பட்ட முனியாண்டி யின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கொதி நீர் கொட்டியது.

அவன் மனைவியும் மாமியாரும் மருந்து அரைத் தார்கள்.

□ □ □

(1971-ம் ஆண்டு—அஞ்சலி—மாத சஞ்சிகை)

# வல்லமை தாராயோ...

சந்தியிலிருக்கும் அந்த ஓட்டலுக்குப் பெயர்தான் அமுதபவான். எல்லோருக்கும் அறிமுகப்பட்டுப்போன ''தோசைகடை'' என்று சொன்னால்தான் அமுதபவானின் பெயர் விளங்கும்!

இங்கு எந்த நேரமும் கூட்டத்துக்குக் குறைவில்லை. ஓட்டல் ஒலி பெருக்கி ஓய்வின்றி அலறிக் கொண்டே யிருக்கும்.

ஓட்டலுக்குள் நுழைந்தேன். சின்னப் பொடியன் சுந்தரம் சிட்டாய் பறந்து ஓடி வருகிறான். ''இன்றைய ஸ்பெஷல் உப்பு மா...சேர்...! கொண்டு வரட்டுங்களா...?'' என்றவன் இலையைக் கழுவி மேசையில் வைக்கிறான். ''உப்பு மா வேண்டாந்தம்பி! இடியப்பம் கொண்டு வா!'' என்கிறேன். இடியப்பம் வருகிறது. பால்சொதியை கவனமாக ஊற்றியவன் என்னைக் கேளாமலேயே ஒரு உளுந்து வடையைக் கொண்டு வந்து சட்னியில் பதித்து வைக்கிறான். இது வியாபார டெக்னிக்! சாப்பிட்டு முடிந்தது. கை கவழுப் போகிறேன். ஒரு 'கப்' தேநீரைக் கொண்டு வந்தவன், கைதுடைக்க கடதாசி துண்டையும் கொடுக்கிறான்...

குறிப்பறிந்து பணிபுரியும் ஒரு மனைவியின் இங்கித அறிவு, சம்பளத்துக்கு வேலை செய்யும் ஒரு சர்வர் பையனிடமும் எவ்வளவு முறையாகக் காணப்படுகிறது.

நான் தேநீரைக் குடித்து விட்டு எழும்புகிறேன் அவன் எப்போதும் போல இன்றைக்கும் அதே கேள்வியைத் தான் கேட்கிறான்.

''என்னாங்க...தொரை! விசாரிச்சீங்களா...? அவன் ஒரு முழங்காலை மடித்துக் கொண்டு புறங்காலைச் சொறிகிறான்.

''அவசரப்படாதே! கொஞ்சம் பொறுமையாய் இரு... இன்னும் ஒரு கெழமைக்குள்ளே விசாரிச்சு சொல்றேன்.'' ஓட்டலைவிட்டு வெளியே வருகிறேன். சுந்தரம் என்னை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டேயிருக்கிறான். அவனது பிஞ்சுக் கன்னங்கள் வேலை மிகுதியால் களைத்துப் போய்... கொவ்வைப்பழமென சிவந்திருக்கிறது...

அந்த தோசைக் கடை...எனது வாடிக்கைக் கடை... சுந்தரம் எனது சப்ளையர் நான் ஒரு வியாபாரக் கம்பெனி யில் வேலை செய்யும் லிகிதர். அவனுக்கும் எனக்கும் இடையில் பிணைந்துள்ள நெருக்கமான உறவுக்குக் காரணம் அவனது வாழ்க்கை.

இந்த உலகத்தில் பிறந்துவிடுகிற ஒவ்வொரு மனித னுடைய வாழ்க்கையும் ஒரு சிறுகதையாகவோ அல்லது தொடர்கதையாவோ அமைந்துவிடுகின்றது. இந்த சிருஷ்டிகளில் துப்பறியும் நாவலாக ஒருவரது வாழ்க்கை யும் இனிமையான காதல் கதையாக வேறொருவரது வாழ்க்கையும், சோகம் நிறைந்த நெடுங்கதையாக இன் னொருவரது வாழ்க்கையும் போய்க் கொண்டுதான் இருக்கிறது.

இந்தப் போக்குகளில், யாருமே 'கணக்கு எடுக்காத' அந்த ஓட்டல் சுந்தரத்தின் வாழ்க்கையிலும் ஒரு சோகம் நிறைந்த நெடுங்கதை புதைந்துதான் கிடக்கிறது.

—ஒருநாள்.

''தம்பி...நீங்க தோட்டத்துப்பக்கமா?...''மேசையிலே பாதித்தோசையிலே சாம்பார் ஊற்றிய பையனைப் பார்த்துக் கேட்டேன் ''ஆமாங்க...'' என்றான் அவன்.

...எனக்கு ஒரே கவலை...

கொழும்பு மாநகரிலுள்ள அத்தனை ஓட்டல்களிலும், தேயிலை, ரப்பர் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர் களின் பிள்ளைகள் தொழில் செய்வதை கவனிக்கும் ஒரு சமுதாயச் சிக்கல் குடிகொண்டிருப்பதை அறிய முடிகிறது, தோட்டங்களில் வாழ வழியின்றி பட்டினங்களை நோக்கி படையெடுக்கும் சிறுவர்களுக்கும் ஹோட்டல்கள் தான் தஞ்சமளிக்கின்றன. படித்தவர்கள் ஒரு மாதிரியாகச் சமாளித்துக் கொள்ளுகின்றனர். படிக்க வசதியில்லாது உழைப்பை மட்டுமே நம்பி ஓடிவரும் இந்தச் சின்னஞ்சிறுசு களுக்கு இந்த ஹோட்டல்கள்தான் புகலிடம் அளிக் கின்றன.

பையனை விசாரணை செய்து அவன் வேலையை சுணக்கம் செய்ய நான் விரும்பவில்லை. முதலாளி ஆயிரந் தடவை எட்டி எட்டிப் பார்க்கிறார்! சில ஹோட்டல்களில் சப்ளையர்மார்களை கையில் போட்டுக் கொண்டு கள்ளத் தனமாகச் சாப்பிடுகிறவர்களும் உண்டு! அவரது பார்வை என் மானப் பிரச்சினையைக் கிளறியது. சுந்தரம் சாம்பார் வாளியோடு தொங்கல் மேசைக்கு ஓடுகிறான்.

இந்த ஹோட்டல் வாழ்க்கையில் நடக்கும் அக்கிரமங் களையெல்லாம் அவன் என்னிடம் சொன்னது போக நான் அறிந்து கொண்ட உண்மைகள் அதிகமானவை.

சுந்தரம் சட்னி கிண்ணத்தோடு என்மேசைக்கு வந் தான். என்னோடு பேசுவதிலும் என்னை உபசரிப்பதிலும் அவனுக்கு ஆர்வம் அதிகம் அந்த ஹோட்டல் அனுபவத்தில் அவனை யாருமே மதிக்காமல் இருக்கும்போது, நான் மாத்திரம் அவனிடம் அன்பை சொரிகின்றேன். ''தம்பி

சொகமா...?'' என்று நான் வினவும்போது அவனுக்கு அந்த ஷோகேஸிலுள்ள ஒரு தம்ளர் கட்டித் தயிரை உறிஞ்சிக் குடித்த குளிர்மை உண்டாகிவிடும்!

''நீ எப்படி...இந்த ஹோட்டலுக்கு வந்தே...''

''எங்கப்பா செத்ததுக்கு அப்புறம்...வேல செய்ய யாருமே இல்ல....அம்மாவுக்கு கண்ணு தெரியாது... அக்காவும் தங்கச்சியும் இருக்காங்க...சாப்பாட்டுக்கு ஒரே கஷ்டம்...''

''ஏன் ஒங்க எல்லாருக்கும் தோட்டத்துல வேல செய்ய முடியாதா?''

''வேல குடுத்தா தானுங்களே ..வேல செய்யலாம்...'' எங்க தோட்டம் முன்னூறு ஏக்கர்...ஆறு நூறு தொழிலாளிங்க இருக்காங்க...ஏக்கரைவிட ஆளுங்க கூடி...போச்சு அதுனால தோட்ட நிர்வாகம் கெழமைக்கு நாலு நாளு தான் வேல குடுக்கும்...இந்த நெலமையிலே அம்பது ஏக்கர் தோட்டத்துக் காணிய கொலனிக் குடியேற்றமுன்னு எடுத்திட்டாங்க...அப்புறம் வாரத்துக்கு மூணு நாளு வேல குடுக்க ஆரம்பிச்சிட்டாங்க...''

''அப்போ ...சங்கம் கட்சி கிட்சின்னு போராட்டம்... கீராட்டமுன்னு யாரும் முன்னுக்கு வரல்லீயா...''

''இஹூம்...? சங்கத்துல பேசி போராட்டம் நடத்த யாரும் வரமாட்டாங்க...அவுங்களுக்கு சங்கம் முக்கியம்... எங்களுக்கு வயிறு முக்கியம்...அதுனால எங்க மாதிரி பொடியன்மாருங்க எல்லாரும் டவுன் பக்கம் படையெடுத்துட்டோம்...வீட்டுக்கு உதவ முடியாட்டியும் வீட்டுக்கு பாரமாயிருக்க முடியல்ல...'' சுந்தரம் தன் அடிமனத்திலிருந்த சுமையைக் கொஞ்சம் மேலே நகர்த்திக் காட்டினான்.

தேயிலை, ரப்பர் தோட்டங்களில் அங்குள்ள தொழிலால் பின்னிப் பிணைந்து வாழும் மக்களைச் சிதறடிக்கும் சில திட்டமிட்ட குடியேற்றங்கள் எவ்வளவு பாரிய சமூகச் சிக்கலை உண்டு பண்ணுகின்றன...ஒரு காலத்தில் மலேசிய தோட்டப்புறங்களிலும் இதே நிலைமை இருந்தது. ஒரு மக்களின் வாழ்வைப் பிடுங்கி...இன்னொரு மக்களுக்கு வாழ்வு கொடுக்கும் திட்டங்கள்...!

சமுத்திர மீன்களாய் வாழ்ந்த மலைநாட்டு மக்கள் குளத்து மீன்களாய்... குட்டை மீன்களாய்... இறுதியில் தொட்டி மீன்களாய் குறுகி விட்ட நிலைமை... அந்த தொட்டியிலும் ஓட்டை விழுந்து விட்டால்... என்னால் மேலே சிந்திக்க முடியவில்லை.

சமூகத்தை விட்டுப் பிரிந்து, தொழில் முறை வாழ்க்கை முறைகளில் வேறுபட்டு ஒதுங்கி வாழ்ந்தாலும் என்னால் என் வழிவந்த சமூகத்தை மறக்க முடியவில்லை...!

சுந்தரத்தைப் பார்த்தேன்; அவன் என்னைப் பார்த்தான்...அவனிடம் கிண்டல் பேச ஆசை வந்தது... ''ஆமா ஒங்க அக்கா அழகா இருப்பாளா...?'' அவன் தலையைக் கீழே கவிழ்த்துக் கொண்டான். அவனுக்கு அந்த அக்கா விவகாரம் பிடிக்கவில்லை! என்னை மீண்டும் நோக்கினான். சிவந்து போயிருக்கும் அந்த சின்னஞ்சிறு முகத்திலே பொறுப்புணர்ச்சியின் சுமை நிழலாடியது.

கண் தெரியாத தாயையும் உழைக்க வலு இருந்தும் கிடைக்கத் தொழில் இல்லாமலிருக்கும் பருவம் அடைந்துள்ள சகோதரிகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவனுடையது. எத்தனையோ மைல்கடந்து தொழில் தேடி வந்திருக்கும் அவனது தைரியம் அவனது வயதைவிட முதிர்ந்தது...

''நீ வேலைக்கு வந்து எவ்வளவு காலம்...?''

''மூணு மாசம்...''

''ஒனக்கு சம்பளம் எவ்வளவு?''

''சம்பளத்தைப் பத்தி முதலாளி ஒன்னும் கதைக்க லீங்க...''

''அது சகஜந்தானே...''

சுந்தரத்தின் நிலைமையில் சம்பளத்தைப் பற்றி பேசாமல் எப்படி வேலைக்குச் சேர்ந்தான் என்று என்னால் கேட்க முடியாது; சாப்பாடு கிடைத்தாலே போதும் என்ற வறுமை நிலையில் வருகின்ற ஏழைகளுக்குச் சம்பளத்தைப் பற்றிப் பேசச் சக்தி பிறக்குமா...?

இவ்வாறான மக்களின் உழைப்பை எவ்வளவு அருமை யாக பணம் படைத்தவர்கள் பாவிக்கின்றார்கள்...?

''சட்னி கொஞ்சமா போடு!''

''சாம்பார் ஊத்தட்டுங்களா...?''

''ஊம்... ஊம்... போதும்... போதும்...!''

சுந்தரம் என்னை உபசரித்து முடிந்தது. நான் ஹோட்டலை விட்டு வெளியே வருகிறேன். சுந்தரம் வழக்கம்போல கேட்பதற்குப் பதிலாக ஒரு ஏக்கமான பார்வையை என் மேல் விடுகிறான். அவனுக்கு ஹோட்டல் வேலை கசந்து போய் விட்டது. எங்கேயாவது வேறு வேலை கிடைத்தால்... நானும் அவனுக்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டுதானிருக்கிறேன். இன்னும் விடியவில்லை.

ஜூன்... ஜூலை.... ஆகஸ்ட்!

சுந்தரத்தின் ஆறுமாத ஹோட்டல் வாழ்க்கையை எனது அடிமனத்தில் குமட்டி வைத்திருந்தேன். இன்று மனத்தைப் புரட்டுகின்றது.

—அதிகாலை நான்கு மணி.

சுந்தரம் கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்துப் போர்வை யாக்கிக் கொண்டு பழைய முறுக்கைப் போல மேசைக் கடியில் வதங்கிக் கிடக்கிறான். உரத்த குரலில் அவனுக்கு ஏச்சு கிடைக்கிறது. தூக்க மயக்கத்தில் துடித்து எழும்புகின்றான்.

"சொணங்காதே மாடு! சுருக்கா ஓடு!... குப்பையைக் கொண்டு போய் குசுனி பக்கம் கொட்டு!" முதலாளியின் சிம்மக்குரல், மற்ற சிப்பந்திகளையெல்லாம் துடிக்கத் துடிக்கத் தூக்கத்தைக் கலைத்து விடுகிறது.

"எங்கடா இன்னொரு எருமை! அந்த தடியனை எழுப்பு!...ஏய் விடியா மூஞ்சி! மஞ்சத் தண்ணிய தெளிச்சு ...வாசலைக் கூட்டு!... நீ போயி... பத்தியக் கொளுத்தி படத்துக்கு நேரே வைய்யி...! என்னா டீ மேக்கர்! பொய்லர் சூடாயிருச்சா.. ? ஒரு பிளேன் டீ போடு!"

இப்படி அதிகாலையிலேயே மலேஷியா தமிழ் நிகழ்ச் சிக்கு முன்பு முதலாளியின் 'தமிழோசை' அமுதபவானை கிடுகிடுக்க வைத்து விடும்!

பிளேன் டீயைக் குடித்துக் கொண்டு ரேடியோவை திருகுகிறார். மரண அறிவித்தல் தொடங்கி விட்டது. இனி இரவு பத்து மணிக்குத்தான் அது தன் வாயை மூடும்.

ஷோ கேஸுக்குள் கிடந்த வடை பலகாரங்களைக் கூடைக்குள் அள்ளிக் கொண்டு போய் குசுனியில் கொட்டி விட்டு வந்தான் சுந்தரம். அவையனைததும் சிறிது நேரத்தில் புனர்ஜென்மமடைந்து... புதிய வார்ப்புகளாய் மீண்டும் கண்ணாடி கேஸுக்குள் ஆவி பறக்க வந்தமரும்!

—ஹோட்டலில் பம்பரமாக வேலை நடக்கிறது சுந்தரம் ஓடி, ஓடி சாப்பிட வந்தவர்களை உபசரிக்கிறான். களைப்பு ஏற்படவே முகத்தைக் கழுவுவதற்காக குழா யடிக்குப் போனான்.

அதற்குள்ளாக இருவர் சாப்பிட வந்தமர்ந்தனர். சில நிமிசங்கள் சுணங்கி விட்டன கவுண்டரிலிருந்து வேகமாக இறங்கி வந்த முதலாளி சுந்தரத்தின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார். ''அந்த மேசைக்கு ரெண்டு பால் கோப்பி ஓடர் பண்ணு.'' அழுகையும் கண்ணீருமாகச் சிரித்துக் கொண்டு டீ மேக்கரை நோக்கிப் போகிறான் சுந்தரம்.

—நேரம் காலை பத்து மணி.

முதலாளிக்குத் தெரியாமல் காலைச் சாப்பாட்டை முடிக்க வேண்டும். முதலாளி கண்டு விட்டால்... ''மாட்டுப் பண்டி! சாப்பாடு கடை விட்டா ஓடிப் போகுது... மொதல்லே வந்தவங்களைக் கவனிங்கடா...!'' என்று மாட்டையும் பன்றியையும் ஒரே மிருகமாக்கிப் பேசுவார்!

ஷோ கேஸிலிருக்கும் லட்டு, கேசரி, பூந்தி, அல்வா இவைகளின் சுவையை, கடைக்கு வந்து ஆறுமாதமாகியும் சுந்தரம் அறிந்ததில்லை. ''போண்டாவுக்குள்ளே கெழங்கு இருக்கும்!'' என்று ஓடிப் போன சப்ளையர் சொன்ன ஞாபகம் சுந்தரத்துக்கு வந்தது.

சுந்தரம் இடியப்பத்தோடு ஒரு போண்டாவை உடைத்து வைத்துச் சாப்பிடுவதைக் கண்டு விட்ட முதலாளி வயிற்றில் அடித்துக் கொண்டார்.

''அட கதிர்வேலா! இப்படி ஒவ்வொருத்தனும் ஒரு போண்டாவை எடுத்தா... என் யாவாரம் என்னாவது...? இனிமேல் எவனாவது எக்ஸ்ரா பலகாரம் எடுத்தா... கணக்குல சார்ஜ்' பண்ணுவேன்'' என்று சட்டம் போட்டு விட்டார்.

புகையோடும் நெருப்போடும் வெந்து கருகி வியர்த்துக் களைக்கும் ஹோட்டல் தொழிலாளிகள், தாங்கள் தயாரித்த ஒரு பலகாரத்தையாவது ருசி பார்த்திருப்பார் களோ... என்னவோ!

சுந்தரம் பிசைந்த இடியப்பத்தைப் பார்த்தான். அனல் தனதனக்கும் அடுப்பில்— அண்டா கணக்கில் மாவை அவித்து இடியப்பக் கட்டையில் திணித்துப் பிழியும் போது, அந்த இடியப்பக்காரனின் புஜ நரம்புகள் விம்மிப் புடைத்து ஆயிரம் நரம்புகளாய் ஒன்றிணைந்து முறுக்கேறும் காட்சி அவன் நினைவில் வருகிறது...

—சாப்பிட்டு முடித்த சுந்தரத்துக்கு இன்னொரு மேசை காத்திருந்தது.

இன்று வெள்ளிக்கிழமை.

கொழும்பிலுள்ள சைவக் கடைகளையெல்லாம் முற்றுகை இடும் நாள்! வழக்கத்தைப் பார்க்கிலும் இத்தினத்தில் சாப்பாடு கொஞ்சம் பிரமாதமாக இருக்கும். பாயாசமும் கிடைக்கும். நான் சாப்பிட்டு விட்டு இலையைச் சுருட்டிக் கொண்டு போகிறேன்.

கையலம்பியதும் சுந்தரம் ஒரு கடதாசித் துண்டை நீட்டினான்.

அது கை துடைப்பதற்கல்ல; நான் படித்துப் பார்ப்பதற்கு...' அவன் அம்மாவுக்கு சுகமில்லையாம். எப்படியாவது பத்து ரூபாய் பணம் அனுப்பி வைக்கும்படி அவனது அக்காள் எழுதியிருக்கிறாள்.

''முதலாளியிடம் காசு கேட்டியா...?''

''கேட்டேன்; தரமாட்டாராம்...காசு குடுத்தா நான் கடையை விட்டு ஓடிப்போயிடுவேனாம்...!''

''நாளைக்கு காலையிலே...காசு கொண்டு வந்து தர்றேன்... நீ அம்மாவைப் பாத்திட்டு வா...அதுக்குள்ளே வேற வேலை ஏதாவது ஒழுங்கு பண்ணலாம்...'' என்றேன்.

அவன் என்னை மிகக் கூர்மையாகப் பார்த்தான். அவனுக்கு நான் ஒரு விசித்திர உறவாகக் காணப்பட்டேன்.

ஹோட்டல் பில்லை முதலாளியிடம் நீட்டுகிறேன். அவர் சில்லறை நிறைந்த லாச்சியை இழுத்து, மீதிப் பணத்தை மேசையிலடித்துத் தள்ளுகிறார். அவர் தலைக்குமேலே கருணாமூர்த்தி காந்தியும், புத்தரும், யேசுவும், பிள்ளையாரும் சர்வ மதக் கடவுளர்களாய் அவர் 'பிஸ்நஸ்ஸையே' பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எழுச்சிக் கொண்டு முன்னேறி வரும் சமுதாயத்தைப் புளித்துப் போன தோசையாக எண்ணிக் கொண்டிருக்கும் இந்த மாதிரி பிறவிகளுக்கெல்லாம் என்றாவது, எவனாவது பாடம் கற்பிப்பான் என்று சபித்துக் கொண்டு வெளியேறினேன்...

''அவற்பொங்கல்—சப்பாத்தி— இடியப்பம்— இட்டலி-எண்ணெய் முறுவல்—நெய்தோசை'' சுந்தரம் எவ்வளவு அழகாக இந்தப் பெயர்களை மனனஞ் செய்து வைத்திருந்தான்...

மறுநாள் விடிந்தது. பணத்தோடு, சுந்தரத்துக்கு ஒரு சாரமும் சட்டையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டேன். சுந்தரம் அதிர்ஷ்டக்காரன். அவனை ஒரு மனிதனாக்கி விட்டால்...அவனது குடும்பம் மலர்ந்துவிடாதா...?

இன்றைக்கு பஸ்ஸுக்காக காத்திருக்கவே என்னால் முடியவில்லை. அமுதபவானுக்குப் போய் சுந்தரத்தை சந்திக்கும் வரை எனது பொறுமையை அடக்க முடியவில்லை.

சுந்தரம் வீட்டுக்குப் போனால் அவனது அம்மா அக்கா, தங்கச்சி யாவரும் எவ்வளவு சந்தோசப்படுவார்கள். நான் பஸ் வண்டிக்காகக் காத்திருக்காமல் ஹோட்டல் சந்தியை நோக்கி நடக்கின்றேன்.

—பிரதான சந்தி.

சந்தியையும் கடந்து நிற்கிறேன்.

ஹோட்டலைக் காணோம்!—அமுதபவானைக் காணோம்! !

சுந்தரத்தின் நினைவால் இடம் மாறி வந்து விட்டேனோ—? ...இல்லையே...அதே லைட் தூண்கள்.... எதிர்ப்பக்கத்தில் பழக்கடைகள்...'ரேஸ்போடும் புக்கிகள்'... எல்லாமே இருக்கின்றனவே...! இது என்ன...? எங்கே அமுதபவான் ஹோட்டல்? எனக்கு மயக்கம் வரும்போல் இருக்கிறது.

ஹோட்டலைக் காணோம். பழக்கடைக்காரனை போய் விசாரித்தேன். அவன் விபரமாகச் சொன்னான்.

அந்த முதலாளி ஹோட்டலை மூடிவிட்டு...இந்த நாட்டை விட்டே ஓடிவிட்டாராம்! "ஒரு காலத்தில் இந்தியாவிலும் ஓட்டு போட்டவர்... இலங்கையிலும் ஓட்டு போட்டவர்...இப்போ அரசாங்கம் மாறி போச்சு...!" பழக்கடைக்காரன் கிண்டல் அடித்தான்.

காலவதியாகி விட்ட 'விசா' அமுதபவான் முதலாளியை இந்த தடவை காட்டிக் கொடுத்துவிட்டது.

அடுத்த கடை அப்துல் ரஹீம் அமுத பவானையும் இரவோடு இரவாக இரும்புக் கடையாக்கி விட்டார்!

—எனக்கு இன்னும் பிடி படவில்லை.

சுந்தரம் எங்கே போனான்...? என்ன ஆனான்...? ஒரு இரவுக்குள்ளே நடந்து விட்ட புதுமை! நான் சுந்தரத்தை இன்னும் தேடுகிறேன்.

இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. அவன் அகப்படவே இல்லை.

காலம் சில சந்தர்ப்பங்களில் எங்கள் காலடியிலேயே வந்து விழுகிறது. நான் தேடித் திரிந்த சுந்தரத்தைக் கண்டு பிடித்து விட்டேன்!

தமிழ் சினிமா கதையைப் போல நான் தேடித் திரிந்த சுந்தரம் எனக்கே சப்ளை பண்ணுவதற்கு வந்து நின்றான்.

—அது ஜப்னா சாப்பாட்டுக் கடை!

''தொரே! இங்க...மாசம் பதினைஞ்சு ரூபா சம்பளம் தர்றேன்னு சொன்னாங்க...வர்ற மாசம் சம்பளத்தை வாங்கி வீட்டுக்கு அனுப்பலாமுன்னு இருக்கேன்'' என்றான்.

என் தலை சுற்றியது...

அந்த சாப்பாட்டுக் கடை மாத்திரம் என்ன...அவன் வாழ்க்கையை மாற்றியமைத்துவிடுமா...?

...இந்த சுந்தரம்...பழையபடி இவனைப் போன்ற பையன்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு...தோட்டப் புறத்துக்குப் போய்...மரக்கறி விவசாயம்... கால்நடை வளர்ப்பு போன்ற மாற்றுத் தொழில்களை உருவாக்கித் தரும்படி தோட்ட நிர்வாகத்திடமும் தொழிற்சங்கங் களிடமும் 'புரட்சி கிரட்சி' யென்று போராடிப் பார்த்தால் என்ன? என் கற்பனை நடைமுறை சாத்தியமாகுமா?

இறைவா...! இந்த இளம் பரம்பரையினருக்கு தொழில் இல்லாமலடிக்கும் சமூக விரோதச் சக்திகளைச் சாடுவதற் காவது வல்லமை தரமாட்டாயா...?

சுந்தரத்தின் பார்சலை நாளைக்குக் கொடுப்பேன்...

□ □ □

(சிந்தாமணி 5-9-1971)

# எனக்கு ஒரு மயக்கம்

**வீ**ட்டிலிருந்து வரும் கடிதங்களை நான் உடனே பிரித்துப் பார்ப்பதில்லை. அவை பல பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு வருவதே இதற்குக் காரணம். அம்மாவுக்கு சுகமில்லை; அந்த வீட்டில் கல்யாணம்; அடுத்த வீட்டில் மரணம்...இப்படி ஏதாவது ஒரு பிரச்சினை இருந்தே தீரும்.

இன்றைக்கும் சில கடிதங்கள் வந்திருக்கின்றன. நண்பர்களிடமிருந்து வந்த கடிதங்களைப் பார்த்து விட்டேன். வீட்டுக் கடிதம் ஒன்றுதான் பாக்கி. அப்பா கடித உறை நிரம்ப விலாசம் எழுதியிருக்கிறார்.

பெரிய தயக்கத்துக்குப் பிறகு கடிதத்தைப் பிரிக்க ஆயத்தமானேன். அதற்குள் காரியாலயப் பொடியன் வந்து 'மனேஜர் கூப்பிடுகிறார்'' என்றான். கடிதத்தை மடித்து சட்டைப் பைக்குள்ளே வைத்துக் கொண்டு மனேஜரைச் சந்தித்துவிட்டு வந்தவன், மாலையில் எனது அறைக்கு வந்த பிறகுதான் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன், எனக்கு அசட்டுச் சிரிப்புத்தான் வந்தது.

பார்வதியை எனக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறார்களாம்! ''நல்ல வேலைக்காரி... குடித்தனம் நடாத்த ஏற்றவள் லட்சணமானபொண்ணு.சொந்தக்காரப் பிள்ளை. அடிச்சாலும் உதைச்சாலும் வீட்டுக்குள்ளே கிடப்பாள்...''

இப்படி அப்பா அறிமுகம் செய்திருக்கிறார். 'அடிச்சாலும் உதைச்சாலும் வீட்டுக்குள்ளே கிடப்பாளாம்' கல்யாணம் செய்வது அடிக்கிறதுக்கும் உதைக்கிறதுக்குமே என்பதுதான் அப்பாவின் எண்ணம் போலும்!

எனக்குத் தெரியாதா அந்தப் பார்வதிக்குட்டியை! தலையை விரித்துப் போட்டுக் கொண்டு, மூக்கை வடித்துக் கொண்டு மாரியம்மன் கோவிலைச் சுற்றி என்னோடு மாங்கொட்டை எத்தி விளையாடிய அதே பார்வதிதானே...

லயத்திலே புளியங்கொட்டை பொறுக்கிக் கொண்டு வருவாள்... அவளும் நானும் புளியங்கொட்டை சுட்டுத் தின்ற நினைவுகள் இன்னும் என்னை விட்டு மாறவில்லை.

எனினும் அந்தக் ''கொரங்குக் குட்டி பார்வதி'' 'முட்டைக் கண்ணு பார்வதி' இப்போ எப்படி இருப்பாள்...? அவள் எப்படி இருந்தாலும் எனக்கு என்ன?

அப்பாவின் கண்களுக்கு எவளாவதுமுகரக்கட்டையைக் காட்டி, எட்டு முழச் சேலையைச் சுற்றிக் கொண்டு முன்னால் நின்று விட்டால் போதும். ''மகாலட்சுமி மாதிரி இருக்காளடா'' என்று சொல்லுவார்.

பார்வதியின் அழகு அந்த லயத்துக்குள்ளே இருந்து கொள்ளட்டும். என்னோடு அவள் எந்த வகையிலும் ஒத்துப் போக முடியாது. நான்கு நண்பர்கள் மத்தியில் அவளுக்கு 'ஷோசலாக' நடந்து கொள்ளத் தெரியுமா? நாலு வார்த்தைகளைச் சரளமாகப் பேசத்தான் முடியுமா...?

சுத்தப்பட்டிக்காடாய்... கதவு மூலைக்குள்ளே யிருந்து தேநீர்க் கோப்பையை நீட்டும் 'பண்பாடு' அவ ளிடம் இன்னும் இருக்கும்! அந்தப்பட்டிக்காட்டைக் கட்டிக் கொண்டு கொழும்புக்கு கூட்டி வந்தால் என்மதிப்பு மரியாதை அனைத்தையும் கடற்கரையிலே கொண்டு போய்த்தான் கொட்ட வேண்டும்.

கடிதத்தை மேலும் தொடர்ந்து வாசித்தேன். அப்பா இந்த வாரம் கொழும்புக்கு வருகிறாராம்... இந்த மனுஷனுக்குக் கொஞ்சம் கூட யோசனையே கிடையாது! அடிக்கடி இப்போது கொழும்புக்கு வர ஆரம்பித்து விட்டார். எனக்கு இவரது போக்கு எரிச்சலையே உண்டாக்குகிறது.

சென்ற முறை வேலை செய்யும் கந்தோருக்கே வந்து விட்டார்! நான் தடுமாறிப்போனேன். ''இவர் எனது தகப்பன் இல்லை, தெரிந்த ஊர்க்காரர் ஏதோ சொந்த அலுவலாகக் கொழும்புக்கு வந்தவர் என்னிடம் காசுக்காக வந்திருக்கிறார்'' என்று நானே பேசி நானே சமாளித்துக் கொண்ட எனது சாதுரியத்துக்காக என் முதுகைத் தட்டிக் கொண்டேன்! அவர் மீண்டும் மீண்டும் வந்து எனது மதிப்பைக் குறைக்கப் போகிறார்.அவரை என் அப்பாஎன்று வெளிக்காட்டிக் கொள்ளவே எனக்குச் சிரமமாக இருக்கிறது.

அம்மா பெரிய, பெரிய நகை நட்டுக்களை மாட்டிக் கொண்டும், வெற்றிலை பையை இடையிற் செருகிக் கொண்டும், வேட்டியை மடித்துத் தலையில் மாட்டிக் கொண்டும் வரும்போது அவளோடு செல்வதற்கே எனக்குப் பெரிய சங்கடமாக இருக்கும்.

நான் கல்லூரி படிப்பை முடிக்குந் தறுவாயிலும் காற்சட்டை சப்பாத்து அணிந்து கொண்டு ''டிப்டொப்'' துரையாகத் தெருவில் இறங்கி நடக்கும் போதும், அந்த அந்தஸ்தையே உருவாக்கிக் கொடுத்த என் அப்பா என்னோடு வருவதற்கு நான் விரும்பமாட்டேன்.

''இவன் தான் என் மகன்'' என்று அந்த அன்புத் தந்தை சொல்லிக் கொள்வதற்கு எவ்வாறு பிரயாசைப் பட்டிருப்பார்! நான் அவருடைய ஆசைகளையெல்லாம்

பொடிப் பொடியாக்கி விட்டு அவரோடு சேர்ந்து செல்லாது தப்பித்துக் கொள்வேன்.

''உனது அப்பா என்ன தொழில் செய்கிறார்?'' என்று ஒரு சக மாணவன் கேட்டு விட்டால், நான், ''அவர் ஒரு டீ மேக்கர், அல்லது ''கிளார்க்'' என்று பதில் சொல்லி விடுவேன். ''தொழிலாளியின் மகன்'' என்று சொன்னால் மானமே போன மாதிரி...ஒரு தவறான உணர்வு என்னைப் பலவீனப்படுத்திக் கொண்டது. அந்தப் பலவீனம் என்னை இன்றும் ஆட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

நான் இப்போது கொழும்பில் வேலை பார்க்கும் ஒரு கிளார்க் ஹோட்டலிற் சாப்பிட்டுக் கொள்வது. வாடகை அறை அமர்த்தி வசிக்கிறேன். எனது அறையில் மின்சார விளக்குகள் எரிகின்றன. மின்சார விசிறி சுழலுகின்றது... மாடி ஜன்னலிலிருந்து நகரத்து அழகுகளை ரசிக்கிறேன்.

அதே வேளையில் வீட்டை நினைத்துப் பார்க்க நான் விரும்புவதில்லை; அம்மா சமைத்துப் போடும் அதே சாப்பாடு. லாந்தர் விளக்கு. விறகு தேடுவது...கடைக்குப் போவது.. இப்படி எவ்வளவு சங்கடங்கள்...!

அந்த சங்கடங்களிலிருந்து ஒதுங்கி இன்று சுதந்திர மனிதனாக வாழ்கிறேன். வேளா வேளை சாப்பாடு, நாடகம், சினிமா, நண்பர்களோடு அரட்டை!

முன்னர் போல் வீட்டுக்கு அதிகமாகப் போவதை நான் விரும்புவதில்லை. வீட்டு விஷயங்கள், வீட்டுக் கடிதங்கள் எல்லாம் எனக்குப் புதிதாகத் தெரிவதில்லை. கம்பனிக்கு வரும் எனது வீட்டுக் கடிதத்தின் மேல் விலாசத்தைக் கூடப் பிறர் பார்த்துவிட்டால் நான் கிராமத்தான் என்று அவர்கள் எண்ணி விடுவார்களோ என்ற பயம் எனக்கு.

நான் கடிதத்தைப் படித்து விட்டு ஒரு பழைய புத்தகத்துக்குள்ளே திணித்து வைத்தேன். மேசையில் வைத்தால்

நண்பர் எவரேனும் எடுத்துப் பார்த்து விடுவாரோ என்ற பயம் தான்! நான் பெரிய இடத்துப்பிள்ளை என்று பீத்திக் கொண்ட கொட்டத்தின் முடிச்சு எப்போதாவது அவிழ்ந்து விட்டால் என்ன செய்வது!

கடந்த நான்கு மாதங்களாக வீட்டுக்குப் பணம் அனுப்புவதே கிடையாது. இந்த மாதமும் ஒரு அழகிய ''டெட்ரோன்'' ஷேர்ட் வாங்கினேன். இருபத்தி மூன்று ரூபாய்! இப்போது நாற்பத்தைந்து ரூபாய். என் அப்பாவின் ஒரு மாதச் சம்பளம் எனக்கு ஒரு 'ஷேர்ட்டாக' மாறுகிறது! அதற்கேற்ற காற்சட்டையின் விலை நூற்றைம்பது ரூபாய்; அந்த அழகிய கூர்முகச் சப்பாத்தும் அறுபது ரூபாய்... கையிலே வெள்ளி நிறமாய் ஜொலிக்கும் கடிகாரம் இருநூறு ரூபாய்...

என்னை அழகாக்கிக் கொள்ளவே விரும்புகின்றவன் நான். பெறுமதியான ஓர் இளைஞனாகவே கொழும்பில் நான் தினமும் ஜொலிக்கின்றேன்.

நாற்பது ரூபாய் சம்பளத்தில் குடும்பத்தின் உணவு, உடை, கல்யாணம், சாவு போன்ற செலவுகளுக்கு அப்பாவும் அம்மாவும் அங்கே போராடுகின்றனர். நான் அதே நாற்பது ரூபாயை வாடகை அறைக்கு மட்டும் கொடுத்து வாழ்க்கை நடத்துகின்றேன்.

**கா**லை எட்டு மணி காரியாலயத்துக்குப் புறப்படும் நேரம் எனது நடையில் ஒருவித மிடுக்கைக் காட்டிக் கொண்டு பஸ் நிலையத்தில் ரோஸிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். ரோஸி வருகிறாள்...

அவளது வழக்கமான 'காந்தச் சிரிப்பு' என்மேல் உதிர்கின்றது. அவளது கனிவான பார்வை காலைஇளந்தென்றலாக என்னைக் குளிரச் செய்கின்றது. இருவருமாக உராய்ந்து கொண்டு பஸ்ஸில் ஏறுகிறோம். அவள் உட்காருகின்றாள். அவளருகே நானும் உட்காருகின்றேன்.

அல்லித்தண்டு போன்ற அவளது கால்கள் என்னை உராய்கின்றன. மட்டத்து மலைக் கொழுந்தாய் மதாளித்து வளர்ந்திருக்கும் அவளது தொடை அழகுகளை காட்டும் விதமாய் அணிந்திருக்கும் அச் சின்னஞ்சிறு பூச்சட்டை என் நெஞ்சை இனிக்கச் செய்கிறது.

காரியாலயத்துக்கு அருகேயுள்ள ஹோட்டலை நோக்கி நாங்கள் ஒருவர்பின் ஒருவராக இறங்கி நடந்தாலும் எங்கள் 'நாடகம்' நாலாப்பக்கமும் மேடையேறுவது போல் விளம்பரமாகியிருந்தது.

ரோஸி என்மேல் உயிரையே வைத்திருக்கிறாள். அவளது படோடோபமான வாழ்க்கை எனது குடும்பத்தோடு ஒத்து வருமா...? அவளையே அடைய வேண்டுமென்பதற்காக எனது வழி வந்த சமூகத்தையும், என் சமூகத்தின் தாழ்ந்த நிலையையும் மறந்து தூர விலகி வந்திருக்கிறேன்...எனது குடும்ப உறவுகளை ரோஸிக்காகத் துண்டித்துக்கொள்ளவும் தயாராகவிருக்கிறேன்,

அப்பா என் கல்யாண விஷயத்தில் தலையிடுவது எனக்கு நல்லதாகத் தோன்றவில்லை. கல்யாணம் என்பது ஒருவனுடைய சொந்த விஷயம் அதில் தாய் தந்தை என்ற பாசத்தை முன் வைத்து உரிமை கொண்டாடக் கூடாது.

எனது அந்தஸ்து, தொழில், நாகரிகம் இவற்றுக்கு ஈடு கொடுக்க ரோஸிதான் பொருத்தமானவள். நான் திடமாக என்னைத் திருப்திப்படுத்திக் கொள்கிறேன்.

அப்பாவுக்கு இன்றைக்கே கடிதம் எழுதிவிட வேண்டும்.

''என் கல்யாண விஷயமாக நீங்கள் யாரும் முயற்சிக்க வேண்டாம். எனது காரியாலயத்திலேயே ஒரு பெண்ணை விரும்பி விட்டேன். அவளும் தொழில் பார்க்கிறாள். வாழ்க்கை சிரமம் இல்லாமல் நடக்கலாமென நம்புகிறேன் இனிமேல் நீங்கள் பார்வதி பேச்சை எடுக்காமல் இருந்தால்

மிகவும் நல்லது எனக்கு எந்தவிதத்திலும் பார்வதி பொருத் தமானவள் அல்ல என்பது உங்களுக்குத் தெரியும்...''

இப்படி வெட்டு ஒன்று துண்டு இரண்டாக எழுதியிருக் கிறேன்

மூன்றாம் நாள் கையில் குடையுடன் தோட்டத்துக் கங்காணி வேஷத்தில் கொழும்பு வந்து சேர்ந்து விட்டார் அப்பா மலைநாட்டு முகத்தைக் காட்டிக் கொண்டு காரியா லயத்திலேயே என்னை வந்து சந்திக்க அந்த மனுஷனுக்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்.

அவரும் வந்து விட்டார். எனது அறைக்கு அழைத்து வந்தேன் அறைக்குள் நுழைந்தவர் பக்கத்து நண்பனின் கட்டிலில் படுத்துக் கொண்டார் பாவம் பிரயாணக் களைப்பு!

''பார்வதியை இந்த ஆடி மாசத்துக்கு முன்னே கொண்டு வந்திடனும்...ஒரு ரசீட்டர் பண்ணிக்கிட்டாப் போதும்... நீ நெனச்சமாதிரி கொழும்பு பொம்புளைங்களை மாட்டிக்கிட்டு வந்தே... ஓங்கம்மா தும்புக்கட்டையோட தான் நிப்பா...

''அப்புறம் நம்ம வூட்டு படி வாசல் மிதிக்க முடியாது'' என்று அந்தச் சாயம் வெளுத்தக் குடையை ஆயிரந்தடவை தூக்கிக் கக்கத்தில் இடுக்கினார்.

பெற்றோரின் சர்வாதிகாரம் பிள்ளைகளின் கல்யாண விஷயத்தின் போதுதான் விஸ்வரூபம் எடுக்கின்றது!

நான் ரோஸியிடம் சொல்லாமல் வந்த குற்றத்துக்காக அவள் ஏன் இந்த நேரம் பார்த்து என்னைத் தேடி வர வேண்டும்? அவள் அடக்க ஒடுக்கமேயின்றி எப்போதும் போலவே கதவைப் படாரெனத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

அவளது மினிகவுன்: பிதுங்கிய நிலையிலிருக்கும் மார்பகம் சாயம் பூசிய உதடுகள்; கத்தரித்துச் சுருட்டிய கூந்தல் இவைகளை எல்லாம் புத்தம் புதியதாகப் பார்த்து விட்ட அப்பா முகத்தைக் குப்புறப் போட்டுக் கொண்டார்,

ரோசி அவருக்கு நேராக அந்தக் கட்டை கவுனுடன் கால்மேல் கால் போட்டுக் கொண்டு தொடைகள் தெரியும் படியாக ஹாயாக உட்கார்ந்திருந்தாள்! அடிக்கடி அப்பாவைப் பார்த்து என்னிடம் கேள்விகளும் கேட்டாள்.

''ஹு இஸ் திஸ் ஹிப்பி...'' என்று என்னிடம் கேட்டு விட்டு அவள் சிரித்தாள். நான் வெறும் தொண்டையை விழுங்கியபடி 'ஹி இஸ் பிரம் த எஸ்டேட்...ஹிஹேஸ் கம் டு சீ மீ'' என்று மழுப்பினேன்.

நான் ஒரு தேயிலைத் தோட்டத்துக்குச் சொந்தக்கார னாகவும் பொழுது போக்கிற்காகத் தொழில் செய்பவனாக வும் ரோஸியிடம் நடிக்கிறேன்...

எனது பொய்யான வாழ்க்கை என்றைக்கு உண்மை ரூபத்தில் வெடித்துச் சிதறுமோ என்று பயந்து அநுதினமும் செத்துக் கொண்டிருக்கிறேன்.

ரோஸி எனக்குச் சொக்லேட் கொடுக்கிறாள். என் கைகள் அப்பாவின் முன் நடுங்கிக் கொண்டு வாங்குகின் றன. அவளுக்கு நாளை பிறந்ததினம் எனக்குச் செலவு தினம் ரோஸி எனக்குச் 'சீரியோ' சொல்லிவிட்டு மாடிப்படி யிலிருந்து இறங்கி ஓடுகிறாள்.

தலைக்குப்புறக் குனிந்திருந்த அப்பா நிமிர்ந்து உட் காருகிறார். அவருடைய கண்கள் அவரது சிவப்புக்கல் கடுக்கனைவிட நெருப்பாய் கனிந்திருந்தன. கலங்கிய கண்க ளோடு குடையை எடுத்துக் கொண்டு ''நீ நாசமாப் போகாம நல்லா இருந்தாச் சரி...என்று சபித்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் மாடியிலிருந்து இறங்கி நடந் தார்.

அந்த மூன்றாது மாடியில் எனது வாடகை அறை இருக்கிறது ஜன்னலைத்திறந்து கொண்டு நகர வீதியைப் பார்க்கிறேன் தெருவில் நடக்கும் அப்பா எனக்கு அத்தனை சன நெரிசலிலும் தனியாகவே தெரிகின்றார், இத்தனை வயது வரை பெற்றோர்களுக்குப் பொருளாதார ரீதியில் எந்த உதவிகளையும் செய்யாத ஒரு கையாலாகாத நிலையில் இருக்கும் நான் ஒரு கற்பனை உலகத்திலே என்னை அமர்த்திப் பொய்யாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்...

அப்பா கூட்டத்தில் மறைந்து விட்டார் நான் ஜன்னலைச் சாத்திவிட்டுக் கட்டிலில் பொத்தென விழுகிறேன்....

சித்திரை முடிந்தது, வைகாசி பிறந்த புதிது...நான் மெதுவாக ரோஸியிடம் என் கல்யாண விஷயமாப் பேசினேன். அவள் பாம்பை மிதித்தவள் போல் துள்ளிக் குதித்தாள். ''யூ ஆர் மிஸ்டேக்கன்... மிஸ்டர் ராஜ்!'' என்னை யாரோ பழைய செருப்பால் அறைந்த மாதிரி இருந்தது. பட்டினத்து நாகரிகம் எவ்வளவு தூரம் வியாபித்திருக்கிறது.

தமிழ்ப் பெண்களே தாலியை மறைத்துக் கொண்டு உத்தியோகம் செய்யும் போது நாகரிகத்தின் உச்சியில் உட்கார நினைக்கும் இதர இனங்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

ரோஸியின் புருஷன் மூன்று வருடமாக வெளி நாட்டில் என்னமோ இன்ஜினியரிங் படிக்கிறாராம். அது வரைக்கும் அவளுக்கு ஒரு ''போய் பிரண்ட்'' தேவைப்பட்டிருக்கிறது. அவளது பாலியல் வேட்டைக்கு நான் தான் பணத்தையும் கொடுத்து பலியாகியிருக்கிறேன்.

ரோஸி ஒரு டைப்பிஸ்ட் –

ஏ...பி...சி...டி.... இருபத்தாறு எழுத்துக்களில் கைகளை வைப்பது போல அவள் மனத்தையும் இருபத்தாறு இடங்களில் வைக்கப் பழகியிருக்கிறாள்.

என் மனம் மலைநாட்டை அண்ணார்ந்து பார்க்கிறது. பார்வதி உயர்ந்த மலைநாட்டிலே நிற்கிறாள். என் மனம் அவளுக்காக ஏங்குகிறது. இரவு பத்துமணி ரயிலில் அட்டனை நோக்கிப் புறப்பட்டேன்.

கொடுமையுடன் சுட்டெரிக்கும் கொழும்பு நகரத்து உஷ்ணத்தை விட்டுக் குளிர்ந்த மலைநாட்டை நோக்கி 'உடரட்ட மெனிக்கே' ஓடினாள்.

நான், அவதி, அவதியாக வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினேன்...நான் கண்டது கனவா...?

தங்க ரதமாகப்பார்வதியே முன் வந்து கதவைத் திறக்கிறாள்.... மல்லிகை நிறைந்த அவளது கூந்தல் மணத்தைவிட, மலையகத்துப் பசுமையாய்க் குளிர்ந் திருக்கும் அவளது தளிர் முகம் சுகந்த வாடை வீசியது...

இவளா பார்வதி...? வீட்டுக்குள்ளே நுழைந்தேன். அம்மா ஓடி வந்து என்னைக் கட்டிப்பிடித்து ''ஹோ'' வென்று அழுதாள்.

பார்வதியை நிச்சயதார்த்தம் செய்ய மாப்பிள்ளை வீட்டார் இன்றைக்கு வருகிறார்களாம்.இந்த சம்பந்தத்தை அப்பாதான் முன் நின்று நடத்தி வைக்கிறாராம்...!பார்வதி வீட்டில் வசதி குறைவு என்பதற்காக, எங்கள் வீட்டில்தான் கல்யாண வைபவமே நடக்கப் போகிறதாம்....பார்வதி தனக்கு மருமகளாகக் கிடைக்க வில்லையென்று அம்மா குமுறிக் குமுறி அழுகிறாள்.நான் மெதுவாக இஸ்தோப்புத் திண்ணையை நோக்கி நடக்கிறேன்.

பார்வதி என் காலில் விழுந்து ஆசீர்வாதம் கேட்கிறாள். அவளும் நானும்...மாரியம்மன் கோவிலில் புளியாங் கொட்டை சுட்டுச் சாப்பிட்ட நினைவுஎனக்கு வருகிறது.

□ □ □

*(சிந்தாமணி—15-10-1972)*

# அந்தரங்கம் கேவலமானது...

''ஏம்மா...! இது உனக்கே அழகாத் தெரியுதா...? கல்யாணமாகி புருஷன் வீடு புகுந்து...இத்தனை பிள்ளை களுக்குத் தாயாகியும் நீ இப்படி நடந்து கொள்கிற விதம் ரொம்ப கேவலமா தெரியில்லையா...? நீ வாழாவெட்டியாய் வந்திட்டாலும் பரவாயில்லையே... 'என்மக வாழாம வந்திட்டா'ன்னு தாலியைக் கழற்றி வீசிவிட்டு, தாய் வீட்டுக்கே கூட்டிக் கொண்டு வந்திருப்பேனே...நீ அதுவு மில்லாமே இதுவுமில்லாமே இரண்டுங்கெட்ட நிலையிலே, குடும்பக் கௌரவத்தை நாசமாக்கிக்கிட்டு...ச்சே... ச்சே! நீ இருக்கிறதைவிட...'' பெரியவர் பேச்சைத் தொடர முடியாமல் வெளித்திண்ணைக்குச் சென்றுவிட்டார்.

''அப்படி என்னதான் உன் புருஷன் உனக்கு கொடுமை செய்யுறான்...?'' மிகவும் பதட்டமில்லாமல் பார்வதியின் தாயார் கேட்டாள். அவளது அன்போடு பிறந்த கேள்வி பார்வதியை அள்ளி அணைப்பதாக விருந்தது.

பார்வதியிடமிருந்து எந்த பதிலுமே கிடைக்கவில்லை. அதற்கு மாறாக அவளது மடிச்சேலை நனைந்து துவைந்தது தான் மிச்சம்.

பொறுமை தாளாத ஆத்திரத்தோடு மகளை இழுத்து, ''உன் அப்பா திரும்பிவருவதற்கு முன்னே மூடி மறைக்காம மனசுக்குள்ளே இருக்கிறதையெல்லாம் சொல்லிவிடு. இந்தத் தடவை ஒரு முடிவுக்கு வந்திடணும்...ஒன்னு நீ புருஷனோ

டேயே ஒழுங்கா வாழப் பழகிக்கணும்...அதுவுமில்லாமே போனா...நீ பெத்தபிள்ளையெல்லாம் குளங்குட்டையிலே தள்ளி...நீயும் உயிரை மாய்ச்சுக்கோணும். பொறுமை தாங்காதவளாய்...அந்தப் பெத்தமனம் வாயில் வந்தபடி அவளை ஏசித் தீர்த்தது.

அம்மா குமுறிக் குமுறி அழுவதையும், தாத்தாவும் பாட்டியும் ஒருவர் மாறி ஒருவர் அதட்டி ஏசிப் பேசுவதையும் மூலைக்கொன்றாய் நின்று, விக்கித்து விழித்தபடி எட்டு குழந்தைகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றன. எலும்பும் தோலுமாய், அங்கலட்சணமே இல்லாதவாறு, குரூரமான அமைப்பில் ஒவ்வொரு குழந்தையும் தோற்றமளித்தன. எலும்புருக்கி நோயால் பீடிக்கப்பட்ட நோயாளிகளைப் போல அவைகள் அந்த வீட்டில் ஒன்றாய்க் கலந்து ஓடி ஆடும்போது, கேலிச்சித்திரங்கள் உயிர் பெற்றதுபோல அங்கு காட்சி தரும்.

போஷாக்கில்லாத உணவினாலும், ஏன் பசியைப் போக்கவே உணவில்லாத பட்டினியாலும், உடலை மறைத்துக் கொள்ளக்கூட ஒழுங்கான உடைகளில்லாத காரணத்தாலும் அந்தக் குழந்தைகள் அந்த விட்டில் கேலிக்கு அலங்கரிக்கப்பட்ட பொம்மைகளாய்... நடமாடு கின்றன. அவைகளின் அவல உருவங்களே பார்வதியின் கண்ணீருக்குக் காரணம் என்பதை, இதுவரையில் கூட புரிந்து கொள்ளாத அவளது பெற்றோர்களே இருக்கும் போது வேறு யாரிடம் போய் அவள் விளக்கவுரை நடத்துவாள்...?

பார்வதி தாயின் அலட்டலைப் பொருட்படுத்தாமல் கரி பிடித்துப் பயங்கரமாகக் காட்சி தரும் அந்த அடுப்பங் கரை சுவரையே கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண் டிருந்தாள். அவளது விரக்தியடைந்த வெறுமை எண்ணங் கள் அந்த கரி படர்ந்த சுவரில் என்ன ரசனையைக் கண்டு கொண்டிருக்கின்றன...? வாழ்க்கையில் கொஞ்சமும்

பிடிப்பில்லாதவளாய் குமட்டல் எடுத்துக் கொட்டிக் கிடக்கும், வாந்தியைப் போல தன் குடும்ப வாழ்க்கை நாற்றத்தை மீண்டும் ஒருமுறை முகர்ந்து பார்த்தாள்.

பிள்ளைக்கு பால் வாங்கவேணும்...மாவு டின் முடிஞ்சு போச்சு...'' அவர் வேலைக்குப் புறப்படும்போது நினைவு படுத்தினேன். ''உன் பழக்கமே உன்னைவிட்டு ஒழியாதே' மாவு டின் முடிஞ்ச பிறகுதான் சொல்லவேணுமா? கையிலே மடியிலே காசை கட்டிக்கிட்டா நான் சுத்துறேன்..? ஒரு டின் மாவு வாங்குவது இன்னக்கி எவ்வளவு கஷ்டமுன்னு வீதியிலே இறங்கி நடக்கிறவனுக்குத்தான் தெரியும்...நீ என்ன...குசுனிக்குள்ளே கிடக்கிறவள்...எதையும் வலிக்காம சொல்லிவிடலாம்...''

அவர் என் மேல் எரிந்து விழுந்தார். நான் அவரை காலையிலேயே கோபப்படுத்திவிட்ட முட்டாள் தனத்துக்காக என்னையே நொந்து கொண்டேன். இன்றைய வாழ்க்கைச் செலவில் வருமானமே போதுமானதாக இல்லாத ஒரு குடும்பத்தில், ஒரு வளரும் குழந்தையை வளர்த்தெடுப்பதென்பது எவ்வளவு பிரச்சினையாக இருக்கின்றது...!

அவர் ஒரு டின் மாவு வாங்குவதற்கு எவ்வளவு சிரமப் படுகிறார் அவர் படுகின்ற அந்தச் சிரமம் அவராலேயே உண்டாக்கப்படுகிறதென்பதை அவர் அறியவேமாட்டார். தினமும் குடிப்பதற்கு மட்டும் அவருக்கு எங்கிருந்து காசு கிடைக்கிறது? வீட்டிலுள்ள நகை நட்டுக்களையெல்லாம் ஈட்டுக்கடையில் வைத்தாகிவிட்டது. குழந்தைக்கு சுக மில்லையென்றால் எனக்கே வருத்தமென்றால் பக்கத்தி லிருக்கும் வைத்தியரிடம் காட்டி மருந்தெடுக்கக் கூட 'விதி' யில்லை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு மைல் கணக்கில் நடந்து, 'கியூ'வில் காத்துக் கிடந்து வதைப்பட்டுத்தான் வர வேண்டும் குடும்பஸ்தன் என்ற ஒரு பொறுப்பை உணராத கணவன் 'தான் தோன்றித்தனமாக' நடக்கும்வரை

அவனுக்குக் கட்டுப்பட்ட ஒரு பெண்ணால் என்ன திருப்பத்தைச் சாதித்துவிடமுடியும்? எனக்கு வெறுப்பு வேதனை வருகின்றபோதெல்லாம் கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்குத்தான் போய் விடுவேன்.

தொட்டிலில் பிள்ளை அழுகிறது...காலையில் மிஞ்சிக் கிடந்த பாலையே பருக்கி விடுகின்றேன். புளித்துப்போன பால்... பகல் பொழுதுக்கு என்ன செய்வது...? 'றப்பர் தீத்தி'யை வாயில் வைத்து விடுவதா...? எனக்கு உடல் சோர்வாக இருக்கிறது...அடிக்கடி மயக்கமும் வருகிறது. என்னைச் சமாளித்துக் கொண்டு பலவந்தமாக பிள்ளையைத் தூங்க வைக்கத் தொட்டிலை ஆட்டிக் கொண்டேயிருக்கிறேன்...

இனிமேல் நான் ரொம்பவும் துணிச்சல் காரியாக நடந்து கொள்ள வேண்டும். வருமானத்துக்கு தகுந்த செலவு...வாழ்க்கை நிலைக்குத் தகுந்தவாறு திட்டமிட்டுக் கொண்ட தாம்பத்திய நேசங்கள்...இந்த இரண்டு அம்சங் களில் நான் வெற்றி கண்டுவிட்டால், நானும் என் குடும்பத்தை நன்றாக நிர்வகித்துக் கொள்வேன்.

மூத்தப்பிள்ளை 'உங்கா' சொல்லுகிறான். தத்தித் தத்தி அடுப்படிக்கெல்லாம் வந்து விடுகின்றான். அவனது இன்பத் தொந்தரவுகளை நான் ரசித்துச் சுவைப்பதற் குள்ளாகவே இரண்டாவது பிரசவத்துக்காக தாய் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

கல்யாணம் செய்து கொண்ட ஒரு கணவன் மனைவியின் பிரசவச் செலவுகளைக் கவனிக்கக்கூட ஒரு தகுதியற்ற நிலையில் இருக்கின்றபொழுது அவனுக்கு 'குடும்பம்' என்ற ஒரு வாழ்க்கையைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அவரைப் பற்றி நினைக்கும் போதல்லாம் என் நெஞ்சு நெருப்பாய் எரிந்து தனலாகிறது

—இரண்டாவது பிரசவமும் நடந்து முடிந்தது... அம்மா வீட்டில் இந்த முறையும் என்னால் செலவுதான் உண்டாகியது. நான் மிகவும் சக்தியற்றிருந்தேன். அப்பா, என்னவெல்லாமோ... ஜீவசத்துள்ள டானிக்குகளும் மருந்துகளும் வாங்கிக் கொடுத்தார்.

ஒரு மாதம் வரை அம்மா வீட்டில் இருந்தேன். அவர் வந்து என்னை அழைத்துச் சென்றார். நான் இல்லாமல் சாப்பாட்டு விசயத்தில் மிகவும் சங்கடப்பட்டுப் போனதாக என்னிடம் கூறி மிகவும் சலித்துக் கொண்டார். நான் கவலைப்பட்டேன்.

மூத்தப்பிள்ளையும் தொட்டிலில் நித்திரை செய்துதான் பழக்கம்... அவனும் அடம் பிடிக்கிறான்... கைக்குழந்தைக்கும் ஒரு தொட்டில் கட்ட வேண்டுமா?...இரண்டு தொட்டில்கள்... சின்னஞ்சிறு வீடு... ஐந்நூறு ரூபாய் வாடகை. சமையலறை— குளியலறை— படுக்கையறை— சாப்பாட்டறை எல்லாமே ஒட்டியொட்டி இணைக்கப்பட்டிருக்கும். அந்த வீட்டுக்குள்ளேதான் எங்கள் குடும்பமும் கூடு கட்டியிருக்கிறது. கொஞ்சமும் சுகாதார வசதியே இல்லாத அந்த வீட்டில் சின்னஞ்சிறுசுகளை வைத்துக் கொண்டிருப்பது எனக்கு அறவே பிடிக்கவில்லை. அவரும் கல்யாணம் கட்டியதிலிருந்து இன்றுவரை வீடு பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்.

குழந்தைகள் இரண்டையும் அருகருகே போட்டு தூங்கியும் தூங்காமலும் இருந்த என்னை அவரது கரங்கள் உரசின... "பாவம் பார்வதி!...ரெண்டு குழந்தைகளுக்கும் மிகவும் கஷ்டப்பட்டுப் போனாள்..." என்ற பாசத்தின் பரிவு உணர்ச்சியால் அவர் அப்படி அந்த அன்புக் கரங்களை உராய விட்டிருந்தால்... நான் என் கணவனுக்காக வாழ்க்கைப்பட்டதில் பெருமைப்பட்டிருப்பேன். அவரை அடைந்த ஒரு பாக்கியசாலி என்று இறுமாப்படைந்திருப்பேன். ஆனால் அதற்குப் பதிலாக என் கண்களிலிருந்து

இரண்டு சொட்டு கொதிநீர் கொட்டின... என் படுக்கையிலே நெளியும் பாம்பாக அவரைக் கண்டு நான் பயப்பட்டேன். என் உடம்பிலே உராய்ந்த அவரது கரங்களை அதிவேகமாக உதறித் தள்ளினேன். ''பார்வதி!'' அவர் அதிர்ச்சியடைந்த தொனியில் கூறினார். நான் அலட்சியமாக அழுகின்ற குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தேன். குழந்தைகளின் அழுகைச் சத்தங்கள் எங்கள் இருவரது உணர்ச்சிப் போராட்டங்களைக் குழப்பியடித்துக் கொண்டிருந்தன.

அதுவரையிலும் நான் தைரியமாக இருந்தேன்...

''சிறு வயதில் பெற்றோரின் காப்பிலும் நடுவயதில் கணவனின் காப்பிலும் இருக்க வேண்டிய பெண்கள் எத்தனை கஷ்டம் ஏற்பட்டாலும் பொறுத்துக் கொண்டு ஒத்து வாழ வேண்டும்'' என்று அன்னை சாரதாதேவி, பெண்களின் எந்த வகையான கஷ்டத்தைக் கண்டு ஆறுதல் சொன்னார்கள்?

எனக்கு வாழ்க்கையின் ரகசியம் இன்னும் சரிவரப் புரியவில்லை. ''கணவன் காமுகனாகவும், நல்ல குணங்கள் அற்றவனாகவும் இருந்தாலும், மனைவி அவனை தெய்வமாகவே மதித்து நடந்து கொள்ள வேண்டும். அப்படியின்றி மீறி நடப்பவளின் ஆடை ஆபரணங்களைப் பறித்துக் கொண்டு சமூகத்திலிருந்து மூன்று மாத காலம் வரை விலக்கி வைக்க வேண்டும்'' என்று மனுநீதி சொல்கிறது

இப்படியெல்லாம் வேத, நீதி, தர்மங்கள் கூவிக் கொக்கரிக்கின்ற பொழுது, மனைவி ஸ்தானத்தில் அவதிப்படும் பெண்மையை ஆண்மை பலி கொள்ளத்தானே செய்யும்?

எனக்கும் ஒரு பேராசை இருந்தது. 'காதல் ஒருவனை கை பிடித்து... அவன் காரியம் யாவிலும் கை கொடுத்து ஒரு சிங்காரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்

என்று மனதுக்குள்ளே எத்தனை இரவுகளில் என் தனிமை நினைவுகள் இனிக்க இனிக்க ஏங்கித் தவித்திருக்கின்றன...?

அந்த ஆசைகளுக்கெல்லாம் கிடைத்த தண்டனைதான் இன்று நான் நடத்தும் வாழ்க்கையா....?

நான்கு குழந்தைகளுக்குத் தாயாகுவதற்குள்ளாக எத்தனையோ தடவை அவர் எனக்கு வேண்டாமென்று தாய் வீட்டுக்குப் போயிருப்பேன்... அவரோடு ஏன் வாழ முடியவில்லை என்பதற்கு மட்டும் என்னால் காரணம் காட்டுவதற்கு தைரியம் வரவில்லை. என் நாவும் மனமும் கூசின... குடும்பத் தகராறுகளுக்கெல்லாம் புருஷனுக்குத் தெரியாமல் வீட்டை விட்டு வெளியே வருபவள் பெண்ணாக இருக்க முடியுமா என்று பல பேர் பேசினார்கள்.

நான் இந்த முறை நன்றாக மெலிந்து விட்டதாக என் அம்மா சொன்னாள். முகம் வெளிரி... கன்னங்கள் 'ஒடுக்கு' விழுந்து... முன்பற்கள் வெளியே தள்ளி... பெற்றவளே அடையாளம் காண முடியாத ஒரு 'புதுக் கோலம்' பூண்டிருந்தேன்...

"கொஞ்சமாவது... கட்டுத்திட்டமாக இருக்கப் பழகிகிட்டா நோய் நொடி வராது... நாங்களும் மனுசரைப் போல இருக்கலாம்... மிருகத்துக்கும் காலம் நேரம் இருக்கத்தான் செய்யுது... ஒரு சில மனுசருக்கு அது இல்லே..." என் தாய் என்னைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள் கூரிய வாளாக என் இதயத்தில் பாய்ந்தது.

குழந்தைகள் எல்லோருக்கும் சுகமில்லை.

—என் குழந்தைகள்.

நானே உண்டாக்கிக் கொண்டிருக்கும் நோய்கள்தான் அவைகள்! கொஞ்சங்கூட லட்சணமில்லாமல் பெற்றவள் பார்வைக்கே அருவருப்பாகக் காட்சி தரும் அந்த ஒவ்வொரு சீவனும் என்னையே குற்றம் சுமத்துகின்றன. அவைகள்

திடகாத்திரமான ஒரு புதிய பரம்பரையை அமைத்துக் கொள்வதற்கு என்னைப்போன்ற தோல்வி கண்ட பெண் களால் என்ன செய்ய முடியும்?

குடும்பந்தான் ஒரு சமுதாயம்...ஒரு தேசியம்...ஒரு நாடு எல்லாவற்றுக்கும் அடித்தளம். என்னைப் போன்ற ஒரு பெண்ணும் ஆணும் இல்லற தர்மத்துக்கே மாசு கற்பித்து நடக்கும் போது தேசிய நலன் பாதிக்கப்படுகிற தென்பதை நான் மாத்திரம் உணர்ந்து என்ன பிரயோஜனம்...? சமூக நலனுக்காக சுகஜீவனுள்ள குழந்தை களைப் பெற்றுக் கொடுங்கள் என்று நாடே நம்மைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்கும்போது நாங்கள் நாட்டுக்கே துரோகியாக ஒழுக்கத்தை மீறுகிறோம்.

என் கணவன் ஒரு உதாசீனம்... நான் ஒரு பலவீனம்... நமது சமுதாயப்பண்ணைக்குப் பெண்கள் விதை நெல்லைப் போன்றவர்கள். வருகின்ற தலைமுறைகளை நன்றாகப் பயிர் செய்யவேண்டியவர்கள். விதை நெல்லே கெட்டுச் சீரழிந்து போனால் விளைவு என்னவாகும்...?

என் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக டாக்டர் கூறினார். ஒரு குழந்தை உருவாகுவதற்கு அறுபது வீதம் இரத்தம் தேவை; பிரசவத்துக்குப் பிறகு ஒரு தாயிட முள்ள இரத்தம் நாப்பது வீதமே...அவள் மீண்டும் ஒரு குழந்தையை உருவாக்குவதற்கு நூறுவீதத்தை அடைய வேண்டும். அதுவல்லாமல் என்னைப் போன்ற உதாரணங் கள் இருந்தால்...டாக்டரின் இழுத்தபேச்சு என்னை அவமதிப்பது போலிருந்தது. என் கணவனைக் கூப்பிட்டு அவர் தனிமையில் அதிக நேரம் கதைத்தார். டாக்டரின் அறிவுரைகளுக்கெல்லாம் ஈடுகொடுக்க என் கணவனுக்கு அந்தளவு தூரம் ஞானம் கிடையாது என்று தான் என்னால் சொல்ல முடியும்.

காலம் என்னும் சாக்கடையில் புழுத்து நெளியும் புழுக்களாய் என் வாழ்வில் நாற்றம் வீசத்தொடங்கியது.

வீட்டில் வறுமை குடி புகுந்தது. நான் இப்போது கட்டிய சேலையோடுதான் இருக்கிறேன். மாற்று சேலை கூடக் கிடையாது. என் கல்யாண சேலை முதல் சகல துணி மணிகளையெல்லாம் விற்றுச் சாப்பிட்டாகி விட்டது. பிள்ளைகளெல்லாம் சாப்பிடக் கூடியதாக வளர்ந்து விட்டன. அவைகளுக்கு உடுத்தக்கொடுக்க வேண்டும். அடிக்கடி நோயில் விழும் அவைகளுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும். நானே ஒரு நோயாளியாக வீட்டில் இப்போது நடமாடுகிறேன், எனது உடல் இப்போது புண்பட்டுப் போயிருக்கிறது.

—பிரசவம்.

தெய்வமே! இப்படியொரு வேதனையையும் உன் சிருஷ்டியில் நீ காட்டியிருக்கத்தான் வேண்டுமா...? இந்த வேதனை என் பத்தாண்டு மணவாழ்க்கையில் எட்டுமுறை சோதித்துச் சென்றது...

இந்த வேதனையிலிருந்து நான் நிவாரணம் பெற வேண்டுமென கணக்கில்லாமல் கர்ப்பத்தடை மாத்திரைகளைச் சாப்பிட்டு வந்துள்ளேன். ஆனால் காலக்கொடுவினை என்னை தோல்வியடையச் செய்தது. என்னைப் பெற்ற தாயே என்னை 'ச்சீ' என்று அருவருப்பாக ஒதுக்குமளவுக்கு கேவலப்பட்டுப் போனேன்.

நான் அடிக்கடி என் கணவனோடு சண்டை பிடித்துக் கொண்டு தாய் வீடு வரும் போதெல்லாம் அவர் நடத்தையை நா கூசாமல் நான் 'பச்சையாக'ச் சொல்லியிருந்தால் எனக்கு என்றைக்கோ அந்த 'மனைவி' வாழ்க்கையிலிருந்து விடுதலை கிடைத்திருக்கும்.

நான் ஊர் உலகத்துக்குப் பயந்தவளாய்.... எனக்குள்ளேயே ஒரு ஊமை இதயத்தை உண்டாக்கி என் வாழ்க்கையைப் பேசவிடாத ஓர் அந்தரங்கமாக்கிக் கொண்டு விட்டேன்...அந்தரங்கம் புனிதமானது என்று ஒரு சில சிந்தனையாளர்கள் சொல்கின்றார்கள். ஆனால் என் வாழ்க்கையில் அது கேவலமானது என்றுதான் உறுதியாகச் சொல்ல முடியும்.

பார்வதி தன் வாழ்க்கைப் புத்தகத்தை வாசித்துவிட்ட களைப்பில் ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டாள்.

**வெ**ந்து சாம்பலாகி வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்கும் 'மெண்டிலைப்' போன்று அவள் இன்னும் முழு உருவமாகவே இருக்கிறாள். இருபத்தெட்டு வயது இளமையில் நாற்பது வயது முதுமை அவளுள் குடி புகுந்திருந்தது. வைத்த கண் வாங்காது அந்த கரி பிடித்த சுவரையே பார்த்துக் கொண்டிருந்த பார்வதி திடீரென மயக்கம் போட்டு விழுந்தாள். அவளது பதற்றலையும் துடிப்பையும் கண்டு பயந்த பெற்றோர்கள் அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள்.

டாக்டரின் சோதனைக்குப் பிறகு பார்வதிக்கு இப்படியும் ஒரு சோதனை காத்திருந்தது.

''அவளது கர்பப்பையில் புற்றுநோய்...! இந்த பிரசவம் சுகப்பிரசவமாகாது!'' என்று டாக்டர் தனது நர்ஸிடம் ஆங்கிலத்தில் சொன்னார்.

''பிரசவக் காலங்களில் நடக்கின்ற இந்த மரணங்களெல்லாம் இயற்கை சாவுகளல்ல....அவை ஆண்கள் செய்கின்ற கொலைகள்...! இந்தக் கொலையாளிகளைத் தண்டிக்க சமூகத்தில் இன்னும் சட்டம் பிறக்கவில்லை''

அந்த நர்ஸ் பெண்ணும் ஆங்கிலத்திலேயே பதில் சொன்னாள்.

சமுதாயத்தில் — வாழ்க்கையில் — குடும்பத்தில் பெண்மையை ஒடுக்கும் கொடுமைகளை பெண்ணினம் மட்டும்தான் புரிந்து வைத்திருக்கிறது.

□□□

(26-10-1975—வீரகேசரி)

# ஒரு பிடி தேயிலை

அந்த சந்திரகாந்தி தோட்டத்து உச்சிமலையிலிருந்து பார்த்தால் கண்டி நகரம் தெரியுமாம். அந்த மலையில்... ஒரு தேயிலைப் பொட்டலில் அந்த கவ்வாத்துக்காரனும், கொழுந்துக்காரியும் 'களவாக' உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்தார்கள்.

—மேகம் மூடிய மலை

-தேயிலைச் சோலை

—ஏகாந்த நிலை

—குளிர் காற்று...

இந்தச் சூழ்நிலையில் ஒருவனும் ஒருத்தியும் தனித் திருந்து இளமைக் குறும்புகளோடு இனிக்க இனிக்க பொழுதை போக்கிக் கொண்டிருந்தால் வாழ்வு எவ்வளவு சிங்காரமாக இருக்கும்! இதற்குத்தான் பாரதி ''காதல் செய்வீரே உலகத்தீரே!'' என்று பாடினானா?

அந்த மோன நிலையைக் கலைத்தாள் பாப்பாத்தி. ''தீவாளியை ஏன் கொண்டாடுறோம்...?'' ''கெட்டவன் ஒருத்தன் ஒழிஞ்சுபோன நாளை பெருநாளாக்கி கொண்டாடுகிறோம்... அந்த கொண்டாட்டத்துக்குப் பெயர்தான் தீபாவளி பண்டிகை!'' என்று விளக்கம் கூறிய பரமசிவம், நரகாசுரன் கதையையும் சொன்னான்.

''எவ்வளவு அர்த்தமுள்ள திருநாளு தீவாளி'' என்று வியந்தவள், ''பொங்கலை ஏன் கொண்டாடுறோம்?'' என்று இன்னொரு கேள்வியையும் அவன் மேல் தூக்கிப் போட்டாள்.

அவளின் தலையைக் கோதிக் கொண்டே பொங்கல் பண்டிகையைப் பற்றி மிகவும் உணர்ச்சியோடு வியாக்கியானம் சொல்லிக் கொண்டிருந்தான்.

''பொங்கல் திருநாள், உழைக்கும் மக்களின் திருநாள்... உழைத்துக் களைத்த மக்கள் தங்கள் உழைப்பின் பலனை அனுபவிக்கும் நன்நாள். இந்தப் பெருநாளை அறுவடைத் திருநாள்... பாட்டாளித் திருநாள்... என்று வர்ணிக்கின்றோம். உழைப்பு என்ற சக்தியை மிருகம் கொடுத்தாலும் அந்த மிருகத்துக்கும் நன்றி செலுத்தி பொங்கல் வைக்கிறோம்... மாட்டுப்பொங்கல்... ஆட்டுப்பொங்கல்... இந்த அர்த்தமுள்ள பண்டிகையை தமிழன்தான் கண்டு பிடித்தான் உழைப்பையும் உழைப்பாளிகளையும் மதிப்பதற்காகக் கொண்டாடும் இந்த பண்டிகையை மனித குலமே கொண்டாடவேண்டும்.'' என்று பெருமூச்சு விட்டான்.

பாப்பாத்தி முகத்தில் திடீரென கவலை படர்ந்தது.

''ஒழைக்கிற பாட்டாளி... பலனடையிற நாளுதான்... பொங்கலுன்னா... நாங்க எந்த பலனை அடைஞ்சோம்...? எந்தப் பலனைக் கண்டோம்...? நாங்க என்னைக்கு பொங்கல் கொண்டாடுறது...? வாசலக் கூட்டிப் பெருக்கி கோலம் போட்டுட்டா பொங்கல் வந்திருமா...? மார்கழி பஜன பாடிக்கிட்டு வந்தா பொங்கல் வந்திருமா?'' அவள் ஆவேசமாக அவனிடம் கேள்வி கணைகளைத் தொடுத்தாள்.

''ஒனக்கென்னடி நடந்திச்சு? உமாதேவிக்கிட்டே ஞானப்பால் குடிச்சிட்டு வந்தியா?'' அவன் 'ஜோக்' அடித்தான். அவள் 'சீரியஸாக' கதைத்தாள். ''மச்சான்...!

எனக்கு நீண்ட நாளா மனசில ஒரு ஆச... இருந்துக்கிட்டே வருது... அந்த ஆசைய ஒன்னால தீர்க்க முடியுமா?'' அவள் ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

''ஆசைய சொல்லு...'' பரமசிவம் பதட்டமடைந்தான். அவள் தயக்கத்தோடு சொன்னாள்...

''நம்ம தேயில இஸ்டோரு பக்கத்துல கொழுந்து நிறுக்க வரும்போது தேயிலத்தூளு... எப்புடி வாசம் அடிக்குது... தெரியுமா? நான் தராசு தட்டுல கொழுந்து கொட்டுற நேரம் வரும் வரைக்கும் அந்த வாசத்த மூக்கால குடிச்சுக்கிட்டே இருப்பேன்... ஒன்னால முடிஞ்சா... ஒருநாளைக்கு கொஞ்சம் நல்ல சாதி தேயிலைத்தூளு கொண்டு வாயேன்? 'பீவோப்பி' (B.O P) தூளுதான் தெறமான தூளுன்னு எல்லாரும் சொல்றாங்க... நம்ம என்னைக்கி அந்த மாதிரி தூள குடிச்சுப் பாத்தோம்? நாங்க குடிக்கிற தூளு வயித்தையும் கொடலையும் எப்புடி பெரட்டுது தெரியுமா...?''

பரமசிவம் பாப்பாத்தியின் ஆசையை அறிந்து கூனி, குறுகிப் போனான். தேயிலைத்தூளைப் பற்றி அவளுக்கு இன்னும் சில விபரங்களைக் கூறினான்.

''பீவோப்பி மட்டுமல்ல...! பெனிங்ஸ், பெக்கோ பெனிங்ஸ், ஓரஞ்சு பெக்கோ, டஸ்ட்டு, டஸ்ட்டு நம்பர் வன் இப்படி பல ரகம் இருக்குது... நாம்ம குடிக்கிற தூளுக்குப் பேருடஸ்ட்டு! அந்தடஸ்ட்டுக்கு பட்டப்பெயரும் இருக்கு! அது லேபர் டஸ்ட்டு!'' உழைக்கின்ற மக்களை எவ்வளவு அவமானப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதையும் அவன் அவளுக்கு உணர்த்தினான். ''பாப்பாத்தி! ஒனக்கு எப்படி சரி. நீ ஆசப்பட்ட அந்த பீவோப்பி தூளு கொண்டாந்து தர்றேன்!'' என்றான்.

அந்திசூரியன் அந்த மேட்டு மலைக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டிருந்தான். வானம் சிவந்தது. அவர்கள் வீட்டை நோக்கினார்கள்.

பரமசிவம், எப்படி மலைவேலையிலிருந்து தேயிலைத் தொழிற்சாலை வேலைக்குப் போவது... என்று தலையைப் போட்டுக் குடைந்து கொண்டிருந்தான். "எப்படியாவது இஸ்டோரு வேலைக்குப் போயி... அவளுக்கு கொஞ்சம் பீவோப்பி தேயிலை கொண்டாந்து குடுத்திடணும்... இல்லாட்டி நான் ஆம்பளை இல்லே..." அவன் படுக்கையில் புரண்டு மனசுக்குள்ளே சவால் விட்டுக் கொண்டிருந்தான்.

பரமசிவம் பாப்பாத்தியை விரும்புகிறான்...காதலிக்காக காதலன் மலையைக் கூட உருட்டி வந்த காவியங்களைப் படித்திருக்கின்றோம்... பாவம்... இந்த ஏழைகளின் காதலில் ஒருபிடி தேயிலைத்தூளு எவ்வளவு பெரிய சாதனையாகத் தெரிகின்றது?

—மீண்டும் மறுநாள் கவ்வாத்து.

பரமசிவம் பளபளத்தக் கத்தியோடு கவ்வாத்துமலைக்கு வேலைக்குப் போகிறான் இரண்டு மூன்று தேயிலைச் செடிகளை வெட்டியவன், கொஞ்ச நேரத்தில்... அவன் கையை வேண்டுமென்றே வெட்டிக் கொண்டான். இரத்தம் ஆறாகப்பெருகியது... சக தொழிலாளர்கள் ஓடி வந்தனர். ஒருவன் தன் தலைப்பாகையை தண்ணீரிலே முங்கி கட்டுப் போட்டான், அவனை அணைத்தபடி கொழுந்து லொறியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். பரம சிவனுக்கு பதினெட்டு தையல்!

அவனது இடது கை கழுத்தோடு தொட்டில் கட்டி தொங்கியது. பாப்பாத்தி துடித்தாள்—துவண்டாள்.

"கவலப்படாத... எல்லாம் நன்மைக்குத்தான்..." என்று உள்ளர்த்தம் வைத்துப் பேசினான்.

—ஒரு மாதம் ஓடியது. பரமசிவத்துக்கு காயம் ஆறி நூல் வெட்டப்பட்டது. அவன் நல்ல ஒரு வேலைக் காரன். அவன் கேட்டுக் கொண்டபடி தொழிற்சாலையில் மூன்று மாதத்துக்கு 'இலேசு வேலை' கொடுக்கும்படி தோட்டத்து டக்டர் 'ரெக்கமென்ட்' பண்ணியிருந்தார்.

—நாட்கள் ஓடின.

தேயிலைத் தூளின் ஒவ்வொரு ரகமும் ஒவ்வொரு விதமான வாசத்தைக் காட்டியது. பரமசிவம் பாப்பாத்தி சொன்னது போலவே அவனும் மூக்காலேயே அந்த வாசத்தைக் குடித்து வந்தான்.

தேயிலைத் தூள் அந்த தொழிற்சாலைக்குள்ளே எகிப்து பிரமிட்டுக்களைப் போல மலை மலையாய் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

''இஸ்டோரு உள்ளுக்கும் குட்டி மலை...கருப்பு மலை... கோபுரமாய் உயர்ந்த மலை...'' பரமசிவம் மனதுக்குள் மெட்டெடுத்தான்.

தன் காதலியின் ஆசைக்கனவு நிறைவேறும் நாள்தான் பொங்கல் திருநாள்?—பாட்டாளியின் பெருநாள் என்று முணுமுணுத்தான்.

'இவ்வளவு அருமையான தேயிலைத் தூளு தயாரிச்சு குடுக்கும் தொழிலாளிக்கு காத்துல பறக்கும் அந்த செம்பட்டை நிறத் தூசியை 'லேபர் டஸ்ட்டு'ன்னு முடிசூட்டி எங்களுக்கு குடிக்க தர்ரானுங்களே...இது...கேக்க ஒரு சங்கம் இல்லீயா...? ஒரு தலைவர் இல்லீயா...? ஈஹூம் சங்கமும் கேக்காது... தலவர் மாருங்களும் கேக்க மாட்டாங்க...இதெல்லாம் பெரிய சங்கதி...நூத்தி அம்பது வருசமா... நம்ம பரம்பர குடிச்சுக்கிட்டு வர்ற கசப்பான சங்கதி' அவன் நிசப்தமானான்.

''வேறு துறைகளைச் சேர்ந்த தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், அங்கே தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு சகாயவிலையில்—தரமான தாகக் கிடைக்கும் போது, தேயிலைத் தொழிற்சாலையில் மாத்திரம் ஏன் இந்த விதி விலக்கு?'' இப்படி பாரமான கேள்விகளையெல்லாம் நினைக்கக் கூட அவனுக்கு சக்தி இல்லை.

கையில் இன்னும் கட்டு இருக்கிறது; நிறைய இரத்தம் போன கை...சூம்பி இருந்தது. கையைத் தடவிக் கொண்டவன். கற்பனையில் முழ்கினான்...

தொழிற்சாலைக்குள்ளே மலைபோல குவித்து வைக்கப்பட்டிருக்கும் தேயிலைத் தூளுக்குள்ளேயிருந்து பாப்பாத்தி சினிமா படத்தில் சுவாமிகள் தோன்றி வருவது போல தோன்றி, தேயிலைத் தூளை அள்ளி அவன் மேல உதிர்க்கிறாள்! ...ஆஹா! மஹாலட்சுமி நாணயங்களை அள்ளி அவன் மேல் கொட்டுவது போல உணர்வு பெறு கிறான்!

பரமசிவம் பரக்கப் பரக்க தன் முழுக்கை சட்டையை நீட்டி விடுகிறான். அக்கம் பக்கம் பார்க்கிறான். தொழிலாளர்கள் தூரத்தில் வேலை செய்து கொண்டிருக் கிறார்கள். ஒரு கை மடிப்பில் ஒரு பிடி 'பீவோப்பி' தூளை அள்ளி வைத்து சுருட்டிக் கொள்கிறான் மறுகை மடிப்பில் கொஞ்சம் தள்ளிப் போய்....பெனிங்ஸ் தூள் ஒரு பிடி அள்ளி வைத்து சுருட்டிக் கொள்கிறான். இரண்டு கைகளின் சட்டை மடிப்பும் கச்சிதமாக இருக்கின்றன எவருமே இந்த விசயத்தைப் பார்க்காத வரையில் திருப்திப்பட்டுக் கொண்டான். ''என்னா...இதெல்லாம் ஒரு திருட்டா...?'' திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டான். ''இன்னக்கி இது போதும்... நாளைக்கு கொஞ்சம் பெக்கோ...அடுத்த நாளு கொஞ்சம்...ஓரஞ்சுபெக்கோ...அப்புறம் கொஞ்சூண்டு டஸ்ட்டு நம்பர் வன்னு' பரமசிவம் லேசாக சிரித்துக்

கொண்டான்... "என்னா...இதெல்லாம்... ஒரு திருட்டா?" மனசு படக் படக்கென்று அடித்தது... "எப்படியெல்லாம் திருடுறானுங்க...நம்ம என்னா யாவாரம் செய்யுறதுக்கா திருடுறோம்...?" தன்னை கஷ்டப்பட்டு சமாதனப் படுத்திக் கொண்டு சல்லடை காம்பரா பக்கம் போனான்.

மடியிலே கனம் இருந்தால்தான் வழியிலே பயம் இருக்கும்...

கள்ளம் கபடமற்ற அந்த தொழிலாளியின் மனதிலே இன்று கறை படிந்த ஒரு குற்ற உணர்வு...அவனை பூதாகரமாக வாட்டியது...இந்த அற்ப காரியத்துக்காக அவன் நாணி, கூனி, குறுகிக் கொண்டிருந்தான்.

"...என்னா....இதெல்லாம் ஒரு திருட்டா...?" ஆயிரம் தடவை பிதற்றிக் கொண்டு சல்லடை காம்பிராவிலிருந்து வெளிக்கதவு பக்கம் வந்தான். வெளிக் கதவு, தொழிற்சாலை ஆப்பீஸ் அருகில்தான் இருக்கும்.

தொழிலாளர்கள் வேலை முடிந்து போகும்போது டீமேக்கர் மார்கள் 'செகியூரிட்டி கார்ட்' வேலையும் பார்ப்பதற்கு அந்த வாசல் கதவு வசதியாக இருக்கும். இது பிரிட்டிஷ்காரன் காலத்து மூளை...

பரமசிவம் என்றும் இல்லாதவாறு இன்றைக்கு பரம அப்பிராணியாக கதவருகே வந்து கொண்டிருந்தான். பெரிய டீமேக்கருக்கு பிடரியிலும் ஒரு கண் இருக்குமென்று புதிதாக இஸ்டோர் வேலைக்கு வந்தவனுக்கு எப்படி தெரிந்திருக்கும்? அவருக்கு இன்னும் ஞானக்கண்ணும் நெற்றிக் கண்ணும் உண்டு! அவருக்கு ஊர்—உலகம்—மனைவி—மக்கள்— வயசு—வாலிபம்—நரை எல்லாமே அந்த தொழிற்சாலைதான்!

"டேய் பரமசிவம்!" என்று இயந்திரத் தொனியில் கர்ஜித்தார். பரமசிவத்துக்கு மூத்திரப்பை ததும்பியது! அவனை ஆப்பீசுக்குள் இழுத்து கதவைப் பூட்டினார்.

''ஐயோ சாமி! கடவுளே!'' என்று அவன் கதறவில்லை.

''என்னா...கொன்னுப்புடுவானா... பாப்போம்'' என்று மௌனமாக இருந்தான்.

பெரிய டீமேக்கர் தோட்ட நிர்வாகிக்கு டெலிபோனை சுற்றினார். தோட்ட நிர்வாகி போலீஸ் ஸ்டேசனுக்கு டெலிபோனை சுற்றினார். ஒரே சமயத்தில் போலீஸ் ஜீப் வண்டியும் தோட்ட நிர்வாகியின் கார் வண்டியும் தொழிற் சாலை ஆப்பீஸ் அருகே வந்து நின்றன.

பரமசிவம் பாப்பாத்திக்காக மரணமே நேர்ந்தாலும் அது என் பாக்கியம் என்று நினைத்துக் கொண்டான்.

தோட்ட நிர்வாகி வந்ததும் பொலீஸ்காரன் முன்னாலேயே பரமசிவத்தின் உயிர் நிலையைப் பார்த்து உதைத்தார், அவர்தான் தோட்டத்துரை; அவருக்கு தொழிலாளர்களை எதுவும் செய்ய முடியும். பரமசிவத்தை மீண்டும் ஓங்கி அறைந்தார். ஆப்பீஸில் இருந்த 'ரூல் கம்பை' எடுத்து ஓங்கினார். பொறுமை மீறிய பரமசிவம் அந்த 'ரூல் கம்பை' தாவிப்பிடுங்கினான்...கோபம் கொண்ட ஒரு பொலீஸ்காரன் பரமசிவத்தின் சாரத்தைப் பிடித்து இழுத்து உரிந்தான். அது இத்துப்போன பஞ்சை துணி! தார்ரென கிழிந்து விழுந்தது.

அவன் அரை நிர்வாணமாக மேல் சட்டையோடு நின்றான். அவன் மனிதன். அவனுக்கு மான உணர்வு உண்டு. அவனது உழைப்பில்தான் இந்த நாடு உயிர் வாழுகின்றது. அவ்வளவு பெறுமதியான ஒரு உழைப்புச் சக்தியை... இப்படி... நிர்க்கதியாக்கி... அராஜகம் செய்து கொண்டிருக் கும் கொடுமையை தெய்வம் வந்து பார்த்தால் இந்த பிரபஞ்சத்தையே அழித்துவிடும்.

பரமசிவத்தின் மூக்கிலும் வாயிலும் இரத்தம் கசிந்தது. அவனை சாரத்தை எடுத்துக் கட்டும்படி பொலீஸ்காரன் அதட்டினான். அவன் பிடரியில் கையை வைத்து ஜீப்புக்

குள்ளே தள்ளினான். ஒரு கொலைகாரனை — ஒரு கொள்ளைக்காரனை—ஒரு கிரிமினலைக் கையும் மெய்யு மாகப் பிடித்த கோலத்தில் அந்த ஜீப் வண்டி உறுமியது. இரண்டு, மூன்று 'பக்கட்' தேயிலை பார்சல்களை ஜீப்புக் குள்ளே கொண்டு வந்து வைத்தார், பெரிய டீமேக்கர். போலீஸ்காரர்களுக்கு துரை கொடுக்கும் 'சந்தோசம்' இது. ஜீப் பரமசிவத்தோடு பறந்தது.

பாப்பாத்தி ஆஸ்பத்திரியில் வந்து கதறி துடித்தது போல போலீஸ் ஸ்டேஷனில் வந்து துடிக்கவில்லை. கூண்டுக் குள் அடைபட்டிருக்கும் குருவி போலநின்ற பரமசிவத்தை பார்த்து அவள் கண்கள் இரண்டு சொட்டு ஈயத்தை பூமி யில் கொட்டின. கொண்டு வந்த மாற்று உடுப்புக்களை அவனிடம் கொடுத்தாள். நேராக போலீஸ் அதிகாரியிடம் சென்றாள். பரமசிவம் தேயிலைத்தூள் எடுக்க வேண்டிய நிலைமை யாரால், எதற்காக நடந்தது என்ற விபரத்தைக் கூறினாள். அவனோடு தன்னையும் கூண்டுக்குள் அடைக் கும்படி கெஞ்சினாள்.

—பலிபீடத்திலும் மனிதர்கள் இருப்பார்கள். அந்த போலீஸ் அதிகாரி சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து உருவாகிய ஒரு பிரஜை. அந்த மனிதர் இந்த எளிய ஜீவன் களின் தவிப்புகளை உணர்ந்தார்!

பாப்பாத்தி பரமசிவத்துக்கு தினமும் வீட்டுச் சோறு கொண்டு வந்து கொடுத்தாள். பீடி, வெற்றிலை கொண்டு வந்தாள்! சாயத் தண்ணீரை சாராயப் போத்தலில் சாராயம் மாதிரியே கொண்டு வந்தாள். போலீஸ்காரர்கள் பல்லைக் காட்டினார்கள்.

—இன்றைக்கு பெரிய டீமேக்கர் வாக்குமூலம். போலீஸ் அதிகாரியின் முன்னிலையில் அவர் களவு பிடித்த விபரங் களைக் கூறிக் கொண்டிருந்தார். பரமசிவத்தின் சட்டை

கை மடிப்பிலிருந்து எடுத்த தேயிலையின் நிறை நான்கு அவுன்ஸ் என்று முறைப்பாடு புத்தகத்தில் குறித்தார்கள்.

''ஒரு நாளைக்கு நாலு அவுன்ஸ்...ஒரு மாசத்துக்கு...? ஒரு வருசத்துக்கு...?'' என்று புள்ளி விபரம் போட்டு காட்டினார் பெரிய டீமேக்கர். அவர் இன்றைக்கும் இரண்டு மூன்று தேயிலை 'பக்கட்' கொண்டு வந்திருந்தார். அவர் போலீஸ் ஸ்டேஷனை விட்டுப் போனதும் பரமசிவத்தை கூண்டிலிருந்து திறந்து தன்னிடம் வரும்படி பணித்தார். பரமசிவம் பெரியவரின் முன்னால் வந்து அமர்ந்தான். அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவர் இப்படிக் கேட்டார்.

''பெரிய டீ மேக்கர் தேயிலைத்தூள் களவு எடுப்பது இல்லையா?'' பரமசிவத்திடம் போலீஸ் அதிகாரி கேட்ட இந்த கேள்வி அவன் தலையில் பன்னீரை வார்த்தது போல் இருந்தது.

அவன் அக்குவேர்... ஆணிவேராக விவரித்தான். எப்படி பெரிய டீமேக்கர் தூள் களவு எடுப்பார்...எப்படி தொழிற்சாலையை விட்டு கடத்துவார்...யார் யார் ஒத்தாசை செய்வார்கள். தொழிற்சாலை காவல்காரன் எப்படி 'டோர்ச் லைட்' அடிப்பான்...தேயிலை வியாபாரி எத்தனை மணிக்கு வாகனம் கொண்டு வருவான் என்ற விபரங்களையெல்லாம் 'டெக்'கிலே வீடியோ பீஸை போட்டு காட்டுவது போல 'காட்டினான்' இருபத்துநான்கு இஞ்சி கலர் டி வியிலே படம் பார்ப்பது போல போலீஸ் அதிகாரி.பரமசிவம் கூறிய விபரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''பரமசிவம்...நீ ஒரு அப்பாவி! இந்த நாலு அவுன்ஸ் தேயிலை ஒரு களவே இல்லை...நீ தேயிலைத் தொழிலாளி பல கோடி தேயிலைத் தூளுக்கு நீ சொந்தக்காரன்... இருந்தாலும் சட்டத்தின் பிடியில் இது தேயிலை கேஸ்!''

நீ ஆறு மாசம் உள்ளே இருந்தாகணும்...ஜெயிலை விட்டுப் போனதும் அந்த டீ மேக்கர் திருட்டைப் பிடித்துக் கொடுத்தால் உன்னை ஒரு புது மனிதனாக்கிக் காட்டுவேன்'' என்றார் போலீஸ் அதிகாரி...

—பரமசிவத்துக்கு ஆறுமாதச்சிறை; தோட்டமே குமுறியது, ''பரமசிவத்துக்கு நடந்த கதிதான் எல்லாத் தொழிலாளிகளுக்கும் நடக்கும்'' என்றார்கள். 'அந்த டீ மேக்கருக்கு ஒரு பாடம் புகட்டவேணும்' என்று சூளுரைத் தார்கள்.

—ஆறுமாதச் சிறை.

பாப்பாத்தி ஆறு ஜென்மங்கள் எடுத்தாள்.

ஆறு மாதங்களும் ஆறு நாட்களைப் போல ஓடி மறைந்தன. பரமசிவம் அழகான தாடியோடு சிறைச் சாலையை விட்டு வெளியே வந்தான்.

தொழிலாளர்கள் டீமேக்கர் திருட்டை எப்படி பிடித்துக் கொடுப்பதென்றே திட்டம் போட்டுக் கொண்டிருந்தார் கள். அவர்கள் திட்டமும் ஜெயித்தது.

...திருட்டுத் தேயிலையை சுமந்து நகர்ந்த வாகனம்... நிலத்துக்கே டோர்ச் வெளிச்சம் காட்டிக் கொண்டிருந்த காவல்காரன்... இரண்டு கைகூலிகள்... நீலமலைத் திருடனைப் போல கண்களைத் தவிர்த்து மூக்கு, வாய் காதுகளை மூடி மறைத்துக் கொண்டிருக்கும் கம்பளி குல்லாவை மாட்டிக் கொண்டு, சாரத்தோடு வந்து மூடை கணக்கு எழுதிக் கொண்டிருந்த பெரிய டீமேக்கர் ஐயா... ஆகிய அந்த இரவு நேர குடும்பத்தினரை ''லபக் லபக்'' கென்று சுற்றி வளைத்துப் பிடித்தார்கள், தொழிலாளர்கள்.

தோட்டத்துரை அங்கு நடந்த சம்பங்களை தனது கெமராவினால் படங்கள் பிடித்தார்.

பெரிய இடத்து முறையீட்டுக்கு இந்தப் படங்கள் சாட்சியாக அமையும் என்றார்!

தூரத்தில் நின்ற போலீஸ் ஜீப் வண்டியில் ஏற்றுவதற்காக பெரிய டீமேக்கர் ஐயாவை 'ஊர்வலமாக' அழைத்துச் சென்றார்கள். அன்று பரமசிவத்தைப் பிடித்துச் சென்ற அதே போலீஸ்காரர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் டீமேக்கர் ஐயாவை நடுவில் இருத்தி முன்னுக்கொருவர் பின்னுக்கொருவராகத் துப்பாக்கி ஏந்திய வண்ணம் சென்றார்கள்.

''பகல் நேரமா இருந்தா... இந்த 'சீன்' எவ்வளவு சோக்கா இருக்கும்...!'' என்றான் ஒரு தொழிலாளி. பெரிய டீமேக்கருக்குப் பதிலாக இரண்டாவது டீமேக்கர் 'எக்டிங்' பெரிய டீமேக்கரானார். பரமசிவத்துக்கு தோட்ட நிர்வாகி தொழிற்சாலை காவல் வேலை கொடுத்தார். அவனது காதலி பாப்பாத்திக்கு எல்லா வகை தேயிலைத் தூளிலும் ''கொஞ்சம் கொஞ்சம்'' கொடுக்கச் சொன்னார். அந்தத் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி நல்ல ரகத் தேயிலையை சகாய விலையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வேன் என்றார்.

தொழிலாளர்கள் அவரை எம்ஜியார் துரை என்றார்கள்!

புதிய காவல்காரன் பாப்பாத்தி முகத்துக்கு நேராக அந்த ஆறு பெட்டரி டோர்ச் வெளிச்சத்தை அடித்தான்!

□ □ □

(7-01-1992)

# என்னப் பெத்த ஆத்தா...

—தோட்டக்காரியாலயம்.

ஜன்னலருகே துரைசாமி வந்து நின்றான். அவன் பின்னால் தோட்டக் கமிட்டித் தலைவரும், மரணாதாரக் கமிட்டியினர் ஐந்து பேரும் வந்து நின்றார்கள்.

துரைசாமியின் மனைவி செல்லம்மா கண்டி பெரியாஸ் பத்திரியில் தவறிப் போய் விட்டாள்.

அக்கரபத்தனை ஆஸ்பத்திரியில் முடியாதென்று நுவரெலியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். அங்கேயும் முடியாதென்று கண்டி பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். கடைசியில் கண்டி பெரியாஸ்பத்திரியில் போய்தான் முடிந்தது...

துரைசாமியிடம் தோட்ட நிர்வாகி 'பெட்டிக்காசு' முந்நூறு ரூபாயையும், மரணாதார கமிட்டியினரிடம் அவர்களது மரணாதார நிதி இரண்டாயிரத்து ஐந்நூறையும் கொடுத்தார் மரணக் கமிட்டித் தலைவர் சீரங்கன் கண்களை அகலத் திறந்து கொண்டு வாங்கினான்.

தோட்டங்களில் மரணம் சம்பவித்து விட்டால்... அ மரணாதாரக் கமிட்டியினருக்கு பண்டிகை பிறந்த மாதிரி.. அவர்கள் ஆடிக் குடித்து கும்மாளம் போடுகின்ற நாளாகி விடும்!

தலைவர் காசை வாங்கி எண்ணிப் பார்த்தார்; கணக்காக இருந்தது. தலைவருக்கும் மரணக்கமிட்டி யினருக்கும் புதிய 'தெம்பு' பிறந்தது. தலைவர் வீரமாகப் பேசிக் கொண்டு போனார். "இன்னக்கி... பிரேதப்பெட்டி விக்கிற வெலைக்கு தோட்டத்துல குடுக்குற முந்நூறு ரூவா போதாது... எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நிர்வாகத்துக் கிட்டே அடிச்சுப் பேசணும். நிர்வாகம் மறுத்தால் 'ஸ்ட்ரைக்' அடிக்கணும்..."

தலைவர், துரைசாமி, கமிட்டியினர் எல்லோரும் அந்த முடுக்கு கடைக்குள் நுழைந்தார்கள். ஒரு போத்தலை வாங்கி முடித்தார்கள். தலைவர் நாக்கைச் சப்பினார்.

"எங்கால் ரெண்டு... ஏழு பேருக்கு ஒன்னு போதுமா?" என்றார். "இன்னொன்னு எடுத்தாப் போச்சு!" என்று சத்தமாகப் பதில் சொன்னான் சீரங்கன்.

இன்னொன்றும் வந்தது; 'இழுத்து' முடிந்தது. அவர்கள் இப்போது கொஞ்சம் பதமாக இருந்தார்கள். தோட்டப் பகுதிகளிலுள்ள சாராயக் கடைக்காரர்கள் போதை தரக்கூடிய 'யூரியா' போன்ற பசளை கலவைகளைக் கலந்து சாராயப் போத்தல்களை மீண்டும் அடைத்து விற்பார்கள். தொழிலாளர்கள் அதிகப் போதை ஏறுவதையே விரும்புவதால் இந்த கலப்படம் இப்படி நடப்பதுண்டு.

"தொரைசாமி! நீ இப்பவே... ஏதாவது சாப்பிட்டுக்க... லொறியிலே ஏறிட்டா... அப்புறம் கண்டிக்குப் போயிதான் வயித்தப் பாக்க வேண்டிவரும்." என்றார் தலைவர்.

சாராயக்கடைக்கு அடுத்த கடை நல்ல சாப்பாட்டுக் கடை. இறைச்சி ரொட்டி—முட்டை ரொட்டி—பிஸ்டேக் எல்லாம் வந்தது. நன்றாகச் சாப்பிட்டார்கள். சிகரட்டுக் களை ஊதிக் கொண்டு லயத்தை நோக்கி நடந்தார்கள்.

செல்லம்மாவின் பிள்ளைகள் கதறி அழும் சத்தம் ரோட்டுக்கு கேட்கிறது.

—மரண வீடு

ஆளுக்கொரு மூலையில் தலையில் அடித்துக் கொண்டு அம்மா... தாயே என்று அந்த சின்னஞ் சிறுசுகள் ஓலமிட்டுக் கத்துகின்றனர். மூத்தவள் தன்னை கொஞ்சம் சமாளித்துக் கொண்டு சிறுசுகளை ஆறுதல் படுத்துகிறாள். செல்லம்மாவுக்கு ஒரு பிள்ளைதான் வயசுக்கு வந்தவள். அவள்தான் இந்தக் குழந்தைகளுக்கெல்லாம் இனிமேல் தாயாக வந்து காப்பாற்ற வேண்டும். துரைசாமியின் தாய் மாரியாயிக்கு கண்பார்வை கொஞ்சம் குறைவு. அவள் பென்ஷன் வாங்கிக் கொண்டு வீட்டோடு இருக்கிறாள். செல்லம்மாவும் மாரியாயும் தாயும் மகளுமாக குடும்பம் நடத்தி வந்தார்கள். இந்த பாசம் பாதியிலே அறுந்து விட்டது. கிழவி ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு முனகிக் கொண்டிருக்கிறாள்.

துரைசாமி சாடையாக வீட்டை வந்து எட்டிப் பார்த்தான். பிள்ளைகள் தன்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுவார்களென்று பயந்து ஒதுங்கி ஒதுங்கி நின்றான். அவனது சாராய வெறியை அவர்கள் கண்டு விடுவார்கள் என்று சால்வையை முக்காடு போட்டுக் கொண்டு, வாயையும் துணியால் மறைத்தப்படி மரண வீட்டில் ஓரமாக நின்றான். அவனிடம் சீரங்கன் வந்து வெகு நேரமாக குசுகுசுத்தான். “மச்சான் தொரை! பொணத்தைக் கொண்டுவர ரொம்ப தூரம் போக வேண்டியிருக்கு. லொறி வழியில... ரிப்பேர் கிப்பேர்ன்னு நின்று போயிடுச்சுன்னா நடுரோட்டுல பொணத்த வச்சிக்கிட்டு இருக்க முடியாது. ஒரு வாகனத்த ‘அயர்’ பண்ணியாவது பொணத்த வீட்டுக்கு கொண்டு வந்து சேக்கணும்... நம்ம கையில இருக்கிற காசு பத்தாது. ஒங்காயி காதுல கெடக்குற தோடு ரெண்டையும் வாங்கு... அடகு வச்சி ஒரு ஆயிரத்த மேலதிகமா வச்சிக்குவோம்... தலவர் அண்ணனும் இப்புடித்தான் ‘ரோசனை’ சொன்னாரு...”

துரைசாமியும் சீரங்கன் சொன்னபடியே செய்தான்.

மரண வீட்டுக்கு அக்கம் பக்கம், அடுத்த லயம் என்று ஆட்கள் வந்து குவிந்தார்கள்.

வாலிபர்கள் சிலர் வந்து வாசல் முன்னால் பந்தல் போடுவது பற்றியும், வாசலைக் கொஞ்சம் அகலமாக்கி ஆட்கள் வந்து நிற்கும்படியாக வசதி செய்வது பற்றியும், ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். சில இளைஞர்கள் பழைய டையர்களைக் கொண்டு வந்து அடுக்கினார்கள். இரவில் சாமம் காக்கவேண்டும்... குளிர்காலம்... வாசலில் விடிய விடிய காத்திருக்க வேண்டும். ஆகவே டையர்களைக் கொளுத்துவார்கள்.

மரணக்கமிட்டியினரும், தலைவரும், துரைசாமியும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் அங்கு மிங்கும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். சீரங்கன் தலைவர் காதை கடித்தான். ''லொறியில போறநேரம்...ஒன்னு பாவனைக்கு வாங்கி வச்சிக்குவோமா...?'' தலைவர் தலையை ஆட்ட, சீரங்கன் மான்குட்டியைப் போல துள்ளிக்குதித்து ஓடினான்.

துரைசாமியை இழுத்துப்பிடித்த கிழவி சொன்னாள், ''புள்ளைகளுக்கு ரொட்டி சுட்டு குடுக்கணும்...தந்தி கெடைச்சதிலிருந்து பச்சத்தண்ணி வாயில வைக்கல்ல... எல்லாம் பசியில கெடக்குதுக... வர்றவங்களுக்கும் தேத்தண்ணி ஊத்திக்குடுக்கணும்...சீனி...தூளு வாங்கணும் ஒரு நூறு ரூவ்வா குடுத்துட்டுப் போப்பா...''

''ஆயா...சல்லியெல்லாம் தலவரு கையிலே இருக்கு... அம்பது ரூவா தர்றேன்... எப்படியாவது சமாளிக்கப்பாரு... முடியாட்டி தம்பிக்கிட்டே கேளு...குடுப்பான்...நாங்க போயி நேரத்தோடு பொணத்த கொண்டாரணும்...'' துரைசாமி மெள்ள நழுவினான்.

அவனுக்கு மனைவி இறந்த சம்பவம் ஓர் இழப்பாகவோ பெருந்துயரமாகவோ தெரியவில்லை. ஆழமாக சிந்திக்கத் தெரியாத மக்களிடம் பாச உணர்வுகள் மேலோட்டமான உணர்ச்சியாகவே ஓடிவிடுகின்றன.

கண்டி ஆஸ்பத்திரிக்குப் போக லொறி வந்துவிட்டது. லொறியின் பின்னால் இருபது பேர்வரை ஏறியிருந்தார்கள். டிரைவர் குய்யோ முறையோவென்று கத்தினான். ''பத்து பேருக்கு மட்டுந்தான் 'பாஸ்' எழுதிக் கொடுத்திருக்காரு தொரை... நீங்க எறங்காட்டி லொறிய எடுக்க மாட்டேன்...'' என்றான், ஒருவரும் கேட்டபாடில்லை இந்தமாதிரி சூழ்நிலையில் தோட்டத்து லொறி தூரப் பயணம் போகும்போது வேடிக்கைக்காக 'சும்மா' தொத்திக் கொள்ளும் கூட்டங்களுக்கு குறைவே இருக்காது!

டிரைவருக்கு கோபம் வந்து விட்டது. ''தலைவரே! இந்தாங்க லொறி சாவி! நீங்க மவராசனா...போயி பொணத்த கொண்டுவாங்க...'' என்று சாவியை நீட்டினான். தலைவர் ஒருவாறு சமாளித்து எல்லோரையும் இறக்கிப் பத்துப் பேர்களை மட்டும் ஒழுங்கு செய்தார்.

லொறி புறப்பட்டது...

தோட்டங்களில் சாராயத்துக்குப் பழக்கப்படாத நல்ல குணங்களுடைய இளந்தொழிலாளர்களும் இருக்கின்றார்கள் அவர்கள் தங்களை விளையாட்டுக்களில், கலை நிகழ்ச்சிகளில், வாசிக சாலை, சமூக சேவை என்றெல்லாம் பல துறைகளில் ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

இந்த வகையான இளைஞர்கள் பலர் மரண வீட்டில் தேவையான சில வேலைகளைச் செய்தார்கள். வந்தவர்களுக்கு பாண், தேநீர், வெற்றிலை வழங்கினார்கள். துரைசாமியின் தாயார் மாரியாயிடம் உறவினர்களின் விலாசங்களைக் கேட்டறிந்து அந்தந்த இடங்களுக்கெல்லாம் 'கேதம்' சொல்வதற்கு ஆட்களை ஏற்பாடு செய்தார்கள்.

தோட்டத்து 'டோபி'யிடம் வெள்ளை சேலைகள், வேட்டிகள் கொண்டு வரும்படி ஆள் அனுப்பினார்கள்.

மரண வீடு...அங்கு கூடி வாழும் மக்களின் அரவணைப் போடு ஒன்று கலந்திருந்தது.

அக்கரப்பத்தனையிலிருந்து புறப்பட்ட தோட்டத்து லொறி நாகசேனை கடைவீதியில் போய் நின்றது. ''பிரேதப் பெட்டியும், கோடிச் சேலையும் நாகசேனை பஜாரிலேயே வாங்கிக் கொள்றது நல்லது. கண்டியில... ஒன்னுக்கு மண்ணா... போடுவானுக...'' மரணாதாரக் கமிட்டித் தலைவர் சீரங்கன் சொன்னான். அவன் சொன்ன தில் நியாயம் இருந்தது. அதன்படியே வாங்கிக் கொண்டார்கள்.

— டிரைவருக்கு சிகரெட்... லொறி புறப்பட்டது.

அந்திநேரம் ஐந்துமணி. லொறி கண்டி நகரத்தை வந்தடைந்தது. தலைவரும் மரணக்கமிட்டியினரும் டிரைவரை உபசரிக்கத் துடித்தார்கள். டிரைவர் தயங்கிய படி சொன்னார். ''கொஞ்சம் நல்ல 'டிரிங்'கா பாருங்க!'' நல்ல 'டிரிங்'கும் வந்தது. லொறியிலிருந்த மற்றவர்களுக்கு வழக்கமான போத்தல் உடைபட்டது.

இந்த அவசர அபிஷேகம் முடிவடைந்தது. லொறியும் ஆஸ்பத்திரியை வந்தடைந்தது.

ஆஸ்பத்திரி காரியாலயத்தில் தந்தியைக் காட்டினார் கள். டிரைவருக்கு சிங்களம் தெரியும். சிங்களத்திலேயே எல்லா விபரங்களையும் கூறினார். ஆஸ்பத்திரி கிளாக்கர் மையக் காம்பிராவுக்கு 'துண்டு' எழுதிக் கொடுத்தார்.

லொறியை மையக்காம்பிரா அருகில் கொண்டு போய் நிறுத்தினார்கள். தோட்டத்து லொறியைப் பார்த்த ஒரு மையக்காம்பிரா ஊழியன் முணு முணுத்தான். ''ஹேய்...!

இன்னக்கி நமக்கு கோழிக் கறி!...ஒரு எஸ்டேட் கேஸ் வந்திருக்கு!'' என்றான்.

உற்றார் உறவினரைப் பறி கொடுத்துப்போகின்றவர் களிடம் 'பிடுங்கிய மட்டும் லாபம்' என்று உரித்துவிடு வார்கள்... இந்த மையக்காம்பிரா ஊழியர்கள்!

தலைவர் துரைசாமியை முன்னால் அழைத்துப் போனார். துரைசாமி ஒரு மீசைக்காரனிடம் துண்டை நீட்டினான். அவன் கண் மண் தெரியாமல் குடித்திருந்தான். ''எமதர்மன் இப்படித்தான் இருப்பானோ...?'' என்று துரைசாமி நினைத்துக் கொண்டான். வெத்து உடம்பு... சீறும் புலி...படமெடுத்தாடும் பாம்பு...எல்லாம் அவன் உடம்பில் 'பச்சை' குத்தப்பட்டிருந்தது. அவன் பேசினான் ''நாங்க ஓப் டூட்டி....! வூட்டுக்குப் போற நேரம்....இப்போ டூட்டிக்கு வர்றவனைக் காணோம். போய்...கிளாக்கர் மாத்தயாகிட்டே சொல்லுங்க...நாளைக்கு காலையிலே தான் பொணம் தரமுடியுமுன்னு.''

டிரைவர் தலைவர் காதை கடித்தார். தலைவர் மரணக் கமிட்டியின் காதுகளைக் கடித்தார். லொறிக் குள்ளே தங்கள் தேவைக்காக வாங்கி வைத்திருந்தவை களில் ஒன்றை எடுத்து நீட்டினான் சீரங்கன். ''ஹி...ஹி... இது என்னா பிச்சைச்கார பிஸ் நஸ்...நாலு பேரு இருக்கோம் ... இன்னொன்னு குடுங்க ... இல்லாட்டி காலையில் வாங்க...'' அவன் தலையை கால் இடுக்கில் போட்டுக் கொண்டான். பயந்து பயந்து அவனைத் தட்டி யெழுப்பி இன்னொன்றையும் கொடுத்தார்கள்.

''நேரத்தோடு பொணத்த தோட்டத்துக்கு கொண்டு போயி சேக்கணும்...போத்தல் போனா மயிராச்சி...!'' என்றான் சீரங்கன்.

நகர்ப்புற ஊழியர்கள் தோட்டப்புற ஊழியர்களை கொஞ்சம் இளக்கமாகத்தான் கணக்கெடுப்பார்கள். கள்ளம்

கபடம் ஒன்றுமறியாத அவர்களை ஏமாற்றித்தின்று ஏப்பமிட்டுவிடுவார்கள்! மீசைக்காரனின் சகபாடிகள் வந்து போத்தல்களை வாங்கிச் சென்றார்கள். மீசைக்காரன் அத்தோடு அவர்களை விட்டபாடில்லை... "இந்தப் பொணம் கொடல் அழுகிக் கெடக்கு...செத்து ரெண்டு நாளாச்சு...'எம்பாம்' பண்ணாட்டி நாளைக்கே நாறிப் போயிடும்!...நீங்க கொண்டு போயும் வேல இல்லே அதுக்கு இங்கேயே பொதைச்சிட்டுப் போகலாம்...விருப்பமுன்னா... சொல்லுங்க...நா நூறு ரூவ்வா குடுத்தா செஞ்சு தர்றோம்..." இதைக் கேட்ட எல்லோருக்கும் தலைமுடி நட்டமாக நிமிர்ந்தது. இவர்களும் கணக்கில்லாமல் குடித்து வெறியில்லாமலிருந்திருந்தால் பெரிய அதிகாரியிடம் கதைத்து பிணத்தை எடுத்துக் கொண்டு போயிருக்கலாம். அவர்கள் சவச்சாலை ஊழியர்களைவிட வெறியில் 'கசங்கி' போயிருக்கிறார்கள்...!

டிரைவர் தலைவரிடம் கதைத்தார் "முருகன் விட்ட வழி" என்று தலைவர் நா நூறு ரூபாவை நீட்டமுடியாமல் நீட்டினார்.

மீசைக்காரனின் இன்னொரு சகபாடி வந்து பிரேதப் பெட்டியை எடுத்துச் சென்றான்.

சொன்னபடி நேரத்தோடு பிரேதம் கிடைத்தது. சாராய வெறியில் அவர்களுக்கு "சந்தோஷம்" வேறு கொடுப்பதற்கு சீரங்கன் ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்தான். அவனை இழுத்து லொறிக்குள்ளே தூக்கிப் போட்டு கதவைச் சாத்தினார் டிரைவர்.

—லொறி தோட்டத்தை நோக்கியது. எல்லோரும் களைத்துப் போயிருந்தார்கள் கம்பளையில் வந்து இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு புறப்பட்டார்கள். லொறி உலப்பனை...நாவலப்பிட்டி என்று உறுமிக்கொண்டு சென்றது. நாவலப்பிட்டியில் டீசல் அடித்துக் கொண்டு கடியஞ்சேனையைக் கடந்தார்கள்.

கடியஞ் சேனையிலிருந்து தலவாக் கொல்லைக்கு வரும் பாதைதான் கொஞ்சம் செங்குத்தாகவும் வளைவு சுழிவாகவும் இருக்கும்.

பின்னால் வந்தவர்கள் பிரேதப் பெட்டியைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். சிலர் அரை தூக்கம் முக்கால் தூக்கமென்று வந்தார்கள். தலைவரும், துரைசாமியும், சீரங்கனும் முன் ஆசனத்தில் இருந்தார்கள். டிரைவருக்கு சிகரட் பற்ற வைத்து ஒத்தாசை செய்து கொண்டு வந்தான் சீரங்கன்.

தலைவர் துரைசாமிக்கு ஆறுதல் மொழி சொல்லிக் கொண்டு வந்தார். ''டேய் தொரை! ஒம்பொண்டாட்டி செல்லம்மா போயிட்டான்னு கவலைப்படாதே... ! ஒன் புள்ளைக்குட்டிகள... பாதுகாக்க செல்லம்மா தங்கச்சிய நான் கொண்டு வந்து வைக்கிறேன். ஒன் மாமனா.... எம்பேச்சுக்கு மறு பேச்சு பேசமாட்டாரு!''என்றார்.

என்னதான் நடந்தது...என்னதான் நடந்து கொண்டிருக்கிறதென்று தெரியாமல் வெறியிலே நீந்தி வரும்துரைசாமிக்கு தலைவரின் '' தங்கச்சியை கொண்டு வந்து வைக்கும் ஆறுதல் மொழி'' ஆறுதலாகவிருந்தது.

''என்னா இருந்தாலும் என் செல்லம்மா மாதிரி வருங்களா அண்ணே!'' வெறியில் கவலைப்படுகிறவர்களும் அழத்தான் செய்கிறார்கள். கண்ணீர் வடிக்காத அழுகை- 'பொலட்டு' அழுகை.

லொறி நல்லபடியாக தலவாக்கொல்லை வந்து சேர்ந்தது. இரவு மணி பதினொன்று எல்லோரும் இறங்கி 'வெளியத் தெருவ' போனார்கள்.

மந்திரத்தில் மாயாஜாலம் காட்டுவதுபோல சீரங்கன் ஒரு போத்தலை எடுத்து ரகசியமாக தலைவரிடம் காட்டினான். டிரைவர் தனக்கு வேண்டாமென்றார். தலைவரும்

சீரங்கன், துரைசாமி மூவரும் பின்னாலுள்ளவர்களுக்குத் தெரியாமல் 'கதையை' முடித்தார்கள்!

"இனி வீடு போயி பொணத்தை எறக்கும் வரை இந்த வெளையாட்டு கெடையாது" என்று போத்தலை இறுக்கி அடைத்து வைத்தான் மரணக் கமிட்டி சீரங்கன்.

வட்டக்கொடை...நாகசேனை...திஸ்பனை... பசுமலை மண் ராசி...அக்கரபத்தனை.

—தோட்டம் வந்து விட்டார்கள்.

லொறியைக் கண்டவர்கள் தீப்பந்தங்களை ஏந்திக் கொண்டு முன்னே ஓடி வந்தார்கள்.

—இரவு மணி பன்னிரண்டு.

செல்லம்மாவின் பிள்ளைகள் தலைவிரி கோலமாக அலறிக் கொண்டு ரோட்டுக்கு ஓடிவந்தார்கள். மாரியாயிக்கு கண்பார்வை குறைவு அந்த இரவில் நடக்கவும் சக்தி போதாது வாசலிலேயே நின்று கொண்டு மார்பில் அடித்துக் கொண்டு கத்துகிறாள். "ஏஞ்சீதேவி...! 'போயிட்டு வர்றேன் அத்தே'ன்னு போனியேடி...இப்போ...பொணமா வர்றியேடி...என் செல்லக் கிளியே..." என்று ஓங்கி ஓங்கி தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்தாள் அவளை ஆறுதல் படுத்தினார்கள்.

—வாசலில் பந்தல் போடப்பட்டிருக்கிறது.

பிரேதப் பெட்டியை வாசல் முன்னால் இறக்கி வைக்கிறார்கள். வெளியிடங்களில் இறந்தவர்களை வீட்டுக் குள்ளே கொண்டு வரமாட்டார்கள். இது தோட்ட வழக்கம்.

பந்தலில் ஐந்து, ஆறு 'கேஸ்' விளக்குகள் தொங்கு கின்றன.

பிரேதப் பெட்டியைத் திறந்து வைக்கிறார்கள் பிள்ளை கள் ஆவேசமாகக் கூக்குரல் இடுகின்றார்கள். மாரியாய்

கிழவியை பெட்டியருகே அழைத்து வருகிறார்கள். அவளை தள்ளிக் கொண்டு ''என்ன பெத்த ஆத்தா!'' என்று ஓலமிட்டு பெட்டிமேலே வந்து விழுந்தாள் மூத்தமகள். காலம் முழுவதும் அரை வயிற்றுக் கஞ்சியைக் குடித்துக் கொண்டு குடிகாரக் கணவனுக்கும் சோறு போட்டு, ஐந்தாறு மக்களையும் பட்டினி போடாமல் காப்பாற்றி வந்த அந்தக் காவல் தெய்வத்தை அள்ளி அணைத்துக் கொள்ள அவள் துடித்தாள். தன் தெய்வத்தின் முகத்தைத் தடவி முத்தம் கொடுக்கக் குனிந்தாள். குனிந்தவள் ''ஆ!'' அலறினாள். நாகத்தை மிதித்தவளாய் நடுநடுங்கினாள், ''இது எங்க ஆத்தா இல்லே...?'' என்று வானதிர மலைகள் இடிந்து விழ சத்தமிட்டாள்.

எல்லோரும் பெட்டியிலிருக்கும் பிணத்தைப் போய் பார்த்தார்கள். அவர்கள் அப்படியே அதிர்ச்சியடைந்து நின்றார்கள். பெட்டியிலிருக்கும் பிணம் செல்லம்மா இல்லை!

வேறு யாருடையதோ...அந்தப் பிணம்! மரணவீட்டை கவனித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் தலைவரைத் தேடினார்கள்; துரைசாமியைத் தேடினார்கள்... மரணக் கமிட்டியினர் ஐந்து பேர்களையும் தேடினார்கள். அவர்களோடு ஒத்தாசைக்குப் போனவர்களையும் தேடினார்கள். ஒருவரையும் காணவில்லை...?

எல்லோரும் லொறிக்குள்ளே குப்புறக் கிடந்தபடி தூக்கம்! கோபாவேசமடைந்த இளைஞர்கள் வாளி வாளியாக தண்ணீரை அள்ளி அள்ளி அவர்கள் மேல் ஊற்றினார்கள்.

தலைவரையும் மரணக் கமிட்டி சீரங்கனையும் இழுத்து வந்தார்கள். துரைசாமி 'பித்தா பித்தா' வென்று விழித்தான்.

''குடிகார நாய்களா...! வந்து பாருங்கடா...இது யாரு ஊட்டு பொணம்? எங்கடா செல்லம்மா? அவ செத்தாளா இருக்காளா...?'' சீரங்கனின் சட்டையைப் பிடித்து இழுத்தார்கள். அது 'டர் புர்' ரென்று கிழிந்தது. தலைவரைப் பார்த்தால்...அவர்தான் பொண்டாட்டியைப்பறி கொடுத்தவர் போல காட்சி கொடுத்தார்! துரைசாமியை இழுத்து ஓங்கி அறைந்தான், அவனதுதம்பி வேலு. வேட்டி ஒரு பக்கமும் செருப்பு ஒருபக்கமுமாகப்போய்விழுந்தான் துரைசாமி. இளைஞர்கள் வெறி கொண்டு துடித்தார்கள். மாரியாய் கிழவி சத்தம்போட்டாள், ''ஏய் சண்டாளப் பாவிகளா! சாராயத்த குடிச்சிட்டு இப்புடி காரியத்த கெடுக்கலாமா? வாங்கடா சாராயம் தாறேன்...?'' என்று கர்ஜித்தாள். எல்லோரும் தலையைக் கீழே போட்டாலும் அவள் பேசியதில் நியாயம் இருக்கிறது என்று மௌனமாக இருந்தார்கள்.

சலசலப்பு நிற்கவில்லை. எல்லோரும் குழம்பிய நிலையில் என்ன செய்வதென்று புலம்பிக் கொண்டிருக்கும் போது ஒரு போலீஸ் ஜீப் வண்டி வேகமாக பறந்து வந்து கொண்டிருந்தது. வண்டி லயத்துக்குள்ளே... மரண வீட்டுக்கே வந்து நின்றது! ஒரு போலீஸ் அதிகாரியும் இரண்டு சார்ஜன்ட்மார்களும் இறங்கி வந்தார்கள் கண்டி ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் செய்தி வந்திருப்பதாகவும், செல்லம்மாவின் பிரேதத்துக்குப் பதிலாக, வேறொரு பிரேதம் தவறுதலாக மாற்றி கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அந்த பிரேதத்தை உடனடியாக இப்போதே கண்டி ஆஸ்பத்திரியில் ஒப்படைத்து விட்டு, செல்லம்மாவின் பிரேதத்தைப் பெற்றுக் கொள்ளும்படியும் கேட்டிருக்கிறார்கள் என்று விபரமாக சொன்னார் போலீஸ் அதிகாரி.

பிரேதம் கொண்டு வரச் சென்றவர்களை அழைத்து, பிணத்தை சரிவர பார்க்காமல்— அடையாளங் காணாமல் எந்த மடையன் கொண்டு வந்தான் என்று வினவினார்.

போனவர்கள் எவருமே சவச்சாலைக்குள் நுழைந்து பிணத்தைப் பார்க்கவும் இல்லை; அடையாளம் காட்டவு மில்லை. சவச்சாலை ஊழியர்கள் கொடுத்த பிரேதத்தை இவர்கள் லொறியில் ஏற்றி வந்தார்கள் என்ற உண்மை மட்டும் விளங்கியது. போலீஸ் அதிகாரி பிரேதம் கொண்டு வந்தவர்களை மேலதிகாரி விசாரணைக்காக ஜீப் வண்டியில் ஏற்றினார்.

இளைஞர்கள், வேறு டிரைவரை வரவழைத்து கண்டிக்குப் போகும் பொறுப்பை ஏற்றார்கள்.

அந்தப் பிரேதம் மீண்டும் லொறியில் ஏற்றப்பட்டது.

□ □ □

(20-01- 1992)

# மலைகளின் மக்கள்

**மே**கமலைத் தோட்டத்துப் பக்கத்தில்தான் வானக் காடு தோட்டம் இருக்கிறது. வானக்காடு தோட்டத்துப் பக்கத்தில் தான் ஆனைத் தோட்டம் இருக்கிறது. மேகத்தை அந்த மலை சதா தழுவிக் கொண்டிருப்பதால் மேகமலை என்றும் வானத்தை அந்தக் காடு உரசிக் கொண்டிருப்பதால் வானக்காடு என்றும், யானையைக் கண்டு விரட்டியதால் ஆனைத்தோட்டம் என்றும் அந்தக் காலத்தில் தென்னாட்டுத் தமிழர்கள் இலங்கைக் காடுகளை அழித்துக் கொண்டிருக்கும் பொழுது வைத்த காரணப் பெயர்கள் தாம் இவைகள்...இந்தத் தோட்டங்களுக்குப் பக்கத்திலே ''மண்ராசி'' என்றும் ஒரு தோட்டம் உண்டு. மண்ணிலே ராசி கண்ட மக்கள் அப்படி மகுடமிட்டிருந்தார்கள்!

மண்ராசி தோட்டத்துக்கு நேரே உச்சியிலிருக்கும் மலைக்குப் பெயர்தான் ராமர் மலை. அந்த மலையருகில் தான் இன்று எட்டாம் நம்பர் மலை கவ்வாத்து... மலை யகத்து கொள்ளையழகுகளையெல்லாம் கூட்டி மெருகுக் காட்டிக் கொண்டிருக்கும் அந்த மலையிலுள்ள ஒரு வட்டப் பாறையில் மூன்று நான்கு அடி உயரத்தில் ஒரு சுற்கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்குள் ''ராமர் அந்த காலத்தில் எய்த அம்பு'' ஒன்றை நாட்டியிருக்கிறார்கள்! அதுதான் ராமர் கோவில்.

''இந்தக் கோவிலிருக்கும் உச்சிமலையிலிருந்து பார்த்தா ஈந்தியா தெரியுமோ...? ராமேஸ்வரம் கோயில் கோபுரம்

தெரியுமோ...?'' என்று அந்தக்காலத்தில் காடழிக்க வந்த தென்னாட்டு மக்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டார்களாம்...

அதே மலையில்தான் இன்றைய புதிய பரம்பரையினரும் காடு வெட்டிக் கொண்டிருக்கிறார்கள்...

வெள்ளி வார்ப்புகளால் கவ்வாத்து கத்திகள் பளபளவென மின்னுகின்றன. வெய்யில் ஏறுவதற்குள் பாதி வேலையை முடித்துக் கொண்ட தொழிலாளர்கள் சிவராமனைக் கூட்டத்தை ஆரம்பிக்கும்படி அவசரப் படுத்தினார்கள்.

சிவராமன் அந்தத் தோட்டத்தின் இளந்தலைவன். ஒரு முக்கிய கலந்துரையாடலை வேலைக்காட்டிலேயே சாசுவமாக நடத்திக் கொள்ள விரும்பினான். கவ்வாத்துக் காட்டுக்கு 'தேத்தண்ணி' கொண்டு வரும் சாக்கில், ஏழெட்டுக் குமரிப் பெண்கள் சரஸ்வதியோடு கொழுந்துக் காட்டிலிருந்து ராமர் மலைக்கு வந்திருந்தார்கள். சரஸ்வதி அந்தத் தோட்டத்து மாதர் தலைவி.

—கூட்டம் கூடிவிட்டது. கவ்வாத்துக் கங்காணி, ''கணக்கப்பிள்ளை—துரை யாரும் வருகிறார்களா'' என்று காவல் செய்து கொண்டிருந்தார். நாள் முழுக்க அவர் வாய் கிழிய சத்தம் போட்டுக் கொண்டிருந்தாலும் அவரும் தொழிலாளர் பக்கமேதான் இருப்பார்.

சிவராமன் சாயத்தைக் குடித்துக் கொண்டு, சீனியை நக்கியபடி பேசிக் கொண்டிருந்தான், ''வர்ற திங்கக்கிழம நம்ம தோட்டத்துல பத்து ஏக்கர் காணிய பிரிச்சு கிராமத்து சனங்களுக்கு குடுக்கப் போறாங்க இந்த நோக்கம் கிராமத்தையும் தோட்டத்தையும் 'ஒருங்கிணைப்பு' செய்து தோட்ட மக்களையும் கிராமவாசிகளையும் ஒத்துமை படுத்தப் போற திட்டமாம்!''

''அடி செருப்பாலே'' கூட்டத்தில் ஒருவன் கத்தினான்.

''உஸ்...சத்தம்! இது வேலக்காடு!'' சிவராமன் பேச்சைத் தொடர்ந்தான். நாங்க நெருக்கமாக வாழும் தோட்டப்புறங்கள் முழுவதும் இப்படியே திட்டம் போட்டு குடியேற்றம் செஞ்சுக்கிட்டுப் போனா...நாங்க சிதறி போயிடுவோம். குடியேறிய சனங்கள் வீடு...வாசல் கட்டி காணிகளுக்குச் சொந்தக்காரவங்களாகவும்—நாங்க மட்டும் காலாகாலமாக இந்தப்பிரதேசங்களில் கூலிகளாக லயத்துக்குள்ளேயே வாழ வேண்டிய நெலமையை அனுபவிக்க வேண்டியிருக்கு...எங்க பரம்பரை இலங்கைக்கு வந்து நூத்தி அம்பது வருசத்துக்கு மேலாச்சு. இன்னும் எட்டடி நெலங்கூட சொந்தமா கெடைக்கல்ல... காடழிக்க வந்த பாட்டன் பூட்டன் கட்டிய அதே மண் வீட்டுல தான் நாங்க தொடர்ந்து வாழ்றோம்...ஒழுகுற கூரைத்தகரத்தை மாத்திப் போட்டாலுமே... யாரைக் கேட்டுக்கிட்டு மாத்திப் போட்டேன்னு வேல நிப்பாட்டுறாங்க... எவ்வளவு கேவலமா நாம வாழ்றோம்!'' சிவராமன் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு தொழிலாளி குறுக்கிட்டான், ''அது சரி, காணி பிரிச்சுக் குடுக்க எவனாவது காணி அளக்க வந்தா...நாங்க என்னா செய்யுறது...?'' ''நீங்க கல்லு கில்லு அடிச்சிடக் கூடாது... கொழப்பம் உண்டாக்கக் கூடாது... அப்புறம் ராணுவம்... பொலிசு வந்து நம்மலை வாரிக்கிட்டுப் போயிடும்... நீங்க ரொம்பவும் பொறுமையாய் இருக்கணும். காணியை அளக்கவிடணும் கிராம வாசிக தோட்டத்துக்குள்ளே குடியேற வந்தா அவுங்களோட நீங்க மோதிக் கொள்ளக் கூடாது. அவுங்க நமக்கு எதிரி இல்லே....அவுங்களை உபசரிச்சு வரவேற்கணும்...'' சிவராமன் பேச்சை இன்னொருவன் இடைமறித்து, ''டேய் சிவராமா! நீ ரோங்கா...பேசுறே....! நீ இப்போ குடிச்சுக்கிட்டு பேசுறது சாராயத்தண்ணி இல்லே...சாயத் தண்ணி... நிதானமா பேசு!'' என்றான்.

சிவராமன் சிரித்தான். ' அவசரப்படாதீங்க மச்சான், மீதி கதையை இன்னிக்கி அந்திக்கு மாரியம்மன் கோவில்ல வச்சிக்குவோம்!'' என்றான். எல்லோரும் தத்தமது வேலைகளில் ஈடுபட்டார்கள். சரஸ்வதி, சிவராமனிடமிருந்து தேத்தண்ணி போத்தலை வாங்கிக் கொண்டு, சக தோழிகளோடு கொழுந்து மலைக்குத் திரும்பினாள்.

கூட்டம் இவ்வளவு சீக்கிரமாக முடிந்ததும், கங்காணியாரின் 'போய்க் கொண்டிருந்த உயிர்' மீண்டும் அவருக்குள்ளேயே நுழைந்து கொண்டது.

—மட்டத்துமலை.

வயசுக்கு வந்தப் பெண்ணைப்போல வசீகரமாய் காட்சியளிக்கிறது...

கவ்வாத்து வெட்டிய செடிகளில் அரும்பிப் புடைத்த இளந்தண்டுகளை மூன்று, நான்கு மாதங்களுக்குப் பிறகு வெட்டி மட்டப்படுத்துவார்கள்

அதிலே தளிர்விடும் கொழுந்துகள் மஞ்சளாய் கொழித்து காற்றிலே கொஞ்சி சிரிக்கும் போது பசியே மறந்து போகும் மட்டத்து மலையில் கொழுந்து ஆயும் பெண்கள் 'பாண்டித்தியம்' பெற்ற வேலைக்காரிகளாக இருப்பார்கள். அந்த மலை ஆறு மாதங்களுக்குப் பிறகு 'அழகு கொழுந்து மலை' என்ற பட்டமும் வாங்கும்.

சரஸ்வதி படக் படக்கென்று இயந்திரவேகமாய் தன் விரல்களை மேயவிட்டு கொழுந்துகிள்ளுகிறாள்பார்க்கின்ற தேயிலை நிரைகளிலெல்லாம் இதே வேகம் கொழுந்தெடுக்கும் வேகத்திலேயே சரஸ்வதி ஒரு குட்டி மீட்டிங் போட்டுக் கொண்டிருந்தாள். கொளுந்துக் கங்காணி ஒன்றும் பேசாமல் நிரைக்குள்ளேயே வந்து கொண்டிருந்தார் அந்தக் காலத்துக்கங்காணிகள்மாதிரி வாயில் வந்தபடி இந்தக் காலத்தில் பேசமுடியாது! குமரிக்குட்டிகள்கங்காணியின் நாக்கை அறுத்துவிடுவார்கள்!

''வர்றதிங்ககிழம நம்ம தோட்டத்துக்குள்ள கொலனி ஆளுங்களுக்கு காணி அளக்க வர்றாங்களாம்'' சரஸ்வதி ஆரம்பித்தாள். ''அளந்துக்கிட்டுப் போறானுங்க நமக்கு என்னா?'' பார்வதி ''அவன் அளந்துக்கிட்டுப் போனா... நீ நக்கிக்கிட்டுப் போகணும்!'' —பொட்டு. ''சரஸ்வதியக்கா! நீங்க கதைக்கு வாங்க''—லெச்சுமி கொழுந்துக் காட்டு பேச்சு இப்படித்தான் நடக்கும்! சரஸ்வதி தொடர்ந்தாள், 'நம் தோட்டத்துல பத்து ஏக்கர் காணி எடுத்து ஆளுக்கு இருவது பர்ச்சஸ் வீதம் எம்பது குடும்பங்களுக்கு குடுக்கப் போறாங்க. இந்த தோட்டத்துல புதுசா எம்பது குடும்பங்க வரப் போறாங்க. சரஸ்வதி முடிக்குமுன்பே ''அடி ஆத்தே! கொலனி கூட்டம் தோட்டத்துக்குள்ள வந்தா கொழப்பம் உண்டாகுமே... வழிப்பறிதிருட்டு நடக்குமே'' என்று பயந் தாள் மாரியாய்.

''அதிபத்தி பேசத்தான் இன்னக்கி மாரியம்மன் கோவில்ல 'அவரு' கூட்டம் போடுறாரு...மாரியம்மன் கோவில்ல அந்திக்கு ஆறுமணிக்கு கூட்டம்...''

—'அவரு'...சரஸ்வதி சிவராமனை தன் மனசுக்குள்ளே பூட்டி வைத்திருக்கிறாள்! அவனது அழகு மாத்திரமல்ல அந்த அழகுக்கேற்ற அறிவும் தான் பிறந்து வளர்ந்த சமுதாயத்தின் விடிவுக்காக அவன் போராட முன்வந்திருக் கும் உணர்வுகள் அவளை ஆதர்ஷித்தன.

**மா**ரியம்மன் கோவில்—

உள்ளே ஜெகஜோதியாக மின்சார வெளிச்சம் பளிச் சிட்டுக் கொண்டிருக்கிறது. கோவிலைச்சுற்றியுள்ள லயங் கள் இருளுக்குள் மூடிக் கிடந்தன. கோவிலுக்கு மின்சாரம் வாங்கிக் கொடுத்தவனும் சிவராமன் தான் 'அம்மன்கோவி லுக்குதுரைபங்களாவிலிருந்து'கனெக்ஷன்'எடுத்தாபங்களா வுக்கு 'கரண்டு' கொறைஞ்சு போகும்...ஐஸ் பெட்டி சூடுதண்ணி பொய்லர் எல்லாம் கெட்டுப் போகும்'' என்று நாயாய் குரைத்த பெரிய கிளாக்கர் தொழிலாளர்ஜெயித்த

பிறகு தனது பெயரில் 'கந்தசாமி கிளாக்கர் உபயம்'' என்று எழுதி ஒரு 'டியூப் பல்ப் பிரசண்ட் பண்ணியிருந்தார்.

சிவராமன், தாய்மரத்தையே கொல்ல வந்திருக்கும் அந்த புல்லுருவிகளையெல்லாம்நினைத்துவேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

கோவிலில் கூட்டம் நிறைந்து விட்டது அந்த தோட்டத்து இரண்டு டிவிஷன் ஆட்களும் வந்திருந்தனர். அவர்கள் பல தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள்.

சிவராமன் பேசத் தொடங்கினான் ''கிராமவாசிகள் தோட்டத்துக்குள்ளே குடியேறியதும் பஸ் ரோட்டு வெட்டப் போறாங்க...கடைவீதி தொறக்கப் போறாங்க... அப்புறம் தபால் கந்தோர் ஆஸ்பத்திரி, மின்சாரம் எல்லாம் வரப்போகுது...'' சிவராமனின் பேச்சை ஒருவன் நிறுத்தினான் ''அப்போ இவ்வளவு காலமா இந்த வசதிகள் ஏன் எங்களுக்கு செஞ்சு குடுக்கல்லே...?'' இந்த சனங்க வந்தப் பொறகு தான் போஸ்ட்டாப்பீசு... ஆஸ்பத்திரி எல்லாம்... இவ்வளவு காலமா எங்களுக்கு வருத்தம் வந்துட்டா... சுடுகாடுதான் எங்களுக்கு பெரியாஸ்பத்திரி... இந்த திட்டங்களுக்கு நாங்க எடம் குடுக்க மாட்டோம்'' அவன் உணர்ச்சி வசப்பட்டான். அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த இளம் பெண்கள் எல்லோரும் எழும்பி நின்று, ''அந்த திட்டத்துக்கு நாங்க எதிர்ப்பு காட்டுவோம்.'' என்று ஆவேசமாக சத்தம் செய்தார்கள்.

''ஆண்கள் துடிப்பதை விட பெண்கள் துடிக்கின்ற காலமாற்றத்தைக்காணுகின்றோம்! காலத்துக்கு! வணக்கம்'' என்றான் சிவராமன். வளைக்கரங்களின் ஓசை வானத்தைப் பிளந்தது

சிவராமன் மேடைப் பேச்சு மொழியிலேதொடர்ந்தான் ''இந்த தோட்டத்துப் பாரம்பரிய நிலத்துக்குச் சொந்தக்காரர் நாங்கள்; இருந்தும் ஒரு கோழிக் கூடு கட்டுவதற்கு கூட மண் சுவர் எழுப்ப முடியாதவர்களாக இருக்கின்றோம் சொந்தமாக சுவர் எழும்பும்வரை இந்த மண்ணின் சொந்தக்காரர்களாக முடியாது.'' சிவராமனின்

பேச்சில் இன்னொரு தடைவிழுந்தது. "எட்டு மணியாச்சு; பசி எடுத்திருச்சு...பெரிய வெளக்கம் தேவையில்ல...இந்த குடியேற்றத்தை எப்படி தடுப்பது என்று சொன்னால் மட்டும் போதும்," என்று இன்னும் ஒரு இளைஞன் கோபமாகப் பேசினான். அவனைத் தொடர்ந்து ஒரு வயது போன பெரியவர் கூட ஆத்திரமாகக் கதைத்தார். "கிராம வாசிங்க... நாட்டாளுங்க... கோட்டத்துக்குள்ள நொழையிறதை தடுக்க எதையும் செய்ய நாங்க தயார்" என்றார்.

சிவராமன் நிதானமாகப் பதில் சொன்னான். "நாங்கள் எந்தக் காரியத்திலும் உணர்ச்சி வசப்பட்டும் முரட்டுத்தனமாகவும் இறங்கி, இறங்கி பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளுகின்றோம். ஒரு பிரச்சினைக்காக இன்னொரு பிரச்சினையை உண்டாக்குவதுதான் நமது போராட்ட லட்சணமாகும்." என்று கொஞ்சம் கடுமையாகப் பேசத் தொடங்கினான். "தோட்டத்துக்குள்ளே நுழைய வரும் புதுக்குடிவாசிகளைத் தடுப்பதற்கு வன்முறையில் இறங்கி விடக்கூடாது. அவர்கள் இந்த நாட்டு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் முரட்டு நடவடிக்கையில் இறங்கினால் அது 'இனவாதமாக' திரிக்கப்பட்டு இனக்கலவரங்களாக உருவெடுத்துவிடும். கோட்டங்களில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளிலெல்லாம் 'ஆமி கெம்ப்' போடப்பட்டிருப்பதை நீங்கள் உணர வேண்டும்."

இடையில் ஒருவன், "ஆமா! இனிமே நாங்க கத்தி, கோடாளி, முள்ளு, மம்பெட்டின்னு விவசாய ஆயுதங்களக் கூட வேலக்காட்டுக்கு சொமக்க முடியாது...! 'ஆயுதம் தாங்கிய கோஷ்டி'ன்னு ஆமிக்காரனுங்க எங்கள வாரிச் சுருட்டிக்கிட்டுப் போயிடுவானுங்க..." அவன் வார்த்தையில் சிரிப்பு இருந்தாலும் சிந்தனையும் இருந்தது....

சிவராமன் பொதுக்கூட்டத்தை முடித்தான். அவன் சில முக்கியமானவர்களிடம் சில முக்கிய விசயங்களைக் கதைத்தான். "தோட்டத்துக்குள்ளே கிராமவாசிகளுக்கு

காணி வழங்கும் அந்த நாளில் அவர்களை அன்பு வழியில்— அகிம்சை வழியில் வரவேற்று அவர்களோடு சேர்ந்து வாழ முயற்சிப்போம்!'' என்று எல்லோருக்கும் கரம் கூப்பினான்.

அவனது ஆழமான வார்த்தைகளில் நிறைய கனம் இருந்தது... அம்மன் கோவில் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

இன்று அந்த திங்கட்கிழமை.

அந்த ஆற்றங்கரைமலையருகே அழகான நெடுஞ்சாலை. சாலை வழியே ஐந்து, ஆறு உல்லாசமான ஜீப் வண்டிகள் வந்து நின்றன. ஜிப்பா, வேட்டி அணிந்த சிலர் கல்யாண மாப்பிள்ளைகளைப் போல வண்டிகளிலிருந்து இறங்கினார்கள். அவர்களின் முன்னும் பின்னும் காக்கிச் சட்டைக்காரர்கள் காவல் நின்றார்கள், வேட்டிக் காரர்கள் மந்திரிமார்களாக இருப்பார்கள்...

வண்டிகள் மரநிழல்களில் ஒதுங்கின.

ஆற்றங்கரைகளோடு நீண்டிருந்த அந்த பத்து ஏக்கர் தேயிலை நிலம் பச்சைக்கம்பளம் போர்த்தி பசுமையாய் படுத்திருந்தது. கரையோரங்களில் 'யூக்கலிப்டஸ்' மரங்கள் (புதிய கருப்பந்தைல மரங்கள்) நீண்டு நிமிர்ந்து நிலவைப் பிடிப்பதுபோல் வளர்ந்து நின்றன. அவைகளின் பிரதிபிம்பங்கள் தண்ணீருக்குள் தலைகீழாகப் படம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தன.

...ஆறு ஆட்டம் போடாமல் அமைதியாக நகர்ந்து கொண்டிருக்கிறது...

நெடுஞ்சாலையில் ஒரு ஜிப்பாக்காரர் கையை நாலா பக்கமும் நீட்டி கதைத்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் ஊர்வலம் வருவதுபோல பெரிய பஸ் வண்டிகள் அந்த இடத்தில் வந்து நின்றன. பஸ் வண்டியிலிருந்து ஆண்களும் பெண்களுமாய் இறங்கினார்கள். அவர்கள் யாவரும் சிங்கள மக்கள்-அவர்கள் யாவரும் கிராமவாசிகள். அவர்கள் ஏழைகளாகத் தெரிந்தார்கள்.

நெடுஞ்சாலையில் சுறு சுறுப்பாக இங்குமங்குமாக ஓடிக்கொண்டிருந்த ஒரு ஜிப்பாக்காரர் அந்த மக்களை வரிசைப்படுதினார். அவர்கள் முன்னிலையில் ஒரு மதகுரு ஒரு கவியைப் படித்துக் காட்டி விளக்கமும் சொல்லிக் கொண்டிருந்தார்.

''கண்டிய மக்களின் பாரம்பரிய நிலங்கள் மீண்டும் அவர்களுக்காக மீட்டெடுக்கப்படுகின்றன...'' கவியின் சாராம்சம் இது...

வெள்ளைக்காரர்கள் கோப்பி, தோயிலை உண்டாக்கிய காலத்தில் கண்டி பிரதேசங்களில் மட்டுமே நிகழ்ந்த உண்மைகளாகும்.ஆனால் இலங்கையின் உச்சிமலைநாடு கொடியவன விலங்குகளை உள்ளடக்கிய இயற்கை காடுகளாகும். அந்தக் காடுகளை அழித்து கழனி கண்டவர்கள் தென்னாட்டுத் தொழிலாளர்கள். இங்கே வயல்களும் இருந்ததில்லை... விவசாயிகளும் வாழ்ந்ததில்லை. சாதகமாக உருவாக்கிய இவர்களின் வரலாற்றில் எதுவித சான்றுகளுமே கிடையாது! அவையெல்லாம் வெறும் அபத்தமாகும்.

ஒரு ஜிப்பாக்காரர் பட்டியலை வாசிக்க இன்னொரு ஜிப்பாக்காரர் காணி இலக்கத் தகடுகளை வழங்கினார். கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்

இலக்கங்களை வாங்கியவர்கள் காணி மாயம் காட்டு பவர்களின் பின்னால் போய்க் கொண்டிருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சிகளை அந்த உச்சிமலையிலிருந்து மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சுமந்து கொண்டிருக்கும் கொழுந்துக் கூடைகளை விட அவர்களின் மனதில் சுமத்தப்பட்ட பாரங்கள் கொடுமையாகக் கனத்தன.

**எ**திர்பார்த்த எந்தவொரு எதிர் நடவடிக்கையும் அந்த மண்ராசி தோட்ட மக்களால் நடைபெறவில்லை யென்பதை அறிந்த பாதுகாப்புப் படையினரும் மந்திரி பிரதானிகளும் மகிழ்ந்து போனார்கள்.

அவர்கள் வாகனங்களுக்குள் நுழைந்தார்கள். அவைகள் அழகாக ஒரே நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக ஊர்ந்து சென்றன.

—காணி வழங்கிய பின்னர்.

வெள்ளி முளைத்து, வளர்பிறை தோன்றி, பூரண நிலவும் பூத்தது.

அந்த ஏழு நாட்களுக்குள் என்னவெல்லாமோ நடந்தன. அவை யாவும் ஒரு புதிய கோணத்தில் தயாரித்த ஒரு சினிமா படத்தைப் போல மர்மங்கள் நிறைந்திருந்தன!

தோட்டத் தொழிலாளர்கள் குடியேறிய கிராமவாசிகளுக்குத் தளங்கள் வெட்டிக் கொடுத்தார்கள். அவர்கள் குடிசை கட்டுவதற்கு மண்குழைத்து சுவர்கள் எழுப்பிக் கொடுத்தார்கள். கூரை வேய்வதற்கு கிராமவாசிகள் தங்கள் 'நாட்டிலிருந்து' (சிங்கள மக்கள் வாழும் கிராமங்களை தோட்ட மக்கள் ''நாடு'' என்றே, அழைப்பார்கள்) தென்னை ஓலை பற்றைகள் கொண்டு வந்தார்கள். தோட்டத் தொழிலாளர்கள் கூரை வேய்ந்து கொடுத்தார்கள். தொழிலாளர்களின் அன்பையும், பாசத்தையும் ஒத்துழைப்பையும் பெற்ற அந்த கிராம வாசிகள் அவர்களுக்கு என்ன கைம்மாறு செய்ய வேண்டுமென்று துடித்தார்கள்.

அவர்கள் இவர்களுக்கு எதையும் செய்யும் மனநிலையில் இருந்தார்கள். அப்பொழுதுதான் சிவராமன் அவர்களிடம் அப்படி கேட்டான். ''நாங்கள் ஒரே இரவில் தளம் வெட்டி-சுவர் எழுப்பி—கூரை போடுவதற்கு உங்கள் ஒத்துழைப்பு தேவை'' என்றான். அவர்கள் யோசித்தார்கள். இந்த பிரதேசத்தில்—இந்த மக்களோடு சேர்ந்துதான் வாழ வேண்டும். இங்கு தனித்து வாழ முடியாது என்பதை உணர்ந்தார்கள்.

அவர்கள் மண்வெட்டிகளைச் சுமந்து கொண்டு நிலங்களைக் காட்டும்படி கேட்டார்கள்.

...ஓர் இனிய காற்று அவர்களைத் தழுவிச் சென்றது... புதுகுடிவாசிகளும் பழையத் தொழிலாளர்களும் ஒன்று கலந்தனர்...அந்த பூரண நிலவில்—'போய' தினத்தில் அந்த வேலை முழுமை பெற்றது.

லயன்களிலிருந்த தொழிலாளர்கள் யாவரும் புதிய தேயிலை நிலத்திலுள்ள தங்கள் குடிசைகளுக்கு குடி புகுந்தார்கள். அவர்களை அண்டி வாழ்ந்த நாய்களும் கோழிகளும், ஆடு மாடுகளும் புதிய நிலத்துக்கு வந்து சேர்ந்தன.

—லயன்கள் வெறிச்சோடிக் கிடந்தண...அவைகளுக்கு இனிமேல் நிரந்தர பென்ஷன்! ஆமாம்; அவைகளின் வரலாற்று வயது நூற்றி அறுபத்து ஐந்து வருசங்களாகும்!

பொலீஸ் படையினரும் ராணுவப்படையினரும் அந்த ஆற்றங்கரை யோரத்து நெடுஞ்சாலையில் வந்து நின்றார் கள். அரச அங்கீகாரம்—சம்பிரதாயச் சடங்கு...எதிலுமே சம்பந்தப்படாத அந்த குடிசைகளை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருந்தது.

''படைகள் தலையிடக் கூடாது; தோட்டங்களுக்குள் நுழையக் கூடாது...நிதானமாகச் செயல்படுவோம்...''

**கா**ற்றுக்கும் கடும் மழைக்கும் அசைந்து கொடுக்காத மலைக்குன்றுகள் வீரமுடன் நிமிர்ந்து நின்று கொண் டிருந்தன. காலவோட்டத்திலும் தங்கள் உருவை அழித்துக் கொள்ளாத அந்த மலைகளின் மக்கள் அங்கே உயரத்தில் வீசிய பூந்தென்றலை சுவாசித்துக் கொண்டிருந்தார்கள்.

□ □ □

(25-01-1992)

# ஆசிரியரைப் பற்றி...

திரு. மு. சிவலிங்கம் மலையகக் கலை இலக்கியத் துறையில் பிரபல்யமான ஒருவராவார். அறுபத்திரண்டு களில் எழுதத் தொடங்கிய இவர் இருபத்தைந்து சிறுகதைகளுக்கு மேலாக எழுதியுள்ளார். நிறைய நாடகங்கள் எழுதி மேடையேற்றியுள்ளார்.

மலையக இலக்கியத்துறையில் தனக்கென ஒரு தனிப் பாணியை அமைத்துக் கொண்டு எழுதுபவர் இவர் ஒருவரேயாவர். தமிழகத்து நகைச்சுவை எழுத்தாளர் களான நாடோடி, சாவி, சோ, ஆகியோரைப் போன்று நகைச்சுவை ஆக்கங்கள் மலையகத்தில் நிறையப் படைத்துள்ளார். இவரது நடைச்சித்திரங்கள் இலங்கைத் தமிழ்த் தினசரிகளில் விரும்பிப் பிரசுரிக்கப் பட்டு வந்துள்ளன.

திரு. மு. சிவலிங்கம் நிறைய கவிதைகளும் எழுதியுள்ளார். ஆங்கிலக் கவி ருட்யார்ட் கிப்ளிங்கின் ஆனால்.... [Rudyard Kiplink – 'IF'] என்ற கவிதையின் தமிழாக்கம் பிரபல்யமானது. வீரகேசரி தமிழ்த் தினசரி நடாத்திய மலையகச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற இவரது "இதுவும் ஒரு கதை" "கதைக் கனிகள்" என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

வீரகேசரி பத்திரிகை ஸ்தாபனத்தில் பத்திரிகை யாளனாக தொழிலை ஆரம்பித்த இவர் சிறந்த கேலிச்சித்திரக் காரராகவும் (Cartoonist) விளங்கினார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொழிற் சங்கத்தின், "ஜனநாயக தொழிலாளி" பத்திரிகையின் ஆசிரியராகவும், மலையக இளைஞர் முன்னணியின் "முன்னணி" பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமை புரிந்துள்ளார்.

மலையகத்தின் பிரபல எழுத்தாளர் திரு. தெளிவத்தை ஜோசப் அவர்களின் "புதியகாற்று" திரைக்கதையை படமாக்குவதில் தயாரிப்பாளர் திரு. வி.பி. கணேஷனுக்கு துணைபுரிந்து, அப்படத்தில் முக்கிய பாகம் ஏற்று நடித்துள்ளார். பத்திரிகையாளன் — தொழிற்சங்கவாதி — சினிமா கலைஞன் — அரச பாடசாலை ஆசிரியன் என பல துறைகளில் ஈடுபட்டு வந்த திரு. சிவலிங்கம் தற்பொழுது அரசாங்க பெருந் தோட்டத்தில் கணக்காளராக தொழில் புரிந்து வருகிறார். திருமணமான இவருக்கு மூன்று மகன்மார்கள் உள்ளனர்.

— மாத்தளை கார்த்திகேசு